வெளியீடு 6-5-2004

Issued 6-5-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, பிப்ரவரி 9, 2004—தொகுதி 56—எண் 1**

**Monday the 9th February, 2004—Volume 56—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

319/2004
17 ... 2004
9-2-2004

உள்ளடக்கம்

பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் iii - vii

Governor and Council of Ministers ix - xii

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xiii - xvi

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xvii - xxvii

**1. இரங்கல் குறிப்பு—**

முன்னாள் உறுப்பினர் மறைவு 1

**2. அறிக்கைகள் அளித்தல்—**

(அ) பொதுக் கணக்குக் குழு 2

(ஆ) பொது நிறுவனங்கள் குழு 2

**3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்**—தொடர்ச்சி 2 - 5, 6 - 145

* திரு. எச்.எம். ராஜு 2 - 3

திரு. கோவை தங்கம் 3, 4

திரு. கா. கந்தசாமி 3 - 4

திரு. என். நன்மாறன் 4 - 5

மாண்புமிகு திரு. அ. அருணாசலம் 6 - 16

திரு. லா. சந்தானம் 16 - 25

திரு. கே.என். இலட்சுமணன் 25 - 29, 96, 97

| | பக்கங்கள் |
|---|---|
| **3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்**—தொடர்ச்சி | |
| திரு. ஜி. பழனிசாமி | 29-54, 78-79, 90, 92, 141 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 55-72 |
| திரு. ஜி.கே. மணி | 72-94, 113, 134 |
| * திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 3, 49, 50-53, 56, 58, 94-122, 140 |
| * திரு. துரைமுருகன் | 33-35, 78, 98, 104, 118, 119, 122-144 |
| **4. தகவல் கோரல்**— | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் | 5-6 |
| **5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— | 145-146 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர் – திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

   பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

3. **நிதி மற்றும் உணவு அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

   நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

4. சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

8. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

9. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

...பகம்
226057.
...600 008
...கம்



10. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

11. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

12. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

13. ஊரகத் தொழில் துறை அமைச்சர் ,, **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

14. வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

வணிக வரிகள் மற்றும் கூட்டுறவு.

15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் ,, **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதரன்**

கால்நடை பராமரிப்பு.

16 வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு.

17. **வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

18. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** ,, **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

19. **பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

20. **கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

21. **மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

22. **சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

23. **வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

24. **செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம். செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

25. **விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

-------

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| **1. Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| **2. Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| **3. Minister for Finance and Food** | .. **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies, Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics. |
| **4. Minister for Law, Information Technology and Electricity** | .. **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts, Information Technology, Electricity and Non-conventional Energy Development. |
| **5. Minister for Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

6. **Minister for Education** .. **The Hon. Thiru S. Semmalai:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

7. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

8. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities

9. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

14. **Minister for Commercial Taxes and Co-operation** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Commercial Taxes and Co-operation.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Labour** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

20. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

21. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

22. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.

23. **Minister for Agriculture** .. **The Hon. Thiru P. Annavi:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

24. **Minister for Information & Publicity and Local Administration** .. **The Hon. Thiru K.P. Anbalagan:**

Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural-indebtedness, Urban and Rural Water Supply.

25. **Minister for Sports and Youth Welfare** .. **The Hon. Thiru Inbathtamilan:**

Sports and Youth Welfare.

------



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள் #

*திரு. சி. சிவசாமி*

*திரு. வி. ஜெயராமன்*

*திருமதி சி.எம். சூரியகலா*

*திரு. லா. சந்தானம்*

*டாக்டர் தே. குமாரதாஸ்*

*திரு. செ.கு. தமிழரசன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

*# 5—2—2004 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

| | |
|---|---|
| திரு செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | - பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. ரவிச்சந்திர ராஜ், பி.ஏ., | - குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |

---



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | - | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | - | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | - | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | - | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | - | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | - | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | - | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | - | புவனகிரி |
| 10 | அழகம்மாள், திருமதி வி. | - | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | - | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | - | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | - | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | - | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | - | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | - | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | - | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | - | வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. - செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (
57. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
64. கார்த்தி, திரு. மு. - சேலம்-2
65. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)

67. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
68. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
70. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
71. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
73. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
74. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
75. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
76. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
77. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
79. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
80. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
81. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
82. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
84. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
85. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
86. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
87. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
88. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆவா.)
89. சாமி, திரு. ஆர். - மேலூர்
90. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்



91. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
92. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
93. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
94. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
96. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
97. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
98. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
99. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
100. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
101. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
102. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
110. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்

| | | |
|---|---|---|
| 114. | சேகர்பாபு, திரு. பி.கே. | - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 115. | சோமசுந்தரம், திரு. வி. | - உத்திரமேரூர் |
| 116. | ஞானசேகரன், திரு. சி. | - வேலூர் |
| 117. | ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. | - திருநாவலூர் |
| 118. | தமிழரசன், திரு. செ.கு. | - நன்னிலம் (செ.வ.) |
| 119. | தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி | - மேல்மலையனூர் |
| 120. | தம்பிதுரை, டாக்டர் மு. | - பர்கூர் |
| 121. | தவமணி, திரு. க. | - திருவிடைமருதூர் |
| 122. | தளவாய் சுந்தரம், திரு. ந. | - கன்னியாகுமரி |
| 123. | தனபால், திரு. ப. | - சங்கரி (செ.வ.) |
| 124. | தாமோதரன், திரு. எஸ். | - விருதுநகர் |
| 125. | தாமோதரன், திரு. செ. | - கிணத்துக்கடவு |
| 126. | தாமோதிரன், திரு. ப.வெ. | - பொங்கலூர் |
| 127. | திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | - பேராவூரணி |
| 128. | திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். | - காஞ்சிபுரம் |
| 129. | துரைமுருகன், திரு. | - காட்பாடி |
| 130. | துரைராஜ், திரு. சி. | - சேடப்பட்டி |
| 131. | தென்னரசு, திரு. கே.எஸ். | - ஈரோடு |
| 132. | நடராஜன், திரு. அ. | - குத்தாலம் |
| 133. | நடராஜன், திரு. எஸ். | - நாட்ராம்பள்ளி |
| 134. | நடராஜன், திரு. பி.கே.டி. | - ஆத்தூர் |
| 135. | நடராசன், திரு. வது. | - இளையான்குடி |
| 136. | நயினார் நாகேந்திரன், திரு. | - திருநெல்வேலி |



| | | |
|---|---|---|
| 137. | நரசிம்மன், திரு. பி.எம். | - பள்ளிப்பட்டு |
| 138. | நளினி மனோகரன், திருமதி | - போளூர் |
| 139. | நன்மாறன், திரு. என். | - மதுரை கிழக்கு |
| 140. | நீலகண்டன், திரு. ப. | - ஆற்காடு |
| 141. | நீலமேகவர்ணம், திரு. லெ. | - சாத்தான்குளம் |
| 142. | நெப்போலியன், திரு. து. | - வில்லிவாக்கம் |
| 143. | பச்சைமால், திரு. தா. | - குளச்சல் |
| 144. | பதினெட்டாம்படியான், திரு. க. | - முதுகுளத்தூர் |
| 145. | பரணிகுமார், திரு. பா. | - திருச்சிராப்பள்ளி-1 |
| 146. | பரிதி இளம்வழுதி, திரு. | - எழும்பூர் (செ.வ.) |
| 147. | பவானி கருணாகரன், திருமதி கே. | - அரக்கோணம் (செ.வ.) |
| 148. | பழனிசாமி, திரு. கே.எஸ். | - பெருந்துறை |
| 149. | பழனிசாமி, திரு. ஜி. | - திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 150. | பழனியப்பன், திரு. பெ. | - மொரப்பூர் |
| 151. | பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | - குறிஞ்சிப்பாடி |
| 152. | பன்னீர்செல்வம், திரு. ஓ. | - பெரியகுளம் |
| 153. | பாண்டுரங்கன், திரு. கே. | - அணைக்கட்டு |
| 154. | பாப்பாசுந்தரம், திரு. அ. | - குளித்தலை |
| 155. | பாரமலை, திரு. க. | - மானாமதுரை (செ.வ.) |
| 156. | பாரிமோகன், திரு. கி. | - தருமபுரி |
| 157. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | - கடலாடி |
| 158. | பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். | - தொண்டாமுத்தூர் |

159. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
160. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
161. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
162. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
163. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
164. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
165. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
166. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
167. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
168. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
174. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
176. மணி, திரு. டி. - விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
178. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
179. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
180. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி
181. மில்லர், திரு. அ. - கூடலூர்



182. முரளிதரன், திரு. கே.வி. - தளி
183. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
184. முருகேசன், திரு. ஆ.கு. - ஆத்தூர்
185. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
186. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
187. மோகன், திரு. ப. - சின்னசேலம்
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்
192. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
193. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
194. ராமசாமி, திரு பி.சி. - மொடக்குறிச்சி
195. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
196. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
197. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி
198. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
199. ராஜா, திரு. எச். - காரைக்குடி
200. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
201. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
202. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்
204. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு

| | | |
|---|---|---|
| 205. | லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | - அரவக்குறிச்சி |
| 206. | வடிவேல், திரு. ஆர். | - வாணியம்பாடி |
| 207. | வளர்மதி, திருமதி பா. | - ஆலந்தூர் |
| 208. | வளர்மதி ஜெபராஜ், திருமதி | - மதுரை மேற்கு |
| 209. | வள்ளல் பெருமான், டாக்டர் பி. | - காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 210. | வாசுதேவன், திரு. பெ. | - மதுராந்தகம் |
| 211. | விசுவநாதன், திரு. இரா. | - நத்தம் |
| 212. | வில்வநாதன், திரு. இரா. | - சோளிங்கர் |
| 213. | வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | - பூங்கா நகர் |
| 214. | விஜயபாஸ்கர், டாக்டர் சி. | - புதுக்கோட்டை |
| 215. | விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | - பனமரத்துப்பட்டி |
| 216. | வீரபாண்டியன், திரு. ஜெக. | - மயிலாடுதுறை |
| 217. | வெங்கடாசலம், திரு. அ. | - ஆலங்குடி |
| 218. | வெங்கடாஜலம், திரு. செ. | - சேலம்-I |
| 219. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - வேதாரண்யம் |
| 220. | வேலுசாமி, திரு. செ.ம. | - பல்லடம் |
| 221. | வேலு, திரு. எ.வ. | - தண்டராம்பட்டு |
| 222. | வேல் முருகன், திரு. தி. | - பண்ருட்டி |
| 223. | வைதியலிங்கம், திரு. மீ.அ. | - தாம்பரம் |
| 224. | வைத்திலிங்கம், திரு. ஆர். | - ஒரத்தநாடு |
| 225. | ஜீவானந்தம், திரு. இரா. | - நாகப்பட்டினம் |
| 226. | ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | - ஆரணி |



| | | |
|---|---|---|
| 227. | ஜெயக்குமார், திரு. கு. | - நாமக்கல் (செ.வ.) |
| 228. | ஜெயக்குமார், திரு. டி. | - இராயபுரம் |
| 229. | ஜெயராமன், திரு. வி. | - பொள்ளாச்சி |
| 230. | ஜெயலலிதா, செல்வி ஜெ | - ஆண்டிப்பட்டி |
| 231. | ஸ்டாலின், திரு. மு.க. | - ஆயிரம் விளக்கு |
| 232. | ஹக்கீம், திரு. எம்.ஏ. | - மதுரை மத்தி |
| 233. | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | - திருவட்டாறு |
| 234. | வெற்றிடம் | - மங்களூர் (செ.வ.) |
| 235. | சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | - (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**தை 26, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2035**

**2004 பிப்ரவரி 9, திங்கட்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே*
*ஒப்புரவின் நல்ல பிற"*

பிறர்க்கு உதவிடும் பண்பாகிய "ஒப்புரவு" என்பதைவிடச் சிறந்த பண்பினை இன்றைய உலகிலும், இனிவரும் புதிய உலகிலும் காண்பது அரிது.

*[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. கூ.ச. முருகேசன் அவர்கள் 4-2-2004 அன்று மறைவுற்றதை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. முருகேசன் அவர்கள் திருவெறும்பூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1977 முதல் 1980 வரை நல்லமுறையில் பணியாற்றியுள்ளார். இம்முன்னாள் உறுப்பினரின் மறைவால், அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. சி. சண்முகவேலு

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்தி எட்டாவது அறிக்கையை குழுத் தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.எஸ். ரமணீதரன்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்தி ஐந்தாவது முதல் நூற்று நாற்பத்தி ஒன்றாவது வரையிலான 7 அறிக்கைகளை குழுத் தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு வழிமொழியப்படவேண்டும். திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அளித்துள்ள கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன்:

"1. நீலகிரி மாவட்டத்தில் பசுந்தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 15 வீதம் விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்வது குறித்தும்;

2. இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் கம்பெனி தொழிற்சாலை தனியாருக்கு விற்கப்படுவதை தடுக்கும் வகையில் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்வது குறித்தும்;



3. நீலகிரி மாவட்டத்தில் மஞ்சூர், கவர்னர் சோலா, குருத்துக்குளி கிராமப் பகுதிகளிலும், ஊட்டி காந்தல் பகுதியிலும் கால்நடைகளையும் மனிதர்களையும் புலி, சிறுத்தைகள் தாக்கிக் கொல்வதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எச்.எம். ராஜு முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அளித்துள்ள கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன்:

"1. வால்பாறை தொகுதியில் உள்ள அக்காமலை, கருமலையில் உள்ள குறுகிய பாலத்தை அகலப்படுத்த நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

2. வால்பாறை தொகுதியில் ஒரு அரசினர் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்தும்;

3. வால்பாறை தொகுதி ஆழியார் நகர் வாய்க்கால் மடைகளை புதுப்பிக்கும் திட்டம் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. எச்.எம். ராஜு:** திரு. கோவை தங்கம் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அளித்துள்ள கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன்:

"குன்னூர் மற்றும் கோத்தகிரியில் டைடல் பார்க் ஏற்படுத்துவது குறித்தும்;

2. கோத்தகிரியில் அரசு கலைக் கல்லூரி ஏற்படுத்துவது குறித்தும்;

[திரு. கா. கந்தசாமி] [2004 பிப்ரவரி 9

3. கோத்தகிரி ஒன்றியம், தெங்குமரஹாடா கிராமம், கல்லம் பாளையத்தில் மாயாற்றின் குறுக்கே பாலம் கட்டுவது குறித்தும்;

4. குன்னூர் அருகே உள்ள பக்காசூரன் மலையை சுற்றுலாத் தலமாக அறிவிப்பது குறித்தும்;

5. குன்னூர் பஸ் நிலையத்தை விரிவுபடுத்துவது குறித்தும்;

6. குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களையும், டாக்டர் பணியிடங்களையும் நிரப்புவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. கோவை தங்கம்:** திரு. கா. கந்தசாமி முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், இருக்கையில் இல்லை; திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை; திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை; திருமதி எஸ். மகேஸ்வரி, இருக்கையில் இல்லை; திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அளித்துள்ள கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன்:

"1. கைத்தறி தொழிலைப் பாதுகாக்க சிட்டா நூலுக்கு வரி விலக்கு அளிக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துவது குறித்தும்;

2. மதுரை மாநகராட்சிக்கும், மற்ற உள்ளாட்சிகளுக்கும் மாநில அரசு உரிய பங்கினை அளிப்பது குறித்தும்;

3. மதுரை மாநகரின் தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க வைகை வடகரை குடிநீர்த் திட்டத்தை விரைவில் நிறைவேற்றுவது குறித்தும்;

4. விளையாட்டுத் துறையில் மலை ஜாதி இளைஞர்களுக்கு பயிற்சி தரும் திட்டம் குறித்தும்;

5. கணினி பயிற்சித் தேர்வையும் அரசே நடத்தி சான்றிதழ் தரும் திட்டம் குறித்தும்;

6. சாலை அமைப்புப் பணிகளில் பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்துவது குறித்தும்;



2004 பிப்ரவரி 9] [திரு. என். நன்மாறன்]

7. மதுரை கிழக்குத் தொகுதி காமராசபுரம், அனுப்பானடி, கீரைத்துறைப் பகுதியில் உள்ள மக்களுக்கும், தமிழகத்தின் பல்வேறு பகுதி மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் குறித்தும்;

8. மதுரை 48-வது வட்டத்தில் உள்ள பட்டறைத் தொழிலாளர்கள் மற்றும் அனுப்பானடி பகுதியைச் சார்ந்த மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

9. மதுரை ஆவின் பாலகத்தில் பணி நிரந்தரம் செய்யப்படாமல் உள்ள தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்வது குறித்தும்;

10. எல்லீஸ் நகர் பகுதியில் வீட்டுவசதி வாரியத்தில் வீடு பெற்று முழுப் பணம் செலுத்திய பிறகும் பத்திரம் கிடைக்காமல் உள்ளவர்களுக்கு பத்திரம் வழங்குவது குறித்தும்

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. என். நன்மாறன் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

## 4. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமராவதி ஆற்றிலே மணல் எடுப்பது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றும் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் துணைத் தலைவர் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் இல்லையா? (குறுக்கீடுகள்)..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்; அதுபற்றி எல்லாம் ஆளுநர் உரையில் பேசலாம். (குறுக்கீடுகள்)

**திரு. எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்)..

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து ஒரு வாரம் ஆகிறது. (குறுக்கீடுகள்)..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். பேரவைத் துணைத் தலைவர் பேசுகிறார். (குறுக்கீடுகள்)

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த ஆளுநர் உரையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த, உலகத்தின் வரலாறு பெற்ற ஒப்பற்ற தலைவியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிற அன்னை அவர்களின் பொற்பாதம் வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். (குறுக்கீடுகள்)

இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் யாவும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அன்னையின் ஆட்சிக்கு மேலும் ஒரு மகுடம் சூட்டுவது போல உள்ளது. முத்து முத்தான திட்டங்களையும், நடந்து முடிந்த திட்டங்களையும், நடக்க இருக்கிற திட்டங்களையும் ஒரு பொக்கிஷமாக தொகுத்து அளித்துள்ளது இந்த ஆளுநர் உரை என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆளுநர் உரையிலே என்ன இருக்கிறது என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள். அன்பிற்குரிய



மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் பேசுகிறபோது சாதனை இல்லை என்று சொன்னார். (குறுக்கீடுகள்) இந்த ஆளுநர் உரையில் சாதனை இல்லை, வேதனைகளும், சோதனைகளும்தான் இருக்கின்றன என்றார்கள். உண்மையிலே அவர்களுடைய ஆட்சியிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, கஜானாவை காலி செய்து கடன்கார ஆட்சியாக நடத்தியதால், உண்மையிலே அவர்களுக்கு சோதனையாகத்தான் தெரியும். இது சாதனையாகத் தெரியாது. ஆளுநர் உரையை தமிழில் படிக்கவில்லை என்று (குறுக்கீடுகள்) நான் பேசிவிடுகிறேன். ஆளுநர் உரையை தமிழில் படிக்கவில்லை என்று இங்கே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் சொன்னார்கள்.

*முற்பகல் 10-05*

**திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். காலையிலேயே சூடாக இருக்கக்கூடாது. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** ஆளுநர் உரையை தமிழில் படிக்கவில்லை என்று சொன்னதற்கு நான் இங்கே ஒரு சில உதாரணங்களைச் சொல்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அரசுக் கட்டிலை ஏற்ற பின்னாலே தமிழகத்தை ஆண்டு மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், பேரறிஞர் அண்ணாவிற்குப் பின்னாலே மதுரை மாநகரிலே 1982-லே, 5-வது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார். அந்தப் பெருமை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் எந்தவிதமான மாநாட்டையும் நடத்தவில்லை. வள்ளலின் வாரிசாய் இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தஞ்சை மாநகரிலே 8-வது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி தமிழ் மக்களுக்காக வாழ்ந்து வருகிறார்கள். தமிழுக்காக தியாகம் செய்தவர்கள் குடும்பத்திற்கு நல உதவிகளை வழங்கி, அறிவியல் தமிழையும் உருவாக்கிய பெருமை புரட்சித் தலைவி அன்னையின் ஆட்சிக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், தமிழ் தமிழ் என்று வாய்கிழிய பேசுவார்கள். ஆனால் தமிழுக்காக எதுவுமே செய்ய மாட்டார்கள். (குறுக்கீடுகள்)

[2004 பிப்ரவரி 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** இப்போதுகூட.... (குறுக்கீடுகள்) அண்ணா நடத்தினார், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை அண்ணா நடத்தினார். ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அதற்குப் பின்னாலே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே ஒன்றும் தவறு இல்லையே!

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்)** அண்ணா நடத்தினார் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** அண்ணாவிற்குப் பின்னாலே நடத்தவில்லை நீங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே ஒன்றும் தவறு இல்லையே. அவர் ஒன்றும் தப்பாகப் பேசவில்லை. (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்தவுடன் பேசுங்கள். உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** நான் ஒன்றும் தப்பாகப் பேசவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? புகழேந்தி சொல்லுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா-அவர்கள் தலைமையிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோதுதான் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னை மாநகரிலே நடைபெற்றது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடத்தப்படவில்லை என்று சொல்வது தவறு. அது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. அண்ணா இருந்தபோது கட்சி பிரியவில்லை. அதைத்தான் அவர் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாவின் பெயரை நாங்கள்தான் வைத்திருக்கிறோம்.



2004 பிப்ரவரி 9] [திரு. சி. பொன்னையன்]

(மேசையைத் தட்டும் ஒலி) அண்ணாவிற்காக எல்லா புகழையும் நாங்கள்தான் சேர்த்திருக்கிறோம். (குறுக்கீடுகள்) எனவே, இந்த controversy-க்குள் செல்ல வேண்டுமா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசிக் கொண்டிருக்கின்றபோதே அவர்கள் எழுந்து நிற்கிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கோ.சி. மணி அவர்கள் நான் பேசிக் கொண்டிருக்கிறபோது ஏன் குறுக்கிடுகிறார்? நான் பேசி முடித்தபிறகு பேசட்டும். இது முறையல்லவே. நான் பேசிக் கொண்டிருக்கிறேன். You are a senior Member. (Interruption) நான் பேசிக் கொண்டிருக்கிறேன். You are a senior Member. (Interruption)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது என்ன ஒழுங்குமுறை? பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள். பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் பேசுகிறபோது யாரும் குறுக்கிட வேண்டாம். அவர் பேசிய பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அவர்கள் பேசுகின்ற வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் தலைவர் பேசுகிறபோது அதற்குப் பதில் சொல்லட்டும். அப்படிச் சொல்லட்டும்.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள். துணைத் தலைவர் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் தமிழுக்காக இந்த அரசு ஒன்றும் செய்யவில்லை என்பதைச் சொன்னதால்தான் இந்தப் பதிலைச் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு உட்பட்டேன். (குறுக்கீடுகள்) ஆகவே, தமிழுக்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள்—எல்.கே.ஜி. யிலிருந்து பிளஸ் 2 வரை இப்போது அறிவியல் தமிழை பாடமாகச் சேர்க்க வேண்டுமென்று சொன்ன பெருமை புரட்சித் தலைவி அன்னைக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், வெறுமனே சொல்லிவிட்டுவிடவில்லை. அந்தப் புத்தகங்கள் வாங்குவதற்குக்கூட ரூ.5.42 கோடியை அந்த மாணவர்களுக்கு, இலவசமாக கொடுத்த பெருமையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு. ஆனால் ஆளுநர் உரையாக இருந்தாலும், பட்ஜெட்டாக இருந்தாலும் இவர்கள் படிக்கின்றபோது எல்லாம் சொல்கிறார்கள், இந்த ஆளுநர் உரையைப் பார்த்து ஒருவர் சொல்கிறார்.

[திரு. அ. அருணாசலம்] [2004 பிப்ரவரி 9

நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி சொன்னார். இந்த தமிழில் இருக்கிற ஆளுநர் உரையைப் பார்க்கிறபோது 45 பக்கங்கள் இருக்கின்றன. அதேபோல் ஆங்கிலத்திலே பார்க்கிறபோது 36 பக்கங்கள் இருக்கின்றன. பக்கத்தை எண்ணுவதே பழக்கமாகிப் போய்விட்டது இவர்களுக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) அதைக் கூட்டினால் 9 வருகிறது. 9 ராசியாக இருக்கிறது என்று நினைத்து ஒன்பதைப் போட்டுக்கொள்வார்கள் என்று சொன்னார்கள்.

முற்பகல் 10—10

நம்முடைய மரியாதைக்குரிய மறைந்த கவிஞர் கண்ணதாசன்கூட 'உடலுக்கு ஒன்பது வாசல்' என்றுதான் பாடினார். அவர்கூட 10 வாசல் என்று பாடவில்லை. 'உடலுக்கு ஒன்பது வாசல்.' (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே இந்த ஒன்பதைப் பற்றி இவருக்கு என்னவோ தெரியவில்லை. நீங்கள், மஞ்சள் சால்வை அணிந்த மடாதிபதிகளே, ஒன்பதைச் சொல்ல உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? இன்னொருவர் சொன்னார், இந்த ஆளுநர் உரையில் பச்சையாக இருக்கிறது என்று, அப்புறம் என்ன மஞ்சளாக இருக்கவேண்டுமென்று கேட்கிறார்களா? (சிரிப்பு) பச்சையாக இருக்கிறது. சிகப்பாக இருக்கிறது. பக்கங்களைக் கூட்டினால் ஒன்பது வருகிறது. நீங்கள் ஆளுநர் உரையைப் படித்து அதில் இருக்கிற கருத்தைச் சொல்ல வேண்டுமே தவிர அதிலே இருக்கிற பிரச்சினைகளை, வியாக்கியானங்களாக நம்பர்களைச் சொல்வதுதான் வேடிக்கையாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பணிவோடு சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே ஒரு குறிப்பு வருகிறது. இதிலே, ஆளுநர் உரையிலே என்ன வருகிறது என்றால், தீபாவளி, பொங்கலை மக்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடினார்கள் என்று ஒரு வாக்கியம் சேர்ந்து இருக்கிறது. அதிலே பொங்கல், தீபாவளியை எப்படி மகிழ்ச்சியோடு கொண்டாடினார்கள் என்ற கேள்வியைக் கேட்டார் நம்முடைய புகழேந்தி அவர்கள். உண்மையிலேயே, தீபாவளிக்கு, தஞ்சையிலே டெல்டா பகுதியிலே இருக்கிற விவசாயிகள் வாடிவிட்டார்கள். இயற்கை மழை பொழியவில்லை. பொய்த்துவிட்டது என்கிற சூழ்நிலையில் அங்கே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, 10 இலட்சம் பேர்களுக்கு 21 கோடி ரூபாயில் தீபாவளிப் பரிசு என்கிற பையை கொடுத்த பெருமை புரட்சித் தலைவி அன்னைக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)



2004 பிப்ரவரி 9] [திரு. அ. அருணாசலம்]

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். ஆகவே பொங்கல் வந்தது தை மாதம் முதல் நாள். அந்த பொங்கலுக்கு நாங்கள் எல்லாம் வேட்டி சேலை கொடுக்கச் சென்றோம். அங்கே போய் அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு எல்லாம் கொடுத்தோம். இதில் சில குளறுபடிகள் என்றார்கள். அதிலே ஒன்றும் குளறுபடி இல்லை. அதிலே, முதலிலே, ஏழைகளுக்கு எல்லாம் கொடுக்கப்பட்டது. போதவில்லை என்றார்கள். அங்கே இருக்கிற, அந்த மக்களுடைய நலன் கருதி, ரூ.1.73 கோடி செலவில், 2.22 கோடி வேட்டி சேலைகள், காட்டன் பாலியஸ்டர் கலந்த வேட்டி கொடுத்த பெருமை புரட்சித் தலைவி அன்னைக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி).

சிலர் சொன்னார்கள் - நம்முடைய மரியாதைக்குரிய எதிர்க் கட்சித் தலைவர் எல்லாம் சொன்னார்கள், விவசாயிகள் நெல்லைக்கொண்டு கடலிலே கொட்டுகிறார்கள் என்று. நாம் எல்லாம் களஞ்சியத்திலே நெல்லைக் கொட்டித்தான் பார்த்து இருக்கிறோம். கடலில் கொட்டுவது இதுதான் புதுமையாக இருக்கிறது. நெல் அதிகமானால் களஞ்சியத்தில் கொட்டுவார்கள். அதைக் கடலில் கொட்டுகிற சூழ்நிலை இருக்கிறது என்றால் தஞ்சையில் இருக்கிற விவசாயப் பெருமக்கள் செய்தார்களா? சிலர் வந்து டி.வி.-க்கு 'போஸ்' கொடுக்க வேண்டுமென்று, அவர்களுடைய குடும்ப சன் டி.வி.-யில் காட்ட வேண்டும் என்ற சூழ்நிலையில்தான் அதைக் காட்டினார்களே தவிர, யாரும் நெல்லை கொண்டுபோய் கடலிலே கொட்டவில்லை. அப்படிக் கொட்டி இருந்தால் அங்கே வறுமை இல்லை என்று பொருள். விவசாயிகள் சிறப்பாக இருக்கிறார்கள் என்று பொருள். ஆக, இப்படிப் பார்க்கும்போது எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், புரட்சித் தலைவி அன்னை அவர்கள் செய்கிற அத்தனையிலும் ஒரு வியாக்கியானத்தைச் சொல்கிற ஒரு நிகழ்ச்சியைத்தான் நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

அதுபோல, இங்கே 'எச்' முத்திரை பற்றி சொன்னார்கள் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள். அவர் சொல்கிறபோது அந்த 'எச்' முத்திரையிலே பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதிலேயும் குளறுபடி என்றார்கள். நாங்கள் என்ன குளறுபடி செய்தோம்? ரேஷன் கார்டிலே குளறுபடி செய்தோமா? உங்கள் ஆட்சியிலே பச்சை கார்டு, சிவப்பு கார்டு, மஞ்சள் கார்டு மூன்று கார்டுகளாகக் கொடுத்துவிட்டு, அதிலே ஆண் முஸ்லீம், பெண் இந்து என்று குறிப்பிட்டு, அவன் அந்த கார்டை எடுத்துப் பார்த்தால் பெயர்களை மாற்றி, மாற்றி, இந்தக் குளறுபடியைச் செய்தவர்களே நீங்கள்தானே! (மேசையைத் தட்டும் ஒலி)

'எச்' முத்திரையை நாங்கள் குளறுபடி செய்யவில்லையே! ஆகவே, எதை எடுத்தாலும் குளறுபடி, குளறுபடி என்று பேசிக்கொண்டிருந்தார் மாண்புமிகு உறுப்பினரவர்கள். (குறுக்கீடு)

*முற்பகல் 10-15*

**திரு. இ. புகழேந்தி:** தொடர்ந்து தவறான தகவல்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அதற்குப் பதில் சொல்ல வேண்டாமா? 'எச்' முத்திரையில் நிறைய குளறுபடிகள் இருந்தன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள்

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்)**: அதைப்போல ஆதிதிராவிடப் பெருமக்களுக்கு, நலன் வழங்குகின்ற நிகழ்ச்சியாக, அந்த ஆதிதிராவிட மக்கள் சிறப்பாக வாழவேண்டும், அவர்களும் கோயிலுக்குச் சென்று வழிபடவேண்டும், ஆதிதிராவிடர்கூட அர்ச்சகர் ஆகலாம் என்கின்ற பெருமையை, அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல 6000 ஆதிதிராவிடர் கோயில்களுக்கு 15 கோடி ரூபாய் செலவிலே, அந்த ஆதிதிராவிடர்கள் கோயிலை சீரமைத்துக் கொள்வதற்கும், திருப்பணி செய்வதற்கும் திட்டம் கொண்டுவந்த பெருமை புரட்சித் தலைவி அன்னையின் ஆட்சிக்கு உண்டு.

**திரு. இ. புகழேந்தி:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றுமில்லை. உட்காருங்கள், உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) சும்மா அனாவசியமாகத் தலையிடாதீர்கள். உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) உங்கள் தலைவர் பேசும்போது பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அதையெல்லாம் உங்கள் தலைவர் பேசும்போது பேசச் சொல்லுங்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** அதைப்போல ஆதிதிராவிடர்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்படி உயர்த்திக் காட்டுகிறார், அந்தக் குழந்தைகளுக்கு நலப் பணிகளை எப்படிச் செய்கிறார் என்பதற்கு, இந்தப் படத்தைக்கூட நம்முடைய மரியாதைக்குரிய அவைத் தலைவரிடம் காட்டிவிட்டுத்தான் உங்களிடம்



காட்டுகிறேன். இந்தப் படத்தை நீங்கள் பாருங்கள். (படம் ஒன்றை எடுத்துக் காட்டினார்) இது ஒரு ஆதிதிராவிட பெண் குழந்தை. ஆதிதிராவிட பெண் குழந்தை - இந்தப் படம் 6 மாதமாக என்னுடைய அறையிலே இருக்கிறது. இந்த ஆதிதிராவிட பெண் குழன்தைணைப் பார்த்து சிலர்கூட கேட்டார்கள் இது என்ன உங்கள் பெண் குழந்தையா என்று. இப்படிச் சிலரெல்லாம் கேட்டார்கள். இந்த அட்சயா என்கின்ற பெண் குழந்தை, கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு ஆதிதிராவிட பெண் குழந்தை. அக்குழந்தை 400 திருக்குறளைப் படித்து, ஒப்புவித்தது என்பதற்காக ரூபாய் 5 இலட்சம் கொடுத்து, அவர் அந்தக் குழந்தையைப் பார்க்கின்ற அந்தப் பார்வையைப் பார்த்தாலே தெரியும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஆதிதிராவிட குழந்தையாக இருந்தாலும், எந்தக் குழந்தையாக இருந்தாலும், ஏற்றிப் பார்த்து அழகு பார்க்கிறேன் என்கின்ற அளவிலே இந்தப் படத்திலே அந்தப் பார்வையைப் பார்த்தாலே உங்களுக்கு நன்றாகத் தெரியும். இப்படிப்பட்ட ஓர் இரக்கப் பார்வை உங்களிடம் இருக்கிறதா, ஏற்படுமா என்பது சந்தேகம்தான்.

அதைப்போல, சைக்கிள் வழங்குகிற திட்டம். ஏனென்றால், சிலர் கோபித்துக் கொள்வார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆதிதிராவிடர் குழந்தைகளுக்கு பிளஸ் ஒன், பிளஸ் டூ படிக்கின்ற குழந்தைகளுக்கு ரூ.1.44 இலட்சத்திலே சைக்கிள் வழங்கி, அவர்கள் படிப்பு தடைபடக் கூடாது என்ற அந்தப் பெருமையைச் சேர்த்து, சரித்திரம் படைக்கின்ற திட்டம், சைக்கிள் வழங்குகிற திட்டம். இவையெல்லாம் உங்களுக்குச் சாதனையாகத் தெரியவில்லயா?

அதைப்போல ஆதிதிராவிட மாணவ, மாணவிகளுக்கு Hostel கட்ட வேண்டும். அந்தக் குழந்தைகளுக்கு படிப்பதற்கு Hostel வசதி செய்து கொடுப்பதற்காக ரூ.99.59 கோடியில் 316 மாணவர் இல்லங்கள் கட்டுவதற்கு இந்த ஆளுநர் உரையிலே அன்னை அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், அவர்களுக்கும் Hostel வசதி செய்து கொடுப்பதற்கு, ரூ.68.49 கோடியில், 214 பள்ளிக்கூட Hostel கட்டுவதற்கு, அந்த நிகழ்ச்சியையும் சேர்த்திருக்கிறார்கள்.

பெண் குழந்தைகளை சிசுவிலே கொல்கிற அந்தக் கொடுமையை எல்லாம் போக்கி, தொட்டில் குழந்தைத் திட்டம் கொண்டு வந்து சிறப்புச் செய்தவர் அன்னை அவர்கள் என்று இந்த நேரத்திலே

சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். *1221* பெண் குழந்தைகள் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கிறது தொட்டில் குழந்தைத் திட்டத்தின் வாயிலாக. இப்படி நல்ல திட்டங்களை எல்லாம் கொண்டு வந்து இருக்கிறார்கள் என்று சொல்லி, ஒரு சிறப்பான திட்டத்தை மட்டும் இறுதியாகச் சொல்லி விடைபெறுகிறேன்.

வள்ளுவரிடம் போய் கேட்டிருக்கிறார்கள், எங்கள் பணத்தை எல்லாம் எங்கே சேர்த்து வைக்கவேண்டுமென்று. திருவள்ளுவர் சொன்னாராம், பசித்த வயிறு இருக்கிறது பாருங்கள், அதிலே கொண்டுபோய் உங்கள் பணத்தை பொக்கிஷமாக வையுங்கள் என்று சொன்னாராம். அதைப்போல புரட்சித் தலைவி அன்னை அவர்கள் *162* கோயில்களில் அன்னதானத் திட்டத்தை உருவாக்கினார்கள். அந்த அன்னதானத் திட்டத்தை உருவாக்கி அதிலே தன்னுடைய மாதச் சம்பளத்தை, ஒவ்வொரு மாதமும், கிட்டத்தட்ட 2½ ஆண்டுகள், முடிந்து இப்போது *3*-வது ஆண்டைத் தொட்டுக் கொண்டிருக்கிறோம். தன்னுடைய ஒவ்வொரு மாத சம்பளத்தையும் கொடுத்த பெருமை புரட்சித் தலைவி அன்னைக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி நல்ல பல திட்டங்களை உருவாக்கி இதய தெய்வம் புரட்சித் தலைவி அன்னை அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் வெளியிலே இருந்துகொண்டு, சட்டசபைக்கும் வராமல், லாபியிலே இருக்கிற நோட்டிலே கையெழுத்துப் போட்டு லாவணி பாடுகிற பெருமை எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10-20*

வீராணம் திட்டம், வீணான திட்டம் என்றார்கள். அது உண்மையிலேயே வீணான திட்டம்தான். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கொண்டுவந்தது வீணான திட்டம். இப்போது புதிய வீராணம் திட்டம் *730* கோடியில். வீராணம் திட்டத்திலே தண்ணீர் வரும் வரும் என்று நாங்கள் சொல்கிறோம். நீங்கள் வராது வராது என்று சொல்கிறீர்கள். எரிந்த கட்சி, எரியாத கட்சி மாதிரி இருக்கிறது இப்போது. தண்ணீர் வரும் என்று சொல்லித்தான் நீங்கள் வைத்த வீராணம் திட்டம் வீணான திட்டம். இது புதிய வீராணம் திட்டம் கட்டாயமாக தண்ணீர் வரும். ஆகவே, இந்தத் திட்டத்தையும் உருவாக்கி தமிழகத்திலே சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தலைவர் பேசும்போது பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) உங்கள் தலைவர் பேசும்போது பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** அதேபோல நமது *234* சட்டமன்ற உறுப்பினர்களும் ஒரு ஆண்டுக்கு இத்தனை V.A. Office-ஐக் கட்டவேண்டும் என்று எல்லோருக்கும் புரட்சித் தலைவி அன்னை அவர்கள் ஆணையிட்டார்கள்; உங்களுக்கு நன்றாகத் தெரியும். பரம்பரை மணியக்காரரை ஒழித்த பெருமை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருக்கு உண்டு. அதற்குப் பின்னாலே இந்த மணியக்காரர் எங்கே இருக்கிறார்? நமது பிள்ளைகள் Certificate வாங்கப் போனால் அந்த மணியக்காரர் R.D.O.-வைப் பார்க்கப் போய்விட்டார் என்பார்கள். அங்கே போனால் தாசில்தார் ஆபிசுக்குப் போய்விட்டார் என்பார்கள். தாசில்தாரைப் பார்க்கப் போனால் கலெக்டர் ஆபிசுக்குப் போய்விட்டார் என்பார்கள். அந்த மணியக்காரர்கள், வி.ஓ.-க்கள் எங்கே இருக்கிறார்கள்? அவரை எங்கே பார்க்கவேண்டும் என்ற சூழ்நிலையில் அவருக்கும் அலுவலகம் வேண்டும். அங்கே போனால் அவரும் காலையிலிருந்து *10* மணிக்கு ஆரம்பித்து *5* மணி வரையிலும் அந்த அலுவலகத்திலே இருக்க வேண்டும். இந்தக் குழந்தைகள் Community Certificate-சாதிச் சான்றிதழும், அதேபோல Income Certificate-ம் எது வாங்க வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம் என்று ரூ.*77.89* கோடியில் அலுவலகம் கட்டிக் கொடுத்த பெருமை புரட்சித் தலைவி அன்னைக்கு உண்டு என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே சொல்லிக்கொண்டு, இறுதியாக என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்னாலே புரட்சித்தலைவி அன்னை அவர்களுடைய பாதத்தைத் தொட்டு வணங்கி எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த அன்னை அவர்களுக்கு நன்றியைச் சொல்வதற்கு முன்னாலே அவர்களைப் போற்றி ஒரு பாட்டு பாட விரும்புகிறேன்.

'இதய தெய்வம் நமது அன்னை தோன்றினார்
இதய தெய்வம் நமது அன்னை தோன்றினார்
அவர் ஏழை வாழ நற்பணியை ஆற்றுறார்
இதய தெய்வம் நமது அன்னை தோன்றினார்'...

[2004 பிப்ரவரி 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைத் தலைவர் அவர்களே, இசையோடு நிற்கட்டும். தாளங்கள் எல்லாம் வேண்டாம். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):**

'இதய தெய்வம் நமது அன்னை தோன்றினார்
அவர் ஏழை வாழ நற்பணியை ஆற்றுறார்
அன்னை வழி போகலாம் சொன்ன வழி போகலாம்
நாளை வரலாறு வெற்றியாக உருவாகலாம்.' (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எனக்கு இந்த ஆளுநர் உரையில் பேச வாய்ப்பளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி முதலமைச்சர் அன்னை அவர்களுக்கும் பணிவோடு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசவும், பாடவும். (சிரிப்பு) திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவிக்கின்ற வாய்ப்பினை எங்களது அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பிலே எனக்கு அளித்தமைக்காக என்னுடைய உள்ளபூர்வமான நன்றியறிதலைத் தங்களுக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மில்டன் என்கின்ற ஆங்கில கவிஞர் சொல்வார். "The mind of the man that makes the hell and the heaven" என்று சொல்வார். ஒரு மனிதனுடைய மூளைதான் நரகத்தையும், சொர்க்கத்தையும் உருவாக்குகிறது. நாம் எதை நல்ல வாழ்க்கை என்று நினைக்கிறோமோ, அது நமக்கு நல்ல வாழ்க்கையாகவும், அதையே கெட்ட வாழ்க்கை என்று நினைத்தால் கெட்ட வாழ்க்கையாகவும் நமது உள்ளம் அதை சித்தரித்துக்கொள்கிறது என்பதுபோல, இந்த ஆளுநர் உரையைப் பொறுத்த அளவிலே நல்லவை இருக்கின்றன என்று எண்ணுபவர்களுக்கு நல்லவை பல இருக்கின்றன. நல்லவை இல்லை என்று எண்ணுபவர்களுக்கு நல்லவை இல்லை என்று வாதிடுகின்ற வாய்ப்பும் இருக்கிறது.



2004 பிப்ரவரி 9] [திரு. லா. சந்தானம்]

*முற்பகல் 10-25*

தமிழ்நாட்டிலே வறட்சி என்ற கொடுமை கடந்த 2 ஆண்டுகளாக நம்மை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது என்கின்ற நிலையில், சென்ற ஆண்டும் இந்த அரசு, தமிழக மக்களைப் பாதுகாக்கின்ற எண்ணத்தோடு 28 மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்து அதோடு தஞ்சை டெல்டா போன்ற பகுதிகளிலே வாழ்கின்ற மக்கள் எல்லாம் மிகத் துயரத்திலே இருக்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்குச் சிறப்பாக பல்வேறு நலத் திட்ட உதவிகளைச் செய்ததையும் இந்த நாடு அறியும். அதுபோல, இந்த ஆண்டும் அந்த வறட்சியினுடைய கொடுமை நீண்டு கொண்டிருக்கிறது என்கின்ற நிலையை உணர்ந்து அந்த வறட்சியைப் போக்குவதற்கு இப்போது 1500 கோடி ரூபாய் வரை தமிழகத்திற்குத் தேவை என்கின்ற நிலையை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறது இந்த ஆளுநர் உரை. அதை எடுத்துச் சொல்லியதோடு மட்டும் அல்லாமல், கடந்த 2 நாட்களுக்கு முன்னரேயே பத்திரிகைகளிலே செய்திகளைப் பார்க்கிறோம். மத்திய அரசு, தமிழகத்தினுடைய வறட்சி நிலையை அறிவதற்கு, ஆராய்வதற்கு, உதவி செய்வதற்கு ஒரு குழுவினை இங்கே அனுப்புகிறது என்கின்ற நிலையை எடுத்திருக்கிறது என்ற செய்தியை நாம் செய்தித்தாள்களின் மூலமாக அறிந்து இருக்கிறோம். அதைப் பார்க்கின்றபோது தமிழக அரசு வறட்சியினுடைய நிலையைப் போக்குவதற்கு எவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுத்து இருக்கிறது, அதனால் மத்திய அரசிடமிருந்தும் உதவியைப் பெறுகிற நிலை நமக்கு விரைவிலே கிடைக்கும் என்கின்ற நிலையும் இருக்கிறது என்பதை மிகத் தெள்ளத்தெளிவாக அது எடுத்துக்காட்டுகிறது.

அதுபோல இன்றைக்கு குடிநீர்ப் பற்றாக்குறை. தமிழகத்திலே இருக்கிற கிராமங்களாக இருந்தாலும் சரி, நகரங்களாக இருந்தாலும் சரி அங்கிருக்கிற மக்கள் போதிய குடிநீர் ஆதாரத்தைப் பெற வேண்டும், அவர்களுக்குக் குடிநீர்த் தட்டுப்பாடு இல்லாத விநியோகம் இருக்க வேண்டும் என்கின்ற முறையில் இந்த ஆளுநர் உரையில் குடிநீர்த் தட்டுப்பாட்டை கிராமப் பகுதியிலே போக்குவதற்கு 572 கோடி ரூபாயும், அதுபோல நகரங்களிலும், டவுன் பஞ்சாயத்துக்களிலும் இருக்கிற தட்டுப்பாடுகளைப் போக்குவதற்கு 460 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி இருக்கிறது.

அதுபோல ஒரு வளர்ச்சியடைந்த சமுதாயம் என்பது உலக அரங்கிலே தெரிய வேண்டும் என்று சொன்னால் அந்தச் சமுதாயம்

கல்வி கற்ற சமுதாயமாக இருக்க வேண்டும். அந்தக் கல்வியை நூற்றுக்கு நூறு விழுக்காடு தமிழக மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்கின்ற ஆர்வத்தோடு இந்த அரசு செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்கின்ற திட்டமும், இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தோடு அல்லாமல் ஏறக்குறைய ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட நடுநிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதுபோல உயர்நிலைப் பள்ளிகள் 200 தொடங்கப்பட்டிருக்கின்றன. மேல்நிலைப் பள்ளிகளாக 300 பள்ளிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன என்கிற செய்தியும் இந்த ஆளுநர் உரையிலே இருக்கிறது. எனவே கல்வியிலே இந்த அரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது, ஆர்வம் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிற நிலையிலே அந்தக் கல்வித் துறை சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ், தமிழ் என்று சொல்லுகின்ற நேரத்தில் நமது துணை சபாநாயகர் குறிப்பிட்டதுபோல அறிவியல் தமிழ் என்பதை இலவசமாகவே தமிழக மக்கள் கற்றுத் தேற வேண்டும் என்பதற்காக அதற்காக சிறப்பு நிதியும் ஒதுக்கி, பாடப் புத்தகங்கள் எல்லாம் இலவசமாகக் கொடுத்து தமிழ் மீது ஆர்வம் கொண்ட இந்த அரசு அதைச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்கின்ற நிலையும் இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல் கிராமப்புறங்களிலே இருக்கின்ற சாலைகள் எல்லாம் பல்லாண்டு காலமாக செப்பனிடப்படாது அதிலே ஓடிக் கொண்டிருந்த பேருந்து வழித்தடங்கள் எல்லாம் நின்று போகின்ற ஒரு சூழல் இருக்கின்ற நேரத்தில் அந்தப் பேருந்து வழித்தடங்கள் எல்லாம் சிறப்பாக இருப்பதற்கு சாலைகள் புனரமைக்கப்பட வேண்டும், சீரமைக்கப்பட வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு கிராமப்புறங்களிலே வாழ்கிற மக்கள் தாங்கள் பொருட்களைச் சந்தைகளுக்கு எடுத்துச் செல்வதற்கு அவர்கள் சென்று வருகிற பயணங்கள் சீராக அமைய வேண்டும் என்பதற்காக இந்தச் சாலைகள் எல்லாம் சீரமைக்கப்பட வேண்டும் என்கின்ற நிலையில் ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற சாலைகளைச் சீரமைப்பதற்கு 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது இந்த ஆளுநர் உரையிலே. இன்றைக்கு ஊராட்சி ஒன்றிய பகுதிகளுக்கெல்லாம் அந்த நிதியும் வழங்கப்பட்டு அந்த வேலைகள் துரிதமாக செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையிருக்கிறது.



முற்பகல் 10-30

அதுபோல, இதர மாவட்டச் சாலைகள், மற்றவற்றையெல்லாம் பராமரிப்பதற்கு 360 கோடி ரூபாயில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களிலே போக்குவரத்தும், சாலைகளும் சீரமைய வேண்டும் என்பதற்காக இந்த அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கை இது என்பது இந்த ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அதுபோல, கிராமத்திலேயிருக்கின்ற அடித்தட்டு மக்களுக்கு வைத்திய வசதி என்பது மிகவும் அவசியம் என்கின்ற முறையிலே அந்த வசதியைப் பெற்றுத்தர வேண்டும், மருத்துவ வசதி எங்கும் இல்லை என்கின்ற நிலை இருக்கக் கூடாது. எந்த மருத்துவமனையிலும் மருந்துகள் இல்லை என்கின்ற நிலை இருக்கக் கூடாது, கிராமப்புறங்களிலே இருக்கின்ற மருத்துவமனைகளிலேகூட அத்தனை வியாதிகளையும் போக்குகின்ற அளவுக்கு மருத்துவ வசதியைத்தர வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு அரசு கிராமப்புறங்களிலே இருக்கின்ற துணைச் சுகாதார நிலையங்களுக்குக்கூட 742 கட்டடங்கள் புதியதாக கட்டிக் கொடுத்திருக்கிறது என்கிற செய்தி இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதேபோல, பல்வேறு இடங்களிலே மருத்துவக் கல்வி ஆரம்பிக்கப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கை மட்டும்தான் இருந்தது. இந்த அரசு வந்தவுடனே மூன்று மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிக்கின்ற நிலையிலே அதற்குரிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஒவ்வொன்றும் 10 கோடி ரூபாய் செலவிலே கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் கண்கூடாக பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். வேலூரிலும்—சகோதரர் ஞானசேகரன் இங்கே இருப்பார் என்று நினைக்கிறேன்—அவரையும்கூட கூட்டிச் சென்று அந்த வேலூரிலே—மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கட்டடப் பணி நடந்து கொண்டிருப்பதையும், அந்த மருத்துவமனையினுடைய செயலாக்கங்கள் மிகவும் விரைவாக செயல்பட்டுக் கொண்டிருப்பதையும் பார்க்க முடிந்தது. அதுபோல, தேனி, தூத்துக்குடி போன்ற இடங்களிலேயெல்லாம் மருத்துவக் கல்லூரிகளுக்குரிய தொடக்கப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்கின்ற சிறப்பான செய்தியும் இந்த ஆளுநர் உரையிலே இருக்கிறது. இப்படி கிராமப்புற மக்களுக்கு, கிராமத்திலே இருக்கின்ற பின்தங்கிய ஏழை எளிய மக்களுக்கு, தொண்டு செய்ய வேண்டும், கடமையாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு பல்வேறு

[திரு. லா. சந்தானம்] [2004 பிப்ரவரி 9

நல்ல காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்கின்ற நிலை இந்த ஆளுநர் உரையிலே இருக்கிறது.

அதுமட்டுமல்ல. நன்மைகள் செய்தால் மட்டும் போதாது. தீமைகள் ஒழிக்கப்பட வேண்டும். அந்தத் தீமைகள் ஒழிக்கப்படுவதன் மூலமாகத்தான் சமுதாயம் முன்னுக்கு வர முடியும். எத்தனை நன்மைகள் செய்தாலும் தீயவர்கள் இந்தச் சமுதாயத்திலே இருப்பார்களேயானால், அந்தத் தீமை நிச்சயமாக எல்லோரையும் பாதிக்கும் என்கின்ற நோக்கத்தோடு அந்தத் தீமைகளை ஒழிப்பதற்குரிய திட்டங்களும் இங்கு இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இந்த அரசின் கந்து வட்டி ஒழிப்பு தடைச் சட்டத்தின் மூலமாக — இன்றைக்கு இலட்சோபலட்சம் குடும்பங்கள், கிராமப்புறங்களிலேயும் சரி, நகர்ப்புறங்களிலேயும் சரி அந்த அநியாய வட்டிக்கு ஆட்படுத்தப்பட்டு பல்லாயிரக்கணக்கானவர் அந்தந்த கிராமங்களிலே குடியிராமல் பெயர்ந்து போன நிலைகள் எல்லாம் உண்டு. அது போல, நகரத்தில் இருந்தவர்களும் அந்தக் கடன் சுமை தாங்கமாட்டாமல் தங்களுடைய குடும்பத்தோடு எத்தனையோ பேர், தங்களுடைய உயிரை மாய்த்துக்கொண்டவர்களும் உண்டு என்கின்ற செய்தியெல்லாம் இருந்தது. அந்தக் கொடுமையிலிருந்து இன்றைக்கு இந்தச் சமுதாயம் காக்கப்பட்டு, ஏழை எளிய மக்களெல்லாம் நிம்மதி பெருமூச்சு விடுகின்ற அளவிலே இந்தச் சட்டம் பயன்பட்டிருக்கிறது என்கின்ற நிலையும் இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, சட்டம் ஒழுங்கு, மிகச் சிறப்பாக பராமரிக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் நமது சங்ககால நூல்களிலேகூட குறிப்பிடுவார்கள்.

"நெல்லும் உயிரன்று நீரும் உயிரன்று;
மன்னன் உயர்த்தே மலர்தலை உலகம்"

என்று சொல்வார்கள். ஒரு நாட்டிலே நீர்வளமும், உணவு வளமும், நெல் வளமும் இருந்தாலும்கூட, அங்கு சட்டம் ஒழுங்கு இல்லை என்கின்றபோது அந்த மக்கள் நிச்சயமாக நிம்மதியாக, நிறைவாக இருக்க முடியாது. அத்தனையும் பெற்றிருந்தும் அவர்கள் பெறாதவர்கள் என்றே கருதப்படுவார்கள் என்கின்ற நிலை இருந்தது. எத்தனை ஊர்களிலே எங்கு பார்த்தாலும் சண்டை, எங்கு பார்த்தாலும் ஓயாத கலவரங்கள், அதன்மூலமாக அத்தனை சொத்து சுகங்களையும்



2004 பிப்ரவரி 9] [திரு. லா. சந்தானம்]

இழந்துவிட்டு அந்த ஊரைவிட்டு வந்தவர்கள் எத்தனை பேர்? அது கடந்த கால வரலாற்றிலே நாம் தெரிந்திருக்கிறோம், அறிந்திருக்கிறோம். இப்பொழுது அந்த நிலை இல்லை. கடந்த இரண்டு ஆண்டு காலமாக இவ்வளவு வறட்சி இருந்தாலும் மக்கள் நிம்மதியாக இருக்கிறார்கள், நிறைவாக இருக்கிறார்கள். தங்களுக்கு இருக்கின்ற உடைமைகள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. பொருள்கள் சேதப்படுத்தப்படாமல் அழியப்படாமல் இருந்திருக்கின்றன என்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால் இன்றைக்கு நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்கின்ற நிலையும் இந்த ஆளுநர் உரையிலே இருக்கிறது.

*முற்பகல் 10-35*

இப்படி பல்வேறு, மின்சாரத்திலா தட்டுப்பாடு இல்லை. அவற்றை நீக்கி இருக்கிறோம். அதற்குப் புதிய திட்டங்களை எல்லாம் கொண்டு வந்திருக்கிறோம் என்கின்ற செய்தி இந்த ஆளுநர் உரையிலே இருக்கிறது. எனவே, நல்லவை செய்யப்பட்டிருக்கின்றன. தீமைகள் பல ஒழிக்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாக இன்றைக்கு மக்கள் நிம்மதியாக இருக்கிறார்கள்.

மணல், அதிலே எத்தனை பேர் சுரண்டல்காரர்கள், சுயநலக்காரர்கள், அதில் தங்களைப் பணக்காரர்களாக்கிக் கொண்டவர்கள் இருக்கிறார்கள், இன்றைக்கு அது அரசு சார்பிலே.

அதுபோல லாட்டரிச் சீட்டு. இதனால், எத்தனை பாமர மக்கள் பாதிக்கப்பட்டார்கள். தாங்கள் அன்றாடம் சம்பாதிக்கின்ற அந்தப் பணத்தை மாலை வந்தால் அந்த லாட்டரிச் சீட்டை வாங்கி ஏமாந்து திரும்புகின்ற ஒரு நிலையிருந்தது. இன்றைக்கு அந்த அவல நிலை போக்கப்பட்டு, ஒருவன் கூலி வேலைக்குச் சென்றால் அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு நிறைவாக வீட்டுக்குச் சென்று மனைவி மக்களோடு உண்டு மகிழ்கின்ற ஒரு நிலை இருந்து வருகிறது. இப்படி பல்வேறு நிலைகள்.

இன்றைக்கு மதுக்கடையை அரசு எடுத்ததில்கூட அரசுக்கு மிகப் பெரிய இலாபம். ஆகவே, தனியார்கள் சுரண்டிக்கொண்டு அந்த மதுக்கடையில் தங்களுடைய சொந்த சரக்கையும் கலந்து விற்று பணக்காரர்களாக கொழுத்துக் கொண்டிருந்த நிலையை மாற்றியிருக்கிறது இந்த அரசு என்கின்ற நிலை இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட நல்ல திட்டங்களோடு தீமைகளும் ஒழிக்கப்பட்டு இருக்கின்றன என்கின்

[திரு. லா. சந்தானம்] [2004 பிப்ரவரி 9

நிலையிலே நான் என்னுடைய சில கோரிக்கைகளையும் இந்த அரசுக்கு வைப்பதற்கு கடமைப்பட்டவனாயிருக்கிறேன்.

கோரிக்கைகளிலே, முதலாவது என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவிலே 58 கிராமக் கால்வாய்த் திட்டம். அது ஒரு கனவுத் திட்டமாக அந்தப் பகுதி மக்களுக்குத் தெரிகிறது. அந்தக் கனவுத் திட்டத்தை முதலமைச்சர் அவர்களேகூட தன்னுடைய உரையிலே நிச்சயமாக நான் அதைச் செய்து தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மீண்டும் இந்த அரசுக்கு நான் வலியுறுத்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல காவிரி டெல்டா பகுதிக்கு அடுத்தபடியாக மிகப் பெரிய பாசனத்தை பெறுகின்ற பகுதி எங்களது வைகை-பெரியார் நீர்ப்பாசனப் பகுதி. அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் கடந்த 2 ஆண்டு காலமாக தண்ணீர் கிடைக்கப்பெறாமல் மிகுந்த துயரத்தில் இருந்தார்கள். இப்போதுகூட நான் இந்தச் சட்டமன்றத்திற்கு வருகின்றபோது இன்னும் கொஞ்சம் தண்ணீர் கொடுக்கப்பட்டால் அதிலே இருக்கின்ற 10, 12 ஆயிரம் ஏக்கர்கள் நிலம் முழுமையாக விளைச்சலைப் பெறும் என்பதைச் சொல்லி சபாநாயகர் அவர்களிடத்திலே ஒரு கவன ஈர்ப்பு கொடுத்து இருந்தேன். அதை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நமது பேரவைத் தலைவர் கொண்டு சென்றதற்கு இணங்க இன்றைக்கு அந்தத் தண்ணீர் திறக்கப்பட்டிருக்கிறது என்கின்ற நல்ல செய்தி பெரியார் பாசன விவசாயிகளுக்குக் கிடைத்திருக்கிறது என்ற செய்தியை நான் பத்திரிகையிலே பார்த்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், நமது பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை அந்த விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக தெரிவித்துக் கொள்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல சிறப்பு மின்சார இணைப்பு. அதை நான் சென்ற ஆண்டுகூட இந்தச் சபையிலே வலியுறுத்தினேன். காவிரி டெல்டா பகுதியிலே சென்ற ஆண்டு 7 ஆயிரம் சிறப்பு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டதன் மூலமாக ஆங்காங்கே அந்தக் கிணறுகள் நிலத்தடி நீரைப் பயன்படுத்திக் கொண்டு விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தை ஓரளவுக்குச் செய்து இருக்கின்றார்கள் என்கின்ற நிலையில், அந்தப் பெரியார் பாசன விவசாயம் நூறு ஆண்டுகளாக எந்தவித தண்ணீர் பற்றாக்குறையும் இல்லாத நிலை இருந்த காரணத்தினால்



2004 பிப்ரவரி 9] [திரு. லா. சந்தானம்]

கிணறுகளைத் தோண்டிவிட்டு மின் இணைப்பு பெறாமலே இருந்து விட்டார்கள். ஏனென்றால், போதிய தண்ணீர் கிடைக்கிறதே, நமக்கு அது தேவையில்லை என்கின்ற நிலையில் இருந்துவிட்டவர்களுக்கு இன்றைக்கு அந்த கிணற்றிற்கு மின் இணைப்பு கிடைத்தால் இப்படி ஓரிரு சமயத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகின்ற நேரத்தில் தங்களுடைய விவசாயத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்கின்ற சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எங்களது பெரியார்—வைகை பாசனம், காவிரிக்கு அடுத்தபடியான ஒரு பெரிய பாசனம். அதிலே சிறப்பு மின் இணைப்புத் திட்டமாக ஏதாவது ஒரு எண்ணிக்கையிலே மின் மோட்டார்கள் இணைப்பு தர வேண்டும் என்கின்ற கோரிக்கையை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-40

அதுபோல அரசு ஊழியர்கள். அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கை என்பது உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையின்படி, நீதிபதிகளை வைத்துத்தான் பணி நீக்கம் என்கின்ற அளவிலே 999 பேருக்கு செய்திருக்கிறார்கள். நாம் என்றைக்கும் தாயுள்ளம் கொண்ட அரசு என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதை நாம் மெய்ப்பிக்க வேண்டும். நமது சங்க இலக்கியங்களிலேகூட கூறுவார்கள். ‘கண் குத்திற்று என்று களைவோமா தன் கை’ என்று சொல்லுவார்கள். நம்முடைய கையானது, ஏதாவது ஒரு அசந்தர்ப்பவசமாக நம்முடைய கண்ணைக் குத்திவிட்டால், நம்முடைய கையை நாம் வெட்டிக் கொள்வதில்லை என்று சங்க இலக்கியங்களிலே குறிப்பிட்டதுபோல அரசு ஊழியர்கள், அவர்களும் நம்முடைய பாதுகாப்பிலே இருக்கின்றவர்கள். நம்மவர்கள், நமக்கு, அரசுக்கு ஒரு நேரத்திலே உறுதுணையாக இருந்தவர்கள்தான். ஏதோ ஒரு அவசரத்திலோ, ஆத்திரத்திலோ ஒருசில நடவடிக்கைகளிலே இறங்கிவிட்டார்கள். அந்த ஊழியர்கள் 2 சதவீதம்தான் மொத்த சமுதாயத்திலே என்று குறிப்பிட்டாலும்கூட, நேரடியாகவோ, மறைமுகமாகவோ அந்த 2 சதவீதம் பேரை இந்த 98 சதவீதம் பேரும் அணுகுகின்ற ஒரு நிலை இருக்கிறது. அன்றாட வாழ்க்கையில், நமக்கு ஒரு ரேஷன் கடைக்குப் போனாலும் அந்த ஊழியர்; ஒரு certificate வாங்கப் போகவேண்டுமென்றால் தாலுகா அலுவலகத்திலே அந்த ஊழியர்; பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால் ஆசிரியர்கள். இப்படி இந்த

98 சதவீதம் பேரும் அந்த அரசு ஊழியர்களை அணுகவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஒரு இரயில் இருக்கிறது என்று சொன்னால் அதை ஓட்டிச் செல்பவர் ஒரு ஓட்டுநர்தான். ஆனால், அந்த ஒரு ஓட்டுநரை நம்பி அதிலே ஆயிரக்கணக்கான பேர் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த அரசு ஊழியர்கள் 2 சதவீதமாக இருந்தாலும், அவர்களுடைய வாழ்க்கையில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ 98 சதவீதம் பேருக்கும் இடம் இருக்கிறது, பங்கு இருக்கிறது என்ற முறையில் இப்போது இருக்கின்ற சூழ்நிலையிலே அரசு பெருந்தன்மையோடு, அதை கருணையுள்ளத்தோடு அணுக வேண்டும்.

"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

என்பதுபோல்,

"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

என்கின்ற வள்ளுவன் வாக்கு பிரகாரம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு இல்லையென்று சொன்னாலும், அவர்கள் எங்கிருந்தாவது இந்தச் செய்தியைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள் என்கின்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனவே, தயவுசெய்து கருணையுள்ளத்தோடு அந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மின்சாரம். மாண்புமிகு மின் துறை அமைச்சர் இருக்கிறார். இலவச மின்சாரம் நீக்கப்படவில்லை என்பது அரசுத் தரப்பு வாதமாக இருந்தாலும், அது ஓரளவுக்கு உண்மை. சிறு விவசாயிகள், குறு விவசாயிகளுக்கு அரசே பணத்தைக் கொடுத்து அந்த மின் கட்டணத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் பெரிய விவசாயிகள் என்கின்ற ஒரு பாகுபாடு வைத்து, அதிலே ஏறத்தாழ சென்ற ஆண்டுகூட கணக்குச் சொல்லும்போது, 100 கோடி ரூபாய் அளவிற்குத்தான் இழப்பு இருக்கும் என்கின்ற ஒரு கணக்கை அரசுத் தரப்பிலே கூறினார்கள். எனவே, இந்த 100 கோடி ரூபாய் என்பது மிகப் பெரிய காரியம் அல்ல அரசுக்கு. எத்தனையோ நலத் திட்டங்களை, கோடிக்கணக்கான ரூபாயிலே செய்துகொண்டிருக்கின்ற இந்த அரசினால் இலவச மின்சாரம் இரத்து செய்யப்பட்டது என்கின்ற



ஒரு நிலையை மக்களிடத்திலே எடுத்துச் சொல்கின்ற ஒரு போக்கினைத் தவிர்க்க வேண்டும். நிச்சயமாக இந்த அரசு அதற்கு ஒத்துழைப்பாக இருக்க வேண்டும். எனவே, அதை நீங்கள் ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அந்த இலவச மின்சாரத்தைத் தொடர வேண்டும் என்கின்ற ஒரு நிலையை எடுக்க வேண்டும் என்று அன்போடு என் கோரிக்கையாக வைக்கின்றேன்.

அதுபோல வறட்சியைப் பொறுத்தளவிலே, சென்ற ஆண்டு போல் இந்த ஆண்டும் வறட்சி இருக்கிறது. அதிலே அரசின் மூலமாக துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் அறிகிறேன். எனவே, அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு, இந்த அரசு இந்த ஆண்டும் இந்த வறட்சியைப் போக்குவதற்கு உரிய நிவாரணத்தை எல்லா தரப்பு மக்களுக்கும் அளிக்கவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்பினைக் கொடுத்த நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய உளப்பூர்வமான, நன்றி சார்ந்த வணக்கத்தைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது பேசுவதற்கு பாரதீய ஜனதா கட்சியின் சார்பாக வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்போது விவசாயத்திற்கு அடுத்தபடியாக நெசவாளிகள் இருக்கிறார்கள். அவர்கள் வேலையற்று தவிப்பது அரசுக்கு மிக நன்றாகத் தெரியும், பல நன்மைகளும் செய்திருக்கின்றார்கள். இருந்தபோதிலும், அவர்களுடைய துயரத்தை நிரந்தரமாகத் தீர்ப்பதற்காக தமிழ்நாடு அரசு அவர்களுக்கு இடைக்காலத்தில் ஒரு நிவாரணமாக மாதம் ஒன்றுக்கு 20 கிலோ அரிசியை ஏழை நெசவாளிகளுக்கு அளித்தது. அந்தத் திட்டத்தை ஏழை நெசவாளிகளுக்கு, வேலைவாய்ப்பு வருகின்ற வரையிலே நீட்டிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசைப் பணிவோடு கேட்டுக் கொள்கின்றேன்.

முற்பகல் 10-45

***மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நெசவாளர்களுக்கு

பல்வேறு வகையிலே, வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய வகையிலே திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, தமிழக முதல்வர் அம்மா அவர்கள் வரும் நிதியாண்டிலும்கூட இலவச வேட்டி சேலை திட்டம் தொடரும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக 173 கோடி ரூபாயை தாயுள்ளத்தோடு அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆகையாலே நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய ஒரு நிலைமை உருவாகியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு ஏழை எளிய மாணவர்களுக்காக இலவச சீருடை என்கின்ற திட்டத்தைக்கூட தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இலவசமாகக் கொடுக்கக்கூடிய அந்த சீருடைகூட தரமானதாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலே பருத்தி இழையுடன் பாலியஸ்டர் இழை கலந்த துணிகளைக் கொடுக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்து, இதன் மூலமாக மட்டும் சுமார் 1½ கோடி மீட்டர் நீளம் உள்ள துணிகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். ஆகையாலே தொடர்ந்து நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.என். இலட்சுமணன்:** மிக்க நன்றி. இந்தப் பணி மேலும் மேலும் தொடர வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். நெசவாளர்கள் சமுதாயத்திலே முதியவர்கள், வேலை செய்ய முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வேலை செய்ய இயலாத முதிய வயதுடைய நெசவாளிகளுக்கு ஒரு பென்ஷன் திட்டத்தைக் கொண்டுவந்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதையும் இந்த அரசு செய்ய முன்வந்திருக்கிறது என்று தெரியும். இந்தப் பணி நீடித்து சிறக்க வேண்டும் என்பதுதான் வேண்டுகோள்.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டிலே குறிப்பாக சென்னை மாநகரிலே உள்ள குடிநீர்ப் பிரச்சினை எல்லோருக்குமே தெரியும். நான் விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை. நாளொன்றுக்கு சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசு 12 ஆயிரம் லாரிகளிலே சப்ளை செய்து ஒரு கோடி ரூபாய் செலவு செய்கின்ற நிலைமை இன்றையதினம் இருக்கிறது. ஆக கடுமையான முயற்சியை எடுக்க வேண்டியிருக்கிறது என்பதை இது தெளிவுபடுத்துகிறது. இந்தக் குடிநீர்ப் பிரச்சினை எதிர்காலத்திலே இன்னும்



2,3 மாதங்களிலே மேலும் மிக மிகக் கடுமையாக ஆகக்கூடும். குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடைக்காமல் சண்டைபோடுகின்ற அளவுக்கு போய்விடுமோ என்கின்ற பயம் இருக்கிறது. அதை நிவர்த்தி செய்வதற்கு அரசு மே மாதம் புதிய வீராணம் திட்டம் முடிவு அடையும் என்ற வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறது. அதோடு கிருஷ்ணா நதித் திட்டத்தையும் மிக விரைவுபடுத்தி சென்னை மாநகரத்தினுடைய மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

விவசாயத்திற்குப் பாசன வசதி சரியாக இல்லை. கோடைகாலம் வந்தால் காவிரி பற்றி நாம் சண்டை போடுகிறோம். வெள்ளம் வந்தால் மறந்துவிடுகிறோம். மீண்டும் பிரச்சினை. இதற்கு நிரந்தர தீர்வு காண வேண்டுமென்றால் நதிகளை தேசியமயமாக்கி கங்கை காவிரியை இணைக்கின்ற ஒரு திட்டம் கண்டிப்பாக கொண்டுவரப்பட வேண்டும். இது குறித்து கல்யாணராமன் என்கிற நிபுணர்கூட சொல்லியிருக்கிறார். இமயமலையிலே இருக்கின்ற அந்தப் பனிக் கட்டியினுடைய சக்தி இன்னும் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு தண்ணீர்ப் பஞ்சமே இந்தியாவிலே வராது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, இந்த நதிகளை இணைக்கின்ற திட்டத்திற்கு மத்திய அரசு முயன்றிருக்கிறது. 6 இலட்சம் கோடி ரூபாய் திட்டத்தில் அதைக் கண்டிப்பாக நடத்தி 2016-க்குள் முடிப்பது என்கிற ஒரு முடிவை எடுத்திருக்கிறது. தமிழக அரசும் இதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

கிராமங்களிலே இருக்கின்ற பள்ளிகள் இன்றும்கூட சரியான ஆசிரியர்கள் இல்லாது இருக்கின்றன. ஒரே ஆசிரியர் இரண்டாவது, மூன்றாவது வகுப்புக்கும், ஐந்தாவது, ஆறாவது வகுப்புக்கும், பாடங்கள் சொல்லிக்கொடுக்கின்ற அவல நிலை இருக்கின்றது. ஆகவே, தமிழ்நாடு அரசு கிராமத்திலே இருக்கின்ற அத்தனை பள்ளிகளிலும் ஆசிரியர்களை உடனடியாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதியிலே உள்ள ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கிறது என்பதை அறிந்த நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அர

உடனடியாக அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படவேண்டும், கிராமப்பகுதியிலே ஓர் ஆசிரியர் பள்ளிகள் என்ற நிலைமை இருக்கக்கூடாது என்ற அந்த அடிப்படையில்தான் இவ்வளவு நிதிநெருக்கடியிலும், மற்ற துறைகளுக்கெல்லாம் பணியிடங்கள் நிரப்பப்படாத நிலையில், இந்த ஆண்டு *12,000* ஆசிரியர்களை நிரப்புவதற்கு உத்தரவிட்டு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஆகிய இந்த இரண்டு நிலைப் பள்ளிகளிலும் *6,362* ஆசிரியர்களை நியமிப்பதற்கும், அதேபோல, ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் ஆகிய இந்த இரு நிலைப் பள்ளிகளுக்கும் *5,638* ஆசிரியர்கள் நியமிப்பதற்கும் உத்தரவிட்டு, அந்தப் பணியிடங்கள் நிரப்புவதற்கான பணிகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் தேர்வாணையத்தின் மூலமாகவும், ஆரம்பப் பள்ளிகளுக்கு நம்முடைய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக பதிவு மூப்பு அடிப்படையிலும் இப்பொழுது தேர்வுப் பணிகள் நடந்து வருகின்றன. எனவே, இந்தப் பணிகள் முடிவடைந்தவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சொன்னதைப்போல பள்ளிகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை என்ற அந்த நிலைமை நிச்சயமாக இருக்காது.

**திரு. கே.என். இலட்சுமணன்:** நன்றி ஐயா. மேலும் நம்முடைய தொகுதியினுடைய பிரச்சினைகள் பற்றி ஓரிரு வார்த்தைகள் பேசவேண்டுமென்று நான் நினைக்கிறேன். நம்முடைய மைலாப்பூரிலே இருக்கின்ற அந்த தெப்பக்குளம் மிகப் பிரசித்தி பெற்றது. அங்கே 12 மாதமும் நீர் இருந்த காலம் ஒன்று உண்டு. இப்பொழுது வறண்டு கிடக்கின்றது. தெப்பக்குளத்திலே நீர் இல்லாத காரணத்தினாலே அந்த சுற்றுப்புறத்திலே மைலாப்பூர் தொகுதியிலே நிலத்தடி நீர் வருவதற்கு வாய்ப்பு இல்லாமல் கடுமையான தண்ணீர் பிரச்சினை, வறட்சி இருக்கின்றது. இப்பொழுது நம்முடைய தமிழ்நாடு அரசு கும்பகோணத்திலே விசேஷ ஏற்பாடு செய்து மகாமகம் குளத்திலே சீர் செய்து தண்ணீர் நிரப்புவதுபோல, நம்முடைய மைலாப்பூர் தொகுதியிலே இருக்கின்ற தெப்பக்குளத்தையும், சித்திரகுளத்தையும் நீர் நிரப்பி அங்கே இருக்கின்ற மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையை ஓரளவு தீர்க்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு மயிலை கடற்கரையிலே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் கே.என். இலட்சுமணன் அவர்களிடமா?



***திரு. கோ.சி. மணி:** மகாமக குளத்தில் தண்ணீர் நிரப்பியதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். நேற்று வரையில் அங்கு தண்ணீர் இருந்ததை நான் பார்க்கவில்லை. அதை இப்பொழுது நிரப்பப்போகிறார்களா என்ன என்பதைக் கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் நல்லது.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாமகம் வேலை முடிந்து இப்பொழுதுதான் மணல் நிரப்பிக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு என்று காவிரியிலே தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டிருக்கிறது. மகாமகம் திருவிழாவன்று நிச்சயமாக காவிரியிலே தண்ணீர் விடப்பட்டு, மகாமகம் குளத்திற்குத் தண்ணீர் வரும் என்பதை நான் அன்போடு தலைவர் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மைலாப்பூர் கடற்கரைப் பகுதியை மிக அழகாக அந்த மெரினா கடற்கரைபோல் செய்ய இந்த அரசு திட்டமிட்டு இருக்கிறது. மேலும் மைலாப்பூர் கடற்கரையிலே ஒரு சிறந்த சிறுவர் பூங்காவை அமைக்க வேண்டும். அங்கே சிறுவர்களுக்கு விளையாடுவதற்கு, பொழுது போக்குவதற்கான திட்டங்களை எல்லாம் வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பினை அளித்தமைக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துகளைச் சொல்ல நான் விழைகின்றேன்.

பொதுவாக, சென்ற ஆண்டு *2003-04* ஆம் ஆண்டுக்கான மேதகு ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிற சில பணிகளும், திட்டங்களும் போன்று, இந்த ஆண்டு சொல்லப்பட்டிருக்கிற மேதகு ஆளுநர் உரையில், வருகிற ஆண்டில் ஒரு ஆட்சியினுடைய திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளைக் குறித்து கொள்கை ரீதியாக முன் வைக்கின்ற ஒரு பொருளாகத்தான் மேதகு ஆளுநர் அவர்கள் அறிக்கையை முன் வைக்கின்றார்கள்.

குறிப்பாக, ஆளுநர் உரையில், சமுதாயப் பாதுகாப்பு வளையம் வலுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், கடந்த காலத்தில் மாநில அரசு பொருளாதாரச் சீர்திருத்தத்தைச் செய்ததாலும் உலக வங்கியால் வெகுவாகப் பாராட்டப்பட்டுள்ளது என்பதும் முக்கியமாக மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக என்ன காரணத்தினாலே உலக வங்கி இம்மாநில அரசைப் பாராட்டியிருக்கிறது என்று நான் எண்ணிப் பார்த்தேன். ஆளுநர் உரையைத் திரும்பத் திரும்பப் படித்தேன். அநேகமாக இந்த ஆண்டு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இலவச மின்சாரத்தை இரத்து செய்ததனாலேயும், இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தை முற்றிலும் கைவிட்டதனாலேயும்...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப அவர்கள் இலவச மின்சாரம் இரத்து செய்யப்பட்டதாக குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அதை ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள், நான்கூட அந்தப் புள்ளி விவரங்களை நேற்றைக்குக்கூடச் சொன்னேன். இன்னும் 2800 கோடி ரூபாய் தொடர்ந்து விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** தலைவர் அவர்களே, அதேபோன்று, 5,000 ரூபாய் வருமானம் உள்ள குடும்பங்களுக்குக் கௌரவ அட்டை என்ற பெயரால் அத்தியாவசியமான பொருள்கள் வழங்காமலிருப்பதும், ஏழை எளியவர்கள் அந்த கௌரவ அட்டையைக் கையிலே வைத்துக் கொண்டிருப்பதனாலேயும், அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் போராட்டங்கள்கூட, மத்திய அரசினுடைய சலுகைகளை முற்றிலுமாக மாநில அரசு மறுத்ததனாலேயும், உலக வங்கி பாராட்டி இருக்கிறது என்று நான் கருதுகிறேன். இல்லை என்று சொன்னால், உலக வங்கி இந்த அரசைப் பாராட்டியிருப்பதற்கு எள்ளளவிலேயும் இடமில்லை.

அதே நேரத்தில், 12-வது மத்திய நிதிக் குழுவில் நம்முடைய மாநில அரசு 29 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக மாநில அரசுக்கு நிதி கோரப்பட்டிருப்பதாகச் சொல்வதை நான் வரவேற்கிறேன். நல்ல அம்சம். போராடிப் பெற்றுத் தாருங்கள்.

அதோடு, சென்ற மேதகு ஆளுநர் உரையிலேயும், நிதிநிலை அறிக்கையிலேயும் பிரதானமாகக் குறிப்பிடப்பட்டிருப்பது என்பது



உள்ளாட்சி அமைப்புகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், மாவட்ட ஊராட்சிகளுக்கும் நிதி வழங்குவதிலே மாதாமாதம் அவர்களுக்கு கணக்கிட்டு நிதி வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இன்றுவரையிலே 9 மாத காலம் ஆகிவிட்டது. எந்த ஊராட்சி ஒன்றியத்திற்கும் நிதி வழங்கப்படவில்லை; ஊராட்சிகளுக்கு நிதி வழங்கப்படவில்லை; மாவட்ட வளர்ச்சித் திட்டக் குழுவுக்கு நிதி வழங்கப்படவில்லை. ஆக, சென்ற தடவை கவர்னர் உரையிலே சொல்லப்பட்டதற்கு மாறாக இந்த ஆட்சியும் அரசாங்கமும் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் வரவில்லை. இன்னும் சொன்னால், கிராமப் புறங்களிலே 30 சதவீதம் பெண்களே ஊராட்சிமன்றத் தலைவர்களாக இருக்கக்கூடியவர்கள் இப்போது வீதியிலே வந்து நிதியில்லை என்று போராட வேண்டிய அவசியம் இருக்கிறது. ஏன் வழங்கவில்லை? என்ன சாதனை? ஆக, சென்ற கவர்னர் உரையில் சொன்னது இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று இந்த ஆட்சியைப் பார்த்து நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குடி தண்ணீர் இல்லை; சாலை வசதி இல்லை. சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள், ஊராட்சியினுடைய சாலைகள் பள்ளமும், படுகுழியுமாக இன்றையதினத்திலே சீர்கெட்ட நிலையிலே இருக்கின்றன. வேண்டும் என்றால், ஆளும்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய அரசாங்கத்திற்கு சாதகமாக பேசாமல் இருக்கலாமே தவிர, உண்மையை உணரக்கூடியவர்கள் பல பேர் இருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அவர்கள் இல்லை என்று சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்) ஆகவே, இதுவரையிலும் நிதி இல்லை. (குறுக்கீடுகள்) ஒரு கிராமத்திலே.... (குறுக்கீடுகள்)

முற்பகல் 11—00

***மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் கூறுவது குடிதண்ணீரைப் பொறுத்த வரையிலே இவர் எந்த அளவிற்கு இவர் தொகுதிக்கு செய்கிறார் என்று தெரியவில்லை. என்னைப் பொறுத்த அளவிலே எங்கள் தொகுதியைப் பொறுத்த அளவிலே, நிச்சயமாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், மினி பம்ப் என்று சொல்லப்பட்ட பம்புகள் எல்லாம் அதிகப்படியாக யாருமே, எதிர்க்கட்சிகள்கூட குறை கூறாத அளவிற்கு இன்றைக்குக் குடிநீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது

[திரு. எம். ராதாகிருஷ்ணன்] [2004 பிப்ரவரி 9

என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சாலை வசதியை, சொல்லப்போனால், கடந்த தி.மு.க. ஆட்சியிலே உதாரணமாக நான் மற்ற மாவட்டங்களை குறிப்பிடவில்லை. எங்கள் மாவட்டத்திலே எனது தொகுதியிலே எல்லாம் 5 வருட காலமாக சாலை மேம்பாடே செய்யப்படவில்லை. 1991-1996-லே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே மேம்படுத்தப்பட்ட சாலைகள் எல்லாம் இப்போதுதான் 2001-க்குப் பின்புதான் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாகச் சொல்லப்போனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பஸ்கள் ஓடாத ரோடுகளுக்கு எல்லாம் இன்றைக்கு சாலை வசதி செய்கிற அடிப்படையிலே எனது தொகுதிக்கு 1 ½ கோடி ரூபாய்க்கு மேம்பாடு செய்வதற்கான நிதி கொடுக்கப்பட்டு டெண்டர் விடக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அந்த அடிப்படையிலே இந்த ஆட்சியைக் குறை சொல்ல வேண்டும் என்ற நோக்கோடு மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறார் என்பதை இந்த அவைக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள். பதில் சொல்லட்டும், அவர் சொல்லட்டும். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு நன்றி. காரணம் என்னவென்று சொன்னால், (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி பேசட்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பழனிசாமியை பேச விடுங்கள். நீங்கள் ஏன் இடையிலே புகுந்து கொள்கிறீர்கள். பழனிசாமி பேசுங்கள். (குறுக்கீடுகள்) பழனிசாமி பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை நான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள் அண்ணே. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** வேண்டாம் அண்ணே, உட்காருங்கள் அண்ணே. நான் பேசிக்கொள்கிறேன். விடுங்கள் அண்ணே. (குறுக்கீடுகள்) உட்காருங்கள் அண்ணே. (குறுக்கீடுகள்)



2004 பிப்ரவரி 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சித் தலைவர் பேசும்போது விளக்கம் சொல்வார்.

**திரு. ஜி. பழனிசாமி:** பொதுவாக அமைச்சர் அவர்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள் பழனிசாமி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசவிருக்கிறார்கள். அவர்கள் பேசுகிறபோது சில விளக்கங்களைச் சொல்லலாம். இப்போது ஒன்றும் இல்லை. பழனிசாமி பேசுங்கள். (குறுக்கீடுகள்)

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாலைகள் எல்லாம் வெண்ணெய் போட்டு வெண்ணெய் வழிக்கக் கூடிய அளவிற்கு இருக்கிறது என்று சொன்னதில் தப்பு இல்லை. ஏன் என்றால், அவர் ரிப்ளை பண்ணியாக வேண்டும். ஆனால், தயவு செய்து அமைச்சர் அவர்கள் எங்கேயாவது கொஞ்சம் ஊர்களுக்குப் போய் பார்த்தால் மழைநீர் சேகரிப்பு வீடுகளில் இல்லை. ரோடு பூராவும் மழைநீர் சேகரிப்பாக இருக்கிறது என்பது தெரியும் அந்த மாதிரி இருக்கிறது. அதைச் சொல்வதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, இப்பொழுதே நீங்கள் ஆரம்பிக்கக்கூடாது. பழனிசாமி பேசுங்கள், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைத் தலைவர் சில ரோடுகள் மழை நீர் சேகரிக்கிற அளவிற்கு குண்டும் குழியுமாக, பள்ளமாக இருப்பதாகச் சொல்கிற அத்தனை ரோடுகளும் அவருடைய ஆட்சிக் காலத்திலே போடப்பட்டவைதான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த பழுதுபட்ட பாதைகளை இப்போது பராமரிக்க வேண்டிய கட்டாயத்திற்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி பேசுங்கள். பேசுங்கள். துரைமுருகன் நீங்கள் பேசும்போது விளக்கம் சொல்லலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆட்சியாளர் என்பவர் பொருளாதாரத்தை ஒரு நல்ல நிலையிலே கொண்டு போக வேண்டும். ஆனால், கடந்த 5 ஆண்டு

காலத்திலே முந்தைய ஆட்சியிலே அது இருந்ததா என்றால் இல்லை. பொருளாதாரத்தை சீர்குலைத்து, தேவையான அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யாமல், எந்த அளவிற்கு மக்களுடைய வரிப்பணத்தை வீணடிக்க முடியுமோ, அந்த அளவிற்கு வீண் அடித்தார்கள். ஆனால், இன்றைக்கு பொருளாதாரம், சீர்படுத்தப்பட்டு அடிப்படைத் தேவைகள் அத்தனையும் நிறைவேற்றப்படுவதை நீங்கள் கண்கூடாக நிச்சயமாக உணர முடியும். சென்னையை எடுத்துக் கொண்டாலுங்கூட (குறுக்கீடுகள்) நான் சொல்கிறதை கொஞ்சம் கவனியுங்கள். சென்னையை எடுத்துக்கொண்டாலுங்கூட, முந்தைய உங்களுடைய ஆட்சியிலே எந்த அளவிற்கு மோசமான சாலைகள் போடப்பட்டன? பத்திரிகைகள் எல்லாம் எழுதின. (குறுக்கீடுகள்) எப்படிப்பட்ட வேலைகள் எல்லாம் இன்றைக்கு நடந்துகொண்டிருக்கின்றன. அன்றைக்கு 1991-96 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிக்கு நல்ல நிதிநிலைமையை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தந்தார்கள். ஆனால் உங்களுடைய ஐந்தாண்டு கால ஆட்சியிலே அந்த நிதி நிலைமையை நாசமாக்கினீர்கள். 100 கோடி ரூபாய் டுபிட்கோ மூலமாகப் பெற்று இன்றைக்குச் சாலைகள் எல்லாம் போடப்பட்டு வருவதை எல்லாம் நீங்கள் உணர முடியும். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-05*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே மட்டுமல்ல. தமிழ்நாட்டிலே சிமெண்ட் ரோடு போட்டுக் காட்டியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) சென்னையிலே எல்லா இடங்களிலும் சிமெண்ட் ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது சொன்னார்கள். எங்களிடத்திலே நிதி இல்லை. எனவே maintenance இல்லை என்றார். அதற்காக நன்றி.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது உலகத்திற்கே தெரியும் ** சிமெண்ட் கம்பெனியினுடைய சிமெண்ட் விற்க வேண்டுமென்பதற்காக சாலைகள் போடப்பட்டன என்று. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பேசுங்கள், பேசுங்கள். சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. பரிதி இளம்வழுதி:** அவர் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும். (குறுக்கீடு) அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆட்சியில் இருக்கிறபோது ஏதாவொரு சிமெண்ட் கம்பெனியை ** என்று சொல்லியிருக்கிறார். ஒன்று மரியாதையாக அவர் நிரூபிக்க வேண்டும். இல்லாவிட்டால் வாபஸ் வாங்க வேண்டும். இல்லாவிட்டால் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்) It is wrong. It is highly...(Interruption) How can he say?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** நான் சொல்கிறேன். உங்களுக்கு ** நீங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்கள் பேசியது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வதாக இருந்தால் சொல்லாம். (குறுக்கீடுகள்) இல்லை, துரைமுருகன், நீங்கள் ** என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. பழனிசாமி, பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நான் சொல்ல வந்தது என்பது...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு மறு பரிசீலனை செய்யவேண்டும். ஏற்கெனவே அது அவையிலே எழுப்பப்பட்டு, விசாரணையில் இருக்கிறது. எனவே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது விசாரணையில் இருக்கிறது என்பதைப் பற்றி இல்லை. (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் இருக்கிற சாலைகளை நீங்கள் சீர் செய்ய வேண்டும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு நிதி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஜி. பழனிசாமி] [2004 பிப்ரவரி 9

ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் சொன்னார். அமைச்சர் தொகுதியில் வேண்டுமென்றால் ஒரு கோடி ரூபாய்க்கு மேலே செலவு செய்திருக்கலாம். (குறுக்கீடுகள்) இருங்கள். (குறுக்கீடு) இருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, அதாவது நீங்கள் பொதுவாக இல்லாமல், குறிப்பிட்டு ஏதாவது சில சாலைகள், இந்தச் சாலை பழுதாகியிருக்கிறது; இங்கே குடிநீர் இல்லையென்று, அப்படிப் பேசலாம். ஒட்டுமொத்தமாகச் சொல்லும்போது அவர்கள் அதற்கு விளக்கம் சொல்ல வேண்டிய நிலைமை வருகிறது இல்லையா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் 234 தொகுதிகளையும் தன் தொகுதியாகக் கருதுபவர்கள். எனவே அதிலே பாரபட்சம் நிச்சயமாகக் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ள நிலைமையைச் சொல்கிறேன். நான் மாண்புமிகு அமைச்சர் பெருமகனைப் பார்த்துக் கேட்கின்றேன். அநேகமாக, நீங்கள் எல்லாம் உங்கள் மாவட்டத்தைத் தவிர வேறு மாவட்டத்திற்குப் போன அமைச்சர்கள் கிடையாது. நீங்கள் தமிழ்நாடு பூராவும் போய் இருந்தால் உங்களுக்கு நிலைமை தெரியும்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் தஞ்சை மாவட்டத்திற்கு வந்த நேரத்தில், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி சாலைகள் எல்லாம் மிக மோசமாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இருந்ததை இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் இப்போது சாலைகள் எல்லாம் செப்பனிடப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர்கள் மீது மிக மதிப்பு வைத்திருக்கிறவன்.



2004 பிப்ரவரி 9] [திரு. ஜி. பழனிசாமி]

அமைச்சர்களைக் குற்றம் சொல்ல வேண்டுமென்பதற்காக அல்ல. உங்களை நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் தொகுதி தவிர, உங்கள் மாவட்டம் தவிர, தமிழ்நாடு பூராவும் நீங்கள் போங்கள். தமிழ்நாடு பூராவும், நீங்கள்—அமைச்சர்கள்—(குறுக்கீடுகள்) ஆனால் எந்த அமைச்சரும் போகிறதில்லையே? (குறுக்கீடுகள்) எந்த அமைச்சரும் எங்கேயும் போய்ப் பார்த்ததில்லை. அதனால்தான் தெரியவில்லை. அதேபோன்று....

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** எந்த அமைச்சரும் போய்ப் பார்ப்பதில்லையே? (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய கருத்தை அவர்கள் சொல்லட்டும், ஆனால், எங்களுக்கு அறிவுரை அவர்கள் சொல்லத் தேவையில்லை.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) ஒரே ஒரு கருத்தைச் சொல்கிறேன். இப்பொழுது இங்கே பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் ** என்று கூறினார்கள். கடந்த 5 ஆண்டு காலத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலே ஏறவில்லை. அவர் சொன்னது அவைக் குறிப்பிலே ஏறவில்லை. திரு. பழனிசாமி, பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிவுரை கூறவில்லை. என்னுடைய கடமை நான் அமைச்சரிடம் கேட்கின்றேன். சட்டமன்றத்திலே ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு அமைச்சரிடத்திலே கேட்கின்ற உரிமை இருக்கிறது. அந்த உரிமையில்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நான் கேட்கின்றேன். அதனாலே அறிவுரை கூறுகிற அளவிற்கு எனக்கு அறிவு, ஆற்றல், திறமை இருப்பதாக நான் உங்களிடத்திலே சொல்லிக்கொள்ளவில்லை. அதை நான் விரும்பவும் மாட்டேன். அதேநேரத்தில்... (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் அறிவுரையாக அல்ல. குற்றச்சாட்டாக சொல்லியிருக்கிறார். எந்த அமைச்சர்களும் மாவட்டங்களிலே சுற்றுப்பயணம் செய்வதில்லை என்ற ஒரு பெரிய குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறார். நம்முடைய அமைச்சர்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் செல்கிறோம். ஆனால் நாங்கள் கலந்துகொள்கிற அரசு நிகழ்ச்சிகளில் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளாததினாலே (குறுக்கீடுகள்) எங்கள் நிகழ்ச்சிகளில் அவர்கள் கலந்துகொள்ளாததினாலே நாங்கள் மாவட்டங்களில் எங்கு போகிறோம், எந்த விழாக்களில் கலந்து கொள்கிறோம், என்னென்ன பணிகளைத் தொடங்குகிறோம் என்பது அவர்களுக்குத் தெரிவதற்கு நியாயம் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. பழனிசாமி பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களைப் பொறுத்தமட்டில், குறிப்பாக 999 பேர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒரு துயரமான சம்பவத்தை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த 999 பேர்களிலே 30-க்கு மேற்பட்ட அரசு ஊழியர்கள். மரணமடைந்திருக்கிறார்கள். இதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். 30-க்கு மேற்பட்டவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு, இறந்துபோய் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் அரசு பணியிலே இருந்ததாகக் கருதி, அவர்கள் பணியிலே இருந்த காலத்தில் மரணமடைந்தால், என்ன சலுகைகள் வழங்கப்பட வேண்டுமோ, அந்தச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்கூட நேற்றையதினம், அதற்கு முந்தைய தினம், அரசு ஊழியர்களை நான் பேச்சுவார்த்தைக்கு பலமுறை அழைத்தேன். ஆனால் அவர்கள் யாரும் கலந்துகொள்ளவில்லை என்று ஒரு உண்மைக்கு மாறான செய்தியை, இந்த அவையிலே...





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது உண்மையான செய்தி. அரசுப் பணியாளர்கள் சார்பில் என்னை வந்து சந்தித்தவர்களிடம்கூட இதை நான் கூறினேன். அவர்கள் பார்க்க விரும்பவில்லை. அவர்கள் முடிவு எடுத்தார்கள். இதை நான் அவர்களிடம் நேரிலே பேசினேன். அந்தப் பேச்சுவார்த்தையில் நீங்கள் கலந்துகொள்ளவில்லை. எது உண்மை, எது உண்மை இல்லை என்பது உங்களுக்குத் தெரியாது. காரணம் அதில் நீங்கள் கலந்துகொள்ளவில்லை. நான் சொல்லி அனுப்பினேன். வரவில்லை. ஒரே ஒரு சங்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் வந்தார்கள். மற்றவர்கள் புறக்கணித்தார்கள். உண்மைக்கு மாறான தகவல் என்று தவறான தகவலை அவைக்கு தயவு செய்து கூறவேண்டாம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று அவர்கள் மறுத்திருக்கிற காரணத்தால் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். 30-க்கு மேற்பட்டவர்கள் அரசு ஊழியர்கள் மரணமடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த உரிய சலுகைகளை நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, நெசவாளர்களைப் பொறுத்தமட்டில் இன்றைக்கு சிட்டா நூலுக்கு 10 சதவிகிதம் மத்திய அரசு உயர்த்தி இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொல்கிறபோதெல்லாம் அவர்கள் எழுதியிருப்பதாகச் சொல்கிறார்கள். இதுவரையிலும் இந்தச் சலுகைகள் கிடைக்கப்பெறவில்லை. பொதுவாக 12 சதவிகிதம், 13 சதவிகிதம் நெசவு கூட்டுத் தொழிலிலே கடனை வாங்கி அவர்கள் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கோ-ஆப்டெக்ஸிலே அவர்கள் உற்பத்தி செய்த துணியைக் கொடுத்து 9 மாத காலம் ஆகிறது. இவர்கள் வட்டிக்கு வாங்கி, நெய்து கொடுத்திருக்கிற வேலைகளுக்கும், சேலைகளுக்கும் இதுவரை பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. அதையும் நீங்கள் வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

எனக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர் இங்கே பேசியிருந்தபோதிலுங்கூட, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு மழை என்பது எல்லா மாவட்டங்களிலும் மிகக் குறைந்திருக்கிறது. எல்லா

[திரு. ஜி. பழனிசாமி] [2004 பிப்ரவரி 9

மாவட்டங்களிலும் இப்பொழுதே வறட்சி தொடங்கியிருக்கிறது. பொதுவாக காவிரி டெல்டா பகுதியிலே மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய இன்றைக்குத் தொடங்கி இருக்கக்கூடிய, கிருஷ்ணகிரி மாவட்டம் உட்பட 29 மாவட்டங்களில் இன்றைக்கு மழையின் அளவைப் பார்த்தால், அரசாங்கத்தினுடைய கணக்கு, உங்களுடைய கணக்கின்படி பார்த்தால்—என்னுடைய கணக்குகூட கிடையாது —மிக மிகக் குறைந்திருக்கிறது. ஆகவே இந்த 29 மாவட்டங்களையும் நீங்கள் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும். ஏனென்றால் மத்திய அரசிடத்திலே நிதி கோரப்பட்டிருக்கிறது. 1,582 கோடி இன்றைக்கு வறட்சி நிவாரணப் பணிக்காக கோரப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு ஆளுநர் அவர்களுடைய உரையிலே விவசாயிகளுக்கு ஒரு நிம்மதி இருந்தது. அதாவது விளையாத, விளைச்சல் இழந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ஒரு ஏக்கருக்கு ஐந்தாயிரம் என்று 400 கோடி ரூபாயை மத்திய அரசிடத்திலே கேட்டீர்கள்.

இன்றைக்கு ஒட்டுமொத்தமாகச் சொல்லியிருக்கிறீர்கள்; ஏனென்றே புரியவில்லை. சென்ற ஆண்டைவிட என்ன பசுமைப் புரட்சி தமிழகத்திலே தலைதூக்கி இருக்கிறதா? சென்ற ஆண்டைவிட மழை குறைந்திருக்கிறது; சென்ற ஆண்டைவிட அதிகமாக வறட்சி ஏற்பட்டிருக்கிறது; சென்னை உள்பட 30 மாவட்டங்களில் இப்பொழுது குடிதண்ணீர்ப் பிரச்சினை கடுமையான பிரச்சினையாக இருக்கிறது. மேல்நிலைத் தொட்டி இருக்கலாம்; கைபம்ப் இருக்கலாம்; இன்னும் பார்த்துச் சொன்னால் கூட்டுக் குடிநீர்த் திட்டம்கூட இருக்கலாம். ஆனால், பைப்-ஐத் திறந்தால் தண்ணீர் வரவில்லை. ஏதாவது மாற்று ஏற்பாடு செய்ய வேண்டாமா? இதற்கு மத்திய அரசிடத்திலே ஓர் இழப்பீட்டுத் தொகையை நீங்கள் கேட்டிருந்தபோதிலுங்கூட, அவ்வளவு மோசமான நிலைமைகள் இருக்கின்றன. ஆனால், இந்த கவர்னர் உரையிலே, பழையவற்றை நீங்கள் கைவிட்டு விட்டீர்கள். தென்னக நதிகளை இணைப்பது குறித்து சென்ற தடவை குறிப்பிடப்பட்டிருந்தது. இன்றைக்குக் கைவிடப்பட்டிருக்கிறது. ஆக, இப்படிப்பட்ட நிலைமைகளிலிருந்து இந்த அரசு தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்றுதான் இன்றையதினம்...



2004 பிப்ரவரி 9]

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு ஐந்து மணித்துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, என்னுடைய நேரத்தில் அவர்கள்தான் அதிகம் பேசினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, 5 மணித்துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அது சரி, குறுக்கீடுகள் இல்லாமல் நீங்கள் பேசவேண்டும். அதற்கெல்லாம் நான் கணக்குப் பார்க்க முடியாது. (குறுக்கீடு) மற்ற கட்சித் தலைவர்கள் பேசவேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, இல்லை, அமைச்சரும், அவர்களும் பேசியதற்கு நான் பொறுப்பில்லை. எனக்குள்ள நேரத்தைக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற எல்லாக் கட்சித் தலைவர்களும் பேசவேண்டும். இன்னும் 5 மணித் துளிகளில் முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, Ministers மட்டும் 5 நிமிடங்கள் குறுக்கீடுகள் பண்ணியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அடுத்து நீங்கள் பேசுகிற வாய்ப்பை வேண்டுமானால் அவருக்குக் கொடுங்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமா அவர்கள் அவையிலேதான் இருக்கின்றார். எந்த அளவிற்கு எதிர்க்கட்சியிலே குறுக்கீடுகள் செய்தார்கள் என்பதை நீங்கள் கவனிக்கவில்லை போலும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, பேசி முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி கடுமையான வறட்சியாக இருக்கிறது. காவிரி டெல்டா பகுதிகளில் நிலங்களை விளையாமல் போட்டார்கள். இன்னும் பல இடங்களில் பார்த்தோம் என்று சொன்னால், நட்ட பயிர்கள் எல்லாம்

[திரு. ஜி. பழனிசாமி] [2004 பிப்ரவரி 9

கருகி விட்டன; மோசமான நிலைமை இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. இல்லையென்றாலும், அரசினுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். அநேகமாகப் பார்த்தோம் என்று சொன்னால், சென்ற ஆண்டு 18 ரூபாய் என்று இருந்த நில வரியை, இன்றைக்கு 70 ரூபாய் என்று உத்தரவு போட்டு வசூல் செய்கிறார்கள். என்ன முன்னேற்றம்? நில வரி 18 ரூபாயிலிருந்து இன்றைக்கு 70 ரூபாய் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களிலே மோசமான நிலைமை; எந்த விவசாயியும் கட்டவே முடியவில்லை. நட்ட பயிர்கள் எல்லாம் கருகிப் போன நேரத்திலே இப்படியெல்லாம் நீங்கள் நில வரியைப் போட்டு அவர்களை ஜப்தி செய்ய வேண்டுமென்று சொல்லி, அவர்களை சோதனை செய்வது சரிதானா? இல்லை, ஒரு குழந்தைக்கு (குறுக்கீடு) இல்லை, ஆதாரமாகச் சொல்கிறேன். அரசினுடைய ஜி.ஓ.; நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது வறட்சி நிவாரண நிதி கொடுக்கும்போது—கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே பேசும்போதுகூட மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகக் கூறினார்கள். அந்த வரிகளை இரத்து பண்ணவேண்டுமென்று நீங்களே கோரிக்கை வைத்தீர்கள். ஒரு வறட்சி நிவாரண நிதி கொடுக்கும்போது, கண்டிப்பாக இதுபோன்ற வரிகள் இரத்துச் செய்யப்படும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** இதே அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். இப்போது உத்தரவை நீங்கள் போடுங்கள். இந்தச் சட்டமன்றத்தின் மூலமாக அந்த வாக்குறுதியைக் கொடுங்கள். அந்த விவசாயிகள் நிம்மதியாக இருப்பார்கள். நான் வந்திருக்கிற தகவலை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இதையாவது நான் சொல்லவேண்டாமா? ஒரு சட்டப்பேரவை உறுப்பினர் என்ற முறையிலே இதையெல்லாம் சொல்லவேண்டாமா? இப்போது ஓர் உத்தரவு போடுங்கள் நீங்கள். இன்றிலிருந்து வசூல் பண்ணக்கூடாது என்று சட்டமன்றத்திலே சொல்லுங்கள். எந்த அதிகாரியும் போகமாட்டார்கள். இப்போது 70 ரூபாய் என்று உயர்த்தி இருக்கிறீர்களே, எப்படி உயர்த்தினீர்கள்? 52 ரூபாய் உயர்த்தி இருக்கிறீர்கள். ஆகையால், இந்த நில வரியை நீங்கள் இரத்துச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2004 பிப்ரவரி 9] [திரு. ஜி. பழனிசாமி]

அதேபோன்று கூட்டுறவு வங்கிகள். அநேகமாகப் பார்த்தால் தஞ்சாவூர், சிவகங்கை, தருமபுரி, தூத்துக்குடி, நெல்லை போன்ற மாவட்டங்களில் மத்திய வங்கிகள் கலைக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. இன்றைக்கு வங்கிகள் எல்லாம் கலைக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஏன் கலைக்கிறீர்கள்? இப்படி வங்கிகளை எல்லாம் கலைத்துவிட்டால் என்ன பண்ணமுடியும்? அப்படியொரு மோசமான போக்கு இந்த அரசிடத்திலே இருக்கிறது.

நம்முடைய மரியாதைக்குரிய கல்வி அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். இந்த 'சர்வ சிக்ஷா அபியான்' திட்டத்தைப் பார்த்தோம் என்று சொன்னால், கட்டடத்தைக் கட்டி முடித்தவுடன் எல்லா ஆசிரியர்களையும் போடவேண்டுமென்று மத்திய அரசு சொல்கிறது. 6000 கோடி ரூபாய்க்கு மேலே மத்திய அரசு பணம் கொடுத்ததாக அவர்கள் ஒரு பட்டியலைச் சொல்கிறார்கள். நீங்கள் இந்தப் பள்ளிக்கூடத்திலேயிருந்து ஆசிரியரை அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் போட்டுவிட்டு இந்தப் பள்ளிக்கூடத்தைக் காலியாக்கி விட்டீர்கள். இங்கேயும் பிள்ளைகள் படிக்கமுடியவில்லை; அங்கேயும் பிள்ளைகள் படிக்கமுடியவில்லை. நான் அமைச்சரிடம் நிறைய இடங்களில் சொல்லியிருக்கிறேன்; சட்டமன்றத்திலே பேசுவதற்காகச் சொல்லவில்லை. இதைப் பேசவில்லையென்றால், என்னுடைய தொகுதியிலே என்னுடைய மக்கள் என்னை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தலைமை ஆசிரியர்களே கிடையாது. ஓராண்டுக் காலமாக தலைமை ஆசிரியர் கிடையாது, உண்டா? 23 மருத்துவர்கள் கிடையாது என்னுடைய மருத்துவமனையிலே, ஒரு தாலுகா மருத்துவமனையிலே, பட்டியல் இருக்கிறதா, இல்லையா? நான் கொடுத்திருக்கிறேனா இல்லையா? (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** இல்லை, இல்லை. இதுசம்பந்தமாக நான் உங்களிடம் தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் கடந்த 1 வாரத்திற்கு முன்னாலே கிட்டத்தட்ட 532 மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். உடனடியாக இந்தக் காலியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. லட்சுமணன்

அவர்கள் பேசுகிறபோதுதான், ஆரம்பப் பள்ளிகளுக்கும், நடுநிலைப் பள்ளிகளுக்கும் எவ்வளவு ஆசிரியர்கள் நியமிப்பது என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற அந்தப் புள்ளிவிவரத்தைக்கூடச் சொன்னேன். இதுவரை அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் பற்றாக்குறை இருந்தது என்பது உண்மைதான். எனவே, இந்த ஆண்டு நிதிப் பற்றாக்குறை இருக்கிற நிலைமையிலும், ஆரம்பப் பள்ளிகளிலே இருக்கிற பணியிடங்களை நிரப்புவதற்கு நான் ஏற்கெனவே சொன்னதைப்போல *5,638* ஆசிரியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறோம். இப்போது அந்தப் பணி தொடங்கப்பட்டுவிட்டது. அதுபோல மேல்நிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் *6,362* ஆசிரியர்களை நியமிப்பதற்கு உத்தரவிட்டு அந்தப் பணியும் இப்போது தேர்வு வாரியத்தின் மூலமாக நடந்து வருகிறது. இன்னும் ஓரிரு மாதங்களில் இந்த *12,000* ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுவிடும்.

**திரு. ஜி. பழனிசாமி:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**திரு. சி. ஞானசேகரன்:** இந்த அறிவிப்பு எலெக்ஷனுக்காக..

***மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஞானசேகரன் அவர்கள் இது எலெக்ஷனுக்காக என்று சொல்கிறார்கள். இது தேர்வு வாரியத்தின் மூலமாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு, தேர்வு நடத்தப்பட்டு ஆறு மாதத்திற்கு முன்னாலே இது நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டபடியால், இது தேர்தலுக்காக உங்களை ஏமாற்றுவதற்காகவோ அல்லது மக்களை ஏமாற்றுவதற்காகவோ அல்ல. இது தேர்தலுக்காகத் தொடங்கப்பட்ட பணி அல்ல. இது ஆசிரியர்கள் பற்றாக்குறை போக்கப்பட வேண்டுமென்பதற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்வித் துறையின்மீது காட்டுகிற அக்கறையின் காரணமாக எடுக்கப்பட்டு வருகிற நடவடிக்கை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், உட்காருங்கள். திரு. பழனிசாமி பேசி முடியுங்கள். ஐந்து மணித்துளிகளுக்குள் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு கல்வி அமைச்சராக இருந்தவர்கூடச் சொன்னார்கள். Contract basis-லே எல்லாம் ஆசிரியர்கள் போடுவதாகச்



சொன்னார்கள். அதற்கு மாதம் *4,000* ரூபாய் சம்பளம் என்று சொன்னார்கள். அதையெல்லாம் உண்மையிலே போட்டிருந்தாலுங்கூட எங்களுக்குப் பிரச்சினை கிடையாது. தொகுதிக்குள்ளே போக முடியவில்லை. எந்த ஸ்கூலுக்கும் போக முடியவில்லை. இதைக்கூடச் செய்ய முடியவில்லையே என்று கேட்கிறார்கள். ஜனங்களிடத்திலே பதில் சொல்ல முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால்தான் நீங்கள் உடனடியாக ஆசிரியர்களைப் போட வேண்டும். ஆசிரியர்களைப் போடாமல் என்ன பண்ணுவது? பள்ளிப் பிள்ளைகள் எல்லாம் அவ்வளவு மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் போடப்படுவார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆசிரியர்களைப் போடுங்கள்.

அதேமாதிரி தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே, நிலம் ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலே வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். ஏனென்றால் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில், பெப்சி, கொக்கோ கோலா கம்பெனிகளுக்கு என்று கொடுக்காமல், ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கப் போவதாக கவர்னர் உரையில் இடம் பெற்றிருக்கிறது. இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருப்பதை நான் வரவேற்கிறேன். அதில் ஒரு சம்பவத்தை உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கோலப்பன் குழுவினுடைய சிபாரிசு இருக்கிறது. அந்த சிபாரிசையாவது நம்முடைய அமைச்சர் அவர்கள், நம்முடைய அரசாங்கம் அல்லது நம்முடைய அதிகாரிகள் படிக்க வேண்டும். அதிலே பல்வேறு விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் பல வாரியங்களை எல்லாம் கைவிட்டுவிட்டீர்கள். அது வேறு. நிறைய வாரியங்கள் ஏற்கெனவே இருந்த அரசாங்கத்தால் போடப்பட்ட வாரியங்கள் எல்லாம் கைவிடப்பட்டிருக்கின்றன. எந்த வாரியமும் செயல்படவில்லை. இந்த கோலப்பன் குழு சிபாரிசையாவது நீங்கள் அமல்படுத்துங்கள். அதிலே இருக்கிற பல விஷயங்களைப் பாருங்கள். கிராமப்புற மக்களுடைய வாழ்க்கை மேம்பாடு பற்றி என்ன என்று அதில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து காவிரி நதி நீர்ப் பிரச்சினை. நிறைய பேசப்பட்டுவிட்டது. பதில் சொல்லியிருக்கிறீர்கள். அனேகமாகப் பார்த்தால், நீங்கள் மத்திய அரசைக் காரணம் சொல்கிறீர்கள். கர்நாடக அரசைக் காரணம் சொல்கிறீர்கள், மாநில அரசுக்குப் பொறுப்பே கிடையாதா? மாநில

[திரு. ஜி. பழனிசாமி] [2004 பிப்ரவரி 9

அரசு பொறுப்பு இல்லாமல் இருக்கிறதா? மத்திய அரசையும், கர்நாடக அரசையும் குற்றம் சொல்லி மாநில அரசு தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைப்பது என்பது முற்றிலும் சரியல்ல. ஆகையினால் காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் நீங்கள் உரிய கவனம் செலுத்தவில்லை. அதிலே முழுமையாக அந்தக் காவிரி தண்ணீர் பெற்றுத் தருவதில், உங்களிடத்திலே இருக்கிற அணுகுமுறையால் ஏற்பட்டிருக்கிற பலவீனத்தால் இன்றைக்கு தமிழகம் பாலைவனமாக மாறிக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) ஆமாம் நீங்கள் மத்திய அரசை சரியாக அணுகவில்லை. எல்லாம் கடிதப் போக்குவரத்துத்தான், எழுதுகிறீர்கள், கூட்டத்திற்குப் போகவில்லை, ஆணையக் கூட்டத்திற்குப் போகவில்லை; ஆணையம் கூட்டுகிற கூட்டத்தின்போது போகவில்லை, (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் தொடர்ந்து உண்மைக்கு மாறான, ஒட்டுமொத்தமாகப் புழுதிவாரித் தூற்றுவதுபோலத் தூற்றுகிறார். ஆதாரமற்ற பலவற்றையும் அவையிலே அடுக்கடுக்காகச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். அதிலே ஒன்றுதான், காவிரிப் பிரச்சினையில் அரசு மெத்தனமாக இருந்தது. அணுகுமுறை சரியில்லை, ஆணையத்திற்கும் போகவில்லை என்ற அப்பட்டமான, உண்மைக்கு மாறான ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி கூறுவது ஆச்சரியமாக இருக்கிறது. எந்த அடிப்படையில் என்று தெரியவில்லை. 10-10-2001 அன்று மூன்றாவது ஆணையக் கூட்டம் கூட்டப்பட்டது. அன்றைய முதலமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் நானும் கலந்துகொண்டேன். காவிரி ஆணையக் கூட்டத்தில் கலந்து கொண்டோம். தமிழகத்தினுடைய உரிமைகளுக்காக எல்லாவிதத்திலும் நாங்கள் வாதிட்டோம். அதை அடுத்து 27-8-2002-ல் அடுத்த கூட்டம் கூட்டப்பட்டது. பலமுறை கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று நாங்கள் கேட்டும், கடிதம் எழுதியும், கூட்டத் தவறி, வற்புறுத்தலின் காரணமாக பிறகு காலதாமதமாக ஆணையக் கூட்டத்தைக் கூட்டினார்கள். 27-8-2002-ல் கூட்டப்பட்ட அந்த ஆணையக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் நாங்கள் கலந்து கொண்டோம். அம்மா அவர்கள் மிகத் தெளிவாக, எந்தெந்த விதத்தில் கர்நாடக அரசு சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்படுகிறது என்பதையும், C.R.A-கூட செயலிழந்த நிலையிலே எப்படி இருக்கிறது என்பது பற்றியும் மிகத் தெளிவாக எடுத்துக்கூறி, நமது உரிமைக்காகப் பெரிதும் வாதிட்டார்.



2004 பிப்ரவரி 9] [திரு. சி. பொன்னையன்]

முற்பகல் 11-25

அதைப்போலவே, அதற்கு அடுத்த கூட்டம் 8-9-2002-ல் கூட்டப்பட்டது. 8-9-2002-ல் கூட்டப்பட்ட கூட்டம்— உச்ச நீதிமன்றம் நமக்கு ஆணையிட்டுவிட்டது. நமக்குத் தண்ணீரைத் தரவேண்டுமென்று ஆணையிட்டுவிட்டது. அந்த ஆணையை ஈடேற்றுவதற்கு கர்நாடகத்திற்கு மனம் வரவில்லை. உடனே அவர்கள், மைய அரசை வற்புறுத்தி, பிரதம அமைச்சரிடம் சொல்லி, அவர்கள் அந்தக் கூட்டத்தை 8-9-2002-ல் கூட்டினார்கள். ஆனால், 8-9-2002-ல் கூட்டப்பட்ட கூட்டத்தைப் பற்றிய தாக்கீது—Notice—அந்தத் தகவல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு 7 ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமைதான் வந்தது. ஞாயிற்றுக்கிழமை தகவலைத் தருகிறார்கள். ஒருவேளை அந்தக் கூட்டத்தைக் கூட்டியபோது, அவர்கள் எண்ணமே தமிழகத்தின் பிரதிநிதித்துவம் அங்கு இல்லாமல் இருக்க வேண்டும் என்று எண்ணினார்களோ, என்னவோ, குறைந்தபட்சக் கால அவகாசம்கூட ஒரு மாநில முதலமைச்சருக்குத் தராமல், 24 மணி நேர நோட்டீஸ்கூட தராமல் அந்தக் கூட்டத்தைக் கூட்டினார்கள். அந்த நேரத்தில் நான் டெல்லியில் இருந்தேன். டெல்லியில் இருந்த என்னோடு தொடர்பு கொண்டு—நான் டெல்லியில் இருந்து விமான நிலையத்திற்குச் சென்று விட்டேன். விமான நிலையத்திற்கு எனக்குத் தகவல் வந்து, அந்தக் கூட்டத்தில்—திடீரென்று அவர்கள் C.R.A. கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள். அந்த C.R.A. கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில் கலந்துகொள்ள முடியாத சூழலை உருவாக்கியிருக்கிறார்கள். நல்லவேளையாக நிதியமைச்சர் அங்கு இருக்கிற காரணத்தால், நிதியமைச்சர் அதில் பங்கேற்க வேண்டுமென்று சொல்லி, விமான நிலையம் சென்றுவிட்ட நான் திரும்பி வந்து, அடுத்த நாள், அந்த 8-9-2002-ல் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அந்தக் கூட்டத்தில்கூட எப்படிப்பட்ட அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டுமென்று, என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகக் கூறினார்கள். நமக்கு மொத்தம் 1.5 டி.எம்.சி. தண்ணீர் வேண்டும் என்பதை வற்புறுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கட்டாயமாக வற்புறுத்த வேண்டுமென்று அன்று என்னிடம் பணித்தார்கள். எங்கள் கோரிக்கைகளையெல்லாம் வலியுறுத்தி அங்கே பேசினோம். எனவே, நீங்கள் சொன்ன ஆணையத்தில் தமிழக அரசின் சார்பில் பிரதிநிதித்துவம் இல்லை என்ற குற்றச்சாட்டு, அப்பட்டமான உண்மைக்கு மாறான குற்றச்சாட்டு.

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 9

அதற்கு அடுத்து, 10-2-2003 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். உச்ச நீதிமன்றம் ஆணையிட்டுவிட்டது; இவ்வளவு தண்ணீரைக் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டுவிட்டது. அந்த ஆணையை நடைமுறைப்படுத்துவதற்கு கர்நாடக அரசு ஒத்துக்கொள்ளவில்லை. C.R.A. இறுதியிலே, உச்ச நீதிமன்றம் கொடுத்த அளவைவிட, 1.25 டி.எம்.சி.-ஐவிட 9,000 க்யூசெக். என்றுகூடக் கொடுக்கலாம் என்று C.R.A.. ஆணையிட்டது. அந்த ஆணையையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆரம்ப காலத்திலிருந்தே தீர்ப்பாயத்தின் ஆணையையும் அவர்கள் ஏற்கவில்லை. C.R.A. ஆணையையும் ஏற்க்வில்லை. உச்ச நீதிமன்றத்தின் ஆணையையும் ஏற்கவில்லை. ஒரு தனி நாடு போல், கர்நாடக அரசு செயல்படுகிறது என்பதனை C.R.A.-வில் நாங்கள் வற்புறுத்தியிருக்கிறோம். உச்ச நீதிமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பில் அது வலியுறுத்தப்பட்டிருக்கிறது. காவிரிப் பிரச்சினைக்காக உண்மை நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்த அளவிற்கு அக்கறையோடு என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் Record பூர்வமான தஸ்தாவேஜுகளையொட்டிய ஆதார உண்மையைத் திசைதிருப்புவதற்கு கம்யூனிச இயக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு பழனிசாமி அவர்கள், இந்த அவையிலே தொடர்ந்து உண்மையற்ற செய்திகளைக் கூறுவது வேதனைக்குரிய ஒன்று. இது கண்டிக்கக்கூடிய ஒன்று என்று கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசையும் நம்பிப் பயனில்லை; மத்திய அரசையும் நம்பிப் பயனில்லை; கர்நாடக அரசையும் நம்பிப் பயனில்லை என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கமும், கர்நாடக விவசாயிகள் சங்கமும் பேசி, காவிரிக்குத் தண்ணீரை நாங்கள் கொண்டு வருவோம் என்று இந்திய பொதுவுடைமைக் கட்சியினுடைய விவசாயிகள் சங்கச் செயலாளர், துரைமாணிக்கம் தலைமையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கமும், கர்நாடக விவசாயிகள் சங்கமும் பேசிப் பார்த்தார்கள்; பத்திரிகையிலும் வந்தது. அதனுடைய நிலைமை என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்குவார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, இன்னும் இரண்டு மணித்துளிகளுக்குள் பேசி முடித்துவிடுங்கள்.



2004 பிப்ரவரி 9]

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். ஆக, இவ்வளவு தூரம் நம்முடைய மாநில அரசு வலியுறுத்தியிருந்தாலும், அதை ஏற்றுக் கொள்ளாமல், மௌனமாக ஒரு மத்திய அரசு ஆட்சிப் பொறுப்பில் இருந்திருக்கிறது. இவ்வளவு பலகீனமாக அந்த ஆட்சி இருந்திருக்கிறது. ஆக, வரக்கூடிய...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பையே ஒரு மாநில அரசு ஏற்கவில்லையென்றால், அந்த மாநிலத்தினுடைய அந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று நீங்கள் போராடுங்கள். அவர்களோடுதானே தற்போது கூட்டு வைத்திருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி, தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் தர மறுத்த கர்நாடக மாநில அரசை ஆளுகிறது காங்கிரஸ் கட்சி; அந்தக் கட்சியின் தலைவர் சோனியாகாந்தி அம்மையார். தமிழகத்திற்குத் துரோகம் செய்த காங்கிரஸ் கட்சியோடு கூட்டு வைத்துக்கொண்டு, தமிழ்நாட்டைப் பற்றிக் குறை சொல்கிறீர்களே, இது எந்தவிதத்தில் நியாயம்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு பழனிசாமி அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) இல்லை, எஸ்.ஆர்.பி. என்ன? (குறுக்கீடு) திரு. பழனிசாமி பதில் சொல்லட்டும். (குறுக்கீடு)

*முற்பகல் 11—30*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம், இதற்கு நான் பதில் சொல்லைவில்லையென்றால் பிறகு நான் பதில் சொல்லவில்லையென்று சொல்லிவிடுவார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பதில் சொல்லும்போது நான் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால் சம்பந்தமே இல்லாமல் தமிழ்நாட்டிற்கு காங்கிரஸ் கட்சி துரோகம் இழைத்துவிட்டது என்று அவர் சொல்லியிருப்பது (குறுக்கீடுகள்) அது ஓர் அபாண்டமான குற்றச்சாட்டு. அதுபோன்ற குற்றச்சாட்டை அனுமதிப்பீர்களா? அனுமதி அளிப்பது முறைதானா? அந்தக் குற்றச்சாட்டை அவைக் குறிப்பிலிருந்து அகற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் குற்றச்சாட்டு சொல்லவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** குற்றச்சாட்டுதான். துரோகம் என்று சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே, நிதியமைச்சர் பேசி பத்திரிகையில் வந்திருக்கிறது இது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது மட்டும் அல்ல, அவருடைய தோல்வியை அவர் மறைமுகமாக ஒப்புக்கொள்கிறார். இதுவரை 30 ஆண்டு காலமாக இந்தப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. 1974—லிருந்து 30 ஆண்டு காலமாக இந்தப் பிரச்சினை இருந்துகொண்டேயிருக்கிறது. எந்தக் காலகட்டத்திலேயாவது கோர்ட்டிலே வழக்கு இருந்த நேரத்திலேயும் சரி, காவிரி நதி நீர் ஆணையத்திற்கு முன்னாலே இருந்தபோதும் சரி, எந்தக் காலகட்டமாக இருந்தாலும், தமிழ்நாட்டிற்கு இந்த அளவு தண்ணீரே வராமல் இருந்த காலகட்டம் உண்டா? அது வராமல் போனதற்கு காரணம் இன்றைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வற்றாத ஜீவநதி காவிரி வற்றி வறண்ட பாலாறு போல் ஆனதற்குக் காரணம் காங்கிரஸ் ஆளுகிற கர்நாடக மாநிலம், அதனுடைய முதலமைச்சர் கிருஷ்ணா. அதற்குக் காரணம், அந்தக் கட்சியினுடைய தலைமை சோனியா காந்தி. அதற்குக் காரணம், கர்நாடகத்தில் நமக்கு ஆட்சியைப் பிடிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. தமிழ்நாட்டிலே ஆட்சியைப் பிடிக்கக்கூடிய வாய்ப்பில்லை. தமிழ்நாட்டு விவசாயிகள் எக்கேடு கெட்டால் என்ன என காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரைக்கும் கர்நாடகத்திற்கு வக்காலத்து வாங்குகிற, தமிழகத்திற்குத் துரோகம் செய்கிற அணுகுமுறையைக் கடைப்பிடித்த காரணத்தால் வற்றாத காவிரி வற்றிவிட்ட நிலைக்கு இன்று சென்றுவிட்டது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை, காவிரி நதி நீர்ப் பிரச்சினை என்பது ஒரு ஜீவாதாரமான பிரச்சினை. நமக்கு பாசனத்திற்கும் தண்ணீர் வேண்டும். குடிதண்ணீரும் வேண்டும். இந்தப் பிரச்சினையை அரசியலாக மாற்றினால் நிச்சயமாக பாதிக்கப்படுபவர்கள் தமிழ்நாட்டு மக்களாகத்தான் இருக்க வேண்டும். நீங்கள் அரசியல் செய்கிறீர்கள். இதில் அரசியல் செய்ய வேண்டிய அவசியமேயில்லை. இந்த 30 ஆண்டு காலத்திலே எப்பொழுதாவது தண்ணீர் வராமல் இருந்திருக்கிறதா? எம்.ஜி.ஆர். காலத்திலே, எம்.ஜி.ஆர். நேரிடையாக பெங்களூர் சென்றார். குண்டுராவ் இல்லத்திற்கு அவர் உணவு அருந்த சென்றார். அப்போது அவர்கள், வேடிக்கையாக அவரிடத்திலே



சொன்னார், நீங்கள் தண்ணீர் தர மாட்டேன் என்கிறீர்கள் என்று. உடனே குண்டுராவ் சொன்னார், பக்கத்திலேயே தண்ணீர் இருக்கிறது, குடியுங்கள் என்று சொன்னார். நான் கேட்டது இந்தத் தண்ணீரை அல்ல, தமிழ்நாட்டிற்கு காவிரி தண்ணீர் விட வேண்டுமென்று நான் கோருகிறேன் என்றார். தமிழ்நாட்டிற்கு தண்ணீர் விட்டால்தான் நான் உங்கள் வீட்டிலே சாப்பிடுவேன் என்று சொன்னார். குண்டுராவ் அவருடைய நெருங்கிய நண்பர். எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நெருங்கிய நண்பர் என்று எல்லோருக்கும் தெரியும். குண்டுராவ் அவர்கள் அன்று தண்ணீரை விட்டார். விடாமல் இல்லை. எந்த அரசாங்கமும் விடாமல் இல்லை. இன்று விடாமல் இருக்கிறதுக்குக் காரணம் நம்முடைய அரசின் தவறான அணுகுமுறை என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பெரியவர் எஸ்.ஆர்.பி. கூறுவது உண்மைதான்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி பெரியவர் என்ற அடைமொழியை நீக்கிவிடலாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெரியவர் என்பது மரியாதைக்குரியதுதான்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. கூறுவது உண்மைதான். என்ன உண்மை என்றால், புரட்சித் தலைவர் காலத்தில் கர்நாடக மாநிலத்தில் அப்போது இருந்த குண்டுராவ் தமிழகத்திற்குத் தண்ணீர் தந்தார். அப்போது காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவி இந்திராகாந்தி அம்மையார் தமிழகத்தினுடைய நலனுக்காகப் பாடுபட்டார். ஆனால், அதற்கு அடுத்து வந்த ராஜீவ் காந்தி காலத்திலும்கூட, தமிழகத்திற்குத் தண்ணீர் கிடைத்தது. காரணம் மறைந்த அமரர் ராஜீவ் காந்தி அவர்களும் தமிழகத்தின் நலனில் அக்கறையோடு இருந்தார். ஆனால், துரதிருஷ்டவசமாக இன்று உங்கள் இயக்கத்தினுடைய தலைவியாக இருக்கிற சோனியாகாந்திக்கு தமிழகத்தின்மீது அக்கறையில்லாத காரணத்தால் அவர் பேச்சை கேட்டு,

கர்நாடக மாநிலம் தற்போது சொட்டுத் தண்ணீரைக் கூட தரவில்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நான் அரசியல் என்று சொல்கிறேன். இந்திரா காந்தி தண்ணீர் தரச் சொன்னார், கொடுத்தார்கள். ராஜீவ் காந்தி தண்ணீர் தரச் சொன்னார், கொடுத்தார்கள் என்று சொன்னால், அவர்கள் இரண்டு பேரும் அப்போது பிரதம மந்திரிகளாக இருந்தார்கள். சோனியா காந்தி பிரதம மந்திரியாக இல்லை. வேறு மாநிலங்களில் இருக்கிற பிரச்சினைக்குக்கூட காங்கிரஸ் கட்சி ஆளுகிற மாநிலத்திலே மட்டுமல்ல, ஆளாத மாநிலத்திலேகூட என்ன சொல்கிறார்கள், சோனியா காந்தி தன்னுடைய ஆலோசனைகளை வழங்கலாம் என்று எதிர்க் கட்சிகள் எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கின்றன. காஷ்மீர் பிரச்சினையிலே கூட கேட்டுக்கொண்டிருக்கின்றன. நீங்கள் எந்தக் கட்டத்திலேயாவது சோனியா காந்தி தலையிட்டு இதிலே பேசவேண்டும், ஆலோசனைகளை வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்களா? ஒன்று. (குறுக்கீடுகள்) இரண்டு, தமிழ்நாட்டிலே இருக்கிற அத்தனை அரசியல் கட்சிகளும் நமக்குத் தண்ணீர் விடவேண்டுமென்று நாங்கள் வலியுறுத்துகிறோம். அதேபோல, கர்நாடகத்திலே இருக்கிற எந்த அரசியல் கட்சியாவது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட கர்நாடகத்திலே இருக்கிற எந்த அரசியல் கட்சியாவது தமிழ்நாட்டிற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று இன்றுவரை சொல்லி இருக்கிறார்களா? கிடையாது. நீங்கள் அரசியலாக செய்கின்ற காரணத்தினாலே, இது ஒரு கௌவரப் பிரச்சினையாக, விவசாயிகளை பாதிக்கின்ற பிரச்சினையாக அங்கே இருக்கின்ற மக்கள் கருதுகின்ற காரணத்தினாலேதான் தண்ணீர் வரவில்லை, உங்களுடைய அணுகுமுறை தவறானது; எடுத்தேன் கவிழ்த்தேன் என்று செயல்படுவது எந்தக் காலத்திலும் எடுபடாது.

*முற்பகல் 11—35*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் கூறியது இதிலும் உண்மைதான். இந்திரா காந்தி அம்மையார்



அதிகாரத்தில் இருந்தார். ராஜீவ் காந்தி அவர்கள் அதிகாரத்தில் இருந்தார். எனவே தண்ணீர் வந்தது என்று கூறுகிறார். அப்போது காங்கிரஸ் கட்சி கர்நாடக மாநிலத்தை ஆண்டது. தற்போது சோனியா காந்தி அம்மையார் அதிகாரத்தில் இல்லை என்ற காரணத்தால், சோனியா காந்தி அம்மையாரினுடைய பேச்சை துச்சமென மதிக்காமல் கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் செயல்படுகிறார் என்று மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களே கூறுகிறாரா? உங்கள் கட்சியிலே கட்டுப்பாடே இல்லையா அல்லது அதிகாரம் இல்லாத பிரசிடெண்டாக காங்கிரஸ் கட்சியினுடைய தலைவியாக சோனியா காந்தி இருக்கிறாரா? (மேசையைத் தட்டும் ஒலி) கர்நாடக மாநிலத்திலே அதிகாரம் உள்ள ஒரு முதலமைச்சர் இருக்கிறார். அவரே தண்ணீரை விட்டுவிடலாம். உச்ச நீதிமன்றம் தண்ணீரைக் கொடு என்று ஆணையிட்டு விட்டது. C.R.A.-வும் தண்ணீரைக் கொடு என்று ஆணையிட்டு விட்டது. ஆனாலும் அதிகாரத்தில் இருக்கிற, முதலமைச்சராக இருக்கிற கிருஷ்ணா அவர்கள் தண்ணீரைக் கொடுக்கவில்லை. காரணம் சோனியா காந்தி தலையிடவில்லை அல்லது சோனியாகாந்தி தலையிட்டாலும், அம்மா உமக்குச் செல்வாக்கு இந்தியாவிலே இல்லை; உன் பேச்சை நான் கேட்க மாட்டேன் என்று ஒருவேளை கிருஷ்ணா அவர்கள் சொல்லி விடுகிறாரா? ஏன் அவர் தண்ணீர் தரவில்லை? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொஞ்சம் பேசி முடித்து விடுகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் இந்த அளவுக்குப் புரிந்துகொள்ளும் ஆற்றல் இல்லாமல் இருப்பார் என்று நான் நினைக்கவே இல்லை. நான் கேட்ட கேள்விக்கும் பதில் இல்லை. கர்நாடகத்திலே இருக்கிற ஏதேனும் ஒரு அரசியல் கட்சி தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று இன்றுவரை கோரி இருக்கிறதா? குறிப்பாக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இன்று வரை ஒரு முறையாவது கர்நாடக சட்டமன்றத்திலோ, வெளியிலேயோ கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்களா? இல்லை.

[2004 பிப்ரவரி 9

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இன்றையதினம் பேசும்பொழுது, எப்பொழுதாவது நீங்கள் சோனியா காந்தி அவர்களை அணுகி இதுசம்பந்தமாக பேசினீர்களா என்று கேட்டார்கள். உங்களுக்கு நன்றாக ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். நான் அன்றையதினம் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்களைப் பார்த்துவிட்டு, அடுத்தபடியாக, சோனியா காந்தி அவர்களையும் நாங்கள் பார்த்தோம். கர்நாடக மாநில அரசை தண்ணீர் திறந்துவிடச்சொல்ல வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் அன்றையதினம் அவர்களிடம் வைத்தோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, கடைசி வாக்கியத்தோடு முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியோ நீங்கள் எல்லாம் நடத்துகின்ற அரசியல் சண்டைக்கு எங்களுடைய காவிரி டெல்டா பகுதி மாவட்ட... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, இந்த விவாதத்தை நீங்கள்தான் ஆரம்பித்தீர்கள். (குறுக்கீடு) நீங்கள்தான் ஆரம்பித்தீர்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** காவிரி டெல்டா பகுதி மாவட்ட விவசாயிகள்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலே இந்த அரசியல் சண்டையைத் தூண்டி விட்டதே திரு. பழனிசாமி அவர்கள்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, கடைசி வாக்கியத்தோடு முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநேகமாக, வரக்கூடிய மக்களவைத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியும் அதைச் சார்ந்து இருக்கிற கூட்டணிக் கட்சிகளையும் தமிழ்நாட்டு மக்கள் விரட்டி விரட்டி அடிக்கப் போகிறார்கள் என்ற உண்மையான நிலைமை வரப் போகிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் என்னுடைய பேச்சை நிறைவு செய்து விடுகிறேன்.



2004 பிப்ரவரி 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, நீங்கள் உட்காருங்கள். அடுத்து, திரு. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, உங்கள் நேரம் முடிந்து விட்டது. அமருங்கள். (குறுக்கீடு) எல்லா தலைவர்களும் இன்றைக்குப் பேச வேண்டும். உட்காருங்கள். திரு. ஹேமச்சந்திரன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. மற்ற கட்சித் தலைவர்களெல்லாம் பேச வேண்டாமா? நீங்கள் உட்காருங்கள். திரு. ஹேமச்சந்திரன் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, நீங்கள் 40 நிமிடங்களுக்குமேல் எடுத்து இருக்கிறீர்கள். அவையை நடத்துவதா வேண்டாமா? அமருங்கள். திரு ஹேமச்சந்திரன். நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டு இருக்கிற பல்வேறு கருத்துகளைப்பற்றி பேசுவதற்கு முன்னால் நான் பணிவன்புடன் ஒரு வேண்டுகோளை இங்கே வைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11—40*

இன்று பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது; அதாவது கிருஷ்ணா நதி தண்ணீர் சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறது என்று. அதற்குக் காரணம் என்ன? தமிழகத்திலுள்ள முதலமைச்சர் ஆந்திர மாநிலத்தின் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசியதன் விளைவுதான் என்று நான் கருதுகிறேன். ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அவர்களைப் பற்றி, 2001-லே நடந்த சட்டப் பேரவைக் கூட்டத்திலே, முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதெல்லாம் சட்டப் பேரவையின் குறிப்புகளிலே இருந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சந்திரபாபு நாயுடு அவர்களை, ஆந்திர மாநிலத்தினுடைய முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அவர்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்துப் பேசியதனுடைய விளைவாகத்தான் கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் வந்தது என்றால், ஏன் கர்நாடக மாநிலத்தினுடைய முதலமைச்சர் அவர்களை சந்தித்துப் பேசக்கூடாது? ஏன் கூடாது என்று... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசின்மீது ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறபோது, அதற்கு விளக்கம் தரவேண்டிய கடப்பாடு, உரிமை, அரசுக்கு இருக்கிறது. அந்த அடிப்படையிலே நான் விளக்கத்தைச் சொல்கிறேன். கிருஷ்ணாவை—முதலமைச்சர் அவர்களை

சந்திக்கவில்லை; பேசவேயில்லை என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற உண்மைக்கு மாறான குற்றச்சாட்டு. டெல்லி சென்றிருந்தபோதும், தனிப்பட்ட முறையிலே கிருஷ்ணா அவர்களிடம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். கிருஷ்ணா அவர்களுக்கும், சந்திரபாபு நாயுடு அவர்களுக்கும் மாறுபாடு உண்டு. கிருஷ்ணா அவர்களைப் பொறுத்தவரைக்கும், கர்நாடக அரசைப் பொறுத்தவரைக்கும், தமிழ்நாட்டை வஞ்சிக்க வேண்டுமென்று, தமிழ்நாட்டை, ஒரு பாகிஸ்தானை எப்படி நாம் எதிரிகளாகப் பார்க்கிறோமோ, அப்படி தமிழர்களை, தமிழ்நாட்டு மக்களை, எதிரிகளாகப் பார்க்கிற அணுகுமுறையை கர்நாடக காங்கிரஸ் மேற்கொண்டிருக்கிறது. அதைத்தான் நான் சொன்னேன், தட்டிக் கேட்காமல், காங்கிரஸ் தலைமை இருக்கிறது என்று. மாறாக, சந்திரபாபு நாயுடு, பிரச்சினைகளை எடுத்துச் சொன்னால், மனிதாபிமான அணுகுமுறையை மேற்கொள்கிறார். மனிதாபிமான அணுகுமுறை இல்லாமல், கர்நாடக அரசு செயல்படுகிறது. (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களுடைய பதிலிலேயிருந்து... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இந்தப் பிரச்சினையை நீங்கள் மேலும் அதிகமாக வளர்ப்பது நல்லதல்ல. (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உறுப்பினருக்கு குறுக்கே நான் நிற்க விரும்பவில்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கர்நாடக மாநிலத்திலுள்ள முதலமைச்சர் திரு. கிருஷ்ணா அவர்கள் இந்தக் காவிரிப் பிரச்சினை சம்பந்தமாக, 'தமிழகத்திற்குத் தண்ணீர் விடுவது சம்பந்தமாக நான் பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன்' என்று சொன்னார். சென்ற நவம்பர் மாதத்திலே நான் இந்தப் பிரச்சினையை இந்த அவையிலே பேசிய நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன பதில் சொன்னார் என்பது சட்டப் பேரவையின் குறிப்புகளிலே இருந்து கொண்டிருக்கின்றன. கிருஷ்ணா அவர்களைச் சந்தித்து ஏன் பேசவில்லை......





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், தமிழக விவசாயிகள் நலனைக் கருதி, இந்தப் பிரச்சினையை விட்டு விட்டு கொஞ்சம் வேறு பிரச்சினைகளைப் பேசுங்கள். வேறு பிரச்சினைகளை ஆரம்பியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்ன அந்த ஆலோசனையை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே, எங்களுடைய வேண்டுகோள் தமிழக அரசிற்கு; ஒருவேளை முதலமைச்சருக்கு முடியவில்லை என்றால், நிதியமைச்சரையாவது நேரிலே கர்நாடக மாநிலத்தின் முதலமைச்சரை சந்தித்துப் பேசுவதற்குத் தயாராக்க வேண்டும். இதை அரசியல் பிரச்சினையாக மாற்றி, காங்கிரஸ் கட்சிக்கு எதிராகப் பேசி, அரசியல் பிரச்சினையாக்க...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த பிரச்சினையை விட்டுவிட்டு வேறு பிரச்சினைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) அடுத்த பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** முயற்சிக்கக் கூடாது என்று விவசாயப் பெருமக்கள் சார்பிலே வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை மட்டும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தமிழகத்திற்கு உண்மையிலேயே நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணம், சி.பி.ஐ மார்க்சிஸ்ட் இயக்கத்திற்கு இருக்குமென்றால், கர்நாடக முதலமைச்சரோடு பேசுங்கள் என்று நீங்கள் கூறக்கூடாது. காரணம், பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்ற நாடகத்தை நடாத்திக்கொண்டு, 5 இலட்சம் ஏக்கருக்கு மட்டுமே விவசாயம் செய்ய உரிமை பெற்று இருந்த கர்நாடக அரசு, 22 இலட்சம் ஏக்கருக்கு அவர்களுடைய விவசாயத்தை விஸ்தரித்துவிட்டது. நாம் அதை உணர்ந்து செயல்பட வேண்டும். பேச்சுவார்த்தை என்று அவர்கள் சொல்வதற்குக் காரணம், நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வரக்கூடிய நிலையில், அந்தத் தீர்ப்பு தமிழக அரசுக்குச் சாதகமான தீர்ப்பாகப் போய்விடும்; அதற்கு முன்னதாக பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்று காலங்கடத்தி, ஆங்காங்கே தடுப்பு அணைகளைப் போட்டு, அந்த நதிகளுக்கு, ஹேமாவதி நதிக்கோ, ஹேரங்கி நதிக்கோ, கபினி நதிக்கோ வருகின்ற தண்ணீரை, அந்த நதிகளுக்கே தண்ணீர் வராமல் செய்துவிட வேண்டும். ஆங்காங்கே தண்ணீரை தடுத்து, பள்ளங்களை நோக்கி அமைத்து,

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 9

ஆயிரக்கணக்கான 'minor irrigation tank'-களை, பெரிய பெரிய ஏரிகளாக ஆக்கி நமக்கு வரவேண்டிய தண்ணீரை, அவர்கள் அங்கு தேக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஹேமாவதி, ஹேரங்கி, கிருஷ்ணராஜசாகர், கபினி போன்ற எந்த Dam-யையும் அவர்கள் பெரிதுபடுத்தவில்லை. மாறாக ஆற்றுக்கே தண்ணீர் வராமல் தடுத்து, ஆங்காங்கே catchment area இருந்து இதைத் தடுத்து ஆயிரக்கணக்கான மாபெரும் ஏரிகளை ஆங்காங்கு உருவாக்கி, 5 இலட்சம் ஏக்கரை 2 இலட்சமாக கொண்டு செல்கிறார்கள். அவர்கள் சூழ்ச்சியிலே வெற்றிபெற வேண்டும் என்பதற்காகத்தான் பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்ற கபட நாடகம் ஆடுகிறார்கள். நீதிமன்றத்தின் மூலம் நல்ல தீர்ப்புக்கு நாம் வரக்கூடாது; தாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு செயல்படுகிறார்கள். அதை உணர்ந்து நாம் செயல்படவேண்டும். உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பைவிட பெரிய தீர்ப்பு எந்தத் தீர்ப்பும் இல்லை. உச்சநீதிமன்றத்தையே கர்நாடக அரசு மதிக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த முதலமைச்சர் மதிக்கவில்லை. தற்போது, உச்ச நீதிமன்ற தீர்ப்பை நான் ஏற்கமாட்டேன்; ஆனால், பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்று சொன்னால், Tribunal — தீர்ப்பாயத்திலே வழக்கு முடியும் தருவாயில் இருக்கிறது; விரைவிலே தீர்ப்பாய முடிவு நமக்குச் சாதகமாக வந்துவிடக் கூடாது; அதை தள்ளிப் போட வேண்டும்; அதற்குள் கொஞ்சநஞ்சம் இருக்கிற தண்ணீரைக்கூட பல ஏரி குளங்களுக்கு திருப்பிவிடவேண்டும்; தமிழகத்தை ஒரு பாலைவனம் ஆக்க வேண்டும்; இதுதான் கர்நாடக முதலமைச்சர், கர்நாடக அரசினுடைய சதித் திட்டம். இதை உணர்ந்து அனைத்துக் கட்சிகளும் செயல்படுவதுதான் தமிழக விவசாயிகளுக்கு நன்மை பயப்பதாக இருக்கும் என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரே ஒரு வார்த்தை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்திற்கு மேலே வேறு தீர்ப்பே இருக்கமுடியாது என்று சொன்னார்; உண்மை. நான் மறுக்கவில்லை. அந்த உச்ச நீதிமன்றம் ஒரு மாத காலத்திற்குள்ளாக அரசு ஊழியர்கள் பிரச்சினைக்கு முழுமையாக தீர்வு காண வேண்டும் என்று சொன்னதே. இன்றுவரை தீர்வு கண்டு இருக்கிறீர்களா? (குறுக்கீடுகள்)



2004 பிப்ரவரி 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடுகள்) ஹேமச்சந்திரன், வேறு பிரச்சினைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களுக்கு ஒரு யோசனை. அவர்களுடைய கட்சி, அகில இந்தியக் கட்சி. கர்நாடகத்திலே திட்டத்தட்ட 3 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று அந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய குரலை எழுப்பினார்களா? (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** அங்கு அதிமுக எழுப்பி இருக்கிறதா? (குறுக்கீடுகள்) அதிமுக—வில் ஓர் உறுப்பினர் இருக்கிறார்; அவர் சொன்னாரா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன் வேறு பிரச்சினைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களுடைய ஆலோசனைக்கிணங்க அந்த விஷயத்திற்கு நான் பதில் சொல்ல விரும்பவில்லை. ஆனால், நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் கர்நாடகத்திலேயும், அதேபோன்று தமிழகத்திலேயும் உள்ள விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கு இருதரப்பாரும் பேசி தேவையான தண்ணீர் கொடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள். இதுதான் அகில இந்திய ரீதியாக எங்களுடைய அரசியல் தலைமைக் குழு நிறைவேற்றி இருக்கிற தீர்மானம் என்பதைக்கூட நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த பிரச்சினைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) வேண்டாம். (குறுக்கீடுகள்) ஹேமா, அடுத்த பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இரண்டாம் உலக மகா யுத்தம் முடிந்ததற்குப் பிறகு அந்த யுத்தத்தை நடத்தியவர்கள், இருதரப்பாருமாக இருக்கக்கூடியவர்கள் உட்கார்ந்து பேசித்தான் உலகத்தை எப்படி பராமரிப்பது என்று...

[2004 பிப்ரவரி 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறுபடியும் அதே பிரச்சினைக்குப் போகிறீர்கள். நிதி அமைச்சர், அதனுடைய சிக்கலைப் பூராவும் சொல்லிவிட்டார். நீங்கள் வேறு பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதேபோல பேசி முடிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்துகிறேன். இன்னும் ஒன்று.

இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. "The State has successfully warded off the danger of a debilitating fiscal crisis and at the same time taken up planned development" என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்ன நடந்திருக்கிறது? இன்று நெல் கொள்முதல் என்பது கைவிடப்பட்டிருக்கிறது. Fiscal development—ன் பின் தொடர்ச்சியாக 74 ரூபாயாக இருந்த நிலவரி 134 ரூபாய்க்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) நடைமுறையிலே இல்லை....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் இப்படிச் சொன்னால் நியாயம் இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓரளவிற்கு சரியான தகவல்களைச் சொல்கின்ற மார்க்சிஸ்ட் இயக்கத்தினுடைய தலைவர் திரு. ஹேமா அவர்கள் ஏன் இப்படித் தவறான தகவல்களைச் சொல்கிறார் என்று புரியவில்லை. நெல் கொள்முதல் கைவிடப்படவில்லை. நான் அவையிலே முன்பு சொன்னது 290 இடங்கள்; தற்போது, இன்றைய அளவில் 501 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் தொடங்கப்பட்டு இருக்கின்றன. நேற்று வரை 13,828 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இதுதான் உண்மை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அடுத்து, இன்று அரசு ஊழியர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றாமல், அவர்களுடைய பல உரிமைகளை பிடுங்கி ஆயிரம் கோடி ரூபாய் சேமிப்பை இந்த அரசு உருவாக்கி இருக்கிறது. அந்த fiscal development என்பதினுடைய வளர்ச்சி. அதேபோன்று ஏற்கெனவே எங்களுடைய கட்சியின் சார்பிலே பேசிய மாண்புமிகு கருணாகரன் அவர்கள் 12-வது நிதிக் குழுவிலே மாண்புமிகு முதலமைச்சரும், இந்த அரசும் என்ன சொல்லியிருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். எப்படி இந்த மாநிலம் வளர்ச்சியிலே குன்றி இருக்கிறது என்பது எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அது நிச்சயமாக fiscal development—னுடைய வளர்ச்சி அல்ல. அதேபோன்று நம்முடைய உள்ளாட்சி மன்றங்களுக்கு கொடுக்கப்பட



2004 பிப்ரவரி 9] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

வேண்டிய நிதி இப்போது சரியாகக் கொடுக்கப்படவில்லை. அந்த நிதி விகிதம்கூட இப்போது குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே போக்குவரத்துக் கழகங்களை இன்று சின்னாபின்னமாக்கி, அதேநேரத்திலே போக்குவரத்துக் கட்டணத்தை உயர்த்தி ஒரு வரி உயர்வு ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. ஆனால் மக்களுக்கு எந்தவிதமான வசதியும் செய்யப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் சொன்னதுபோல கடந்த ஆட்சி காலத்திலே அது சின்னாபின்னமான போக்குவரத்துக் கழகமாகத்தான் இருந்தது. அப்படிப்பட்ட நிலையை அறிந்துதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த போக்குவரத்துக் கழகங்களைச் சீரமைத்து இப்போது ஓரளவுக்கு, ஆண்டுக்கு ஏறத்தாழ 300 கோடி ரூபாய் நஷ்டம் என்ற அளவிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே நடைபெற்று வந்த போக்குவரத்துத் துறை, இன்றைக்கு ஏறத்தாழ அந்த நஷ்டத்தை மிகுதியான அளவிலே குறைத்து ஓரளவுக்குத்தான் நஷ்டம் என்ற சூழ்நிலைக்கு இன்னும் சொல்லப்போனால் முதல் ஆண்டிலே வெறும் 98 கோடி ரூபாய் நஷ்டம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், இரண்டாவது ஆண்டிலே வெறும் 20 கோடி ரூபாய்தான் நஷ்டம் என்ற அளவிற்கு போக்குவரத்துத் துறையை சீரமைத்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், கட்டண உயர்வு பற்றிச் சொன்னார். ஒன்றை நான் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலே ஆளப்படுகிற மேற்கு வங்க அரசிலே இருக்கிற போக்குவரத்துக் கட்டணத்தைக் காட்டிலும் தமிழகத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுகிற இந்த மாநிலத்திலே போக்குவரத்துக் கட்டணம் குறைவு என்பதை அவருக்குப் பணிவோடு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்து, இங்கே fiscal development என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி போக்குவரத்துக் கட்டணத்தை உயர்த்தி கிடைக்கப்பட்ட நிதியேத் தவிர இவர்கள் சொல்லக்கூடிய முறையிலே உள்ள development அல்ல என்பது. அதற்கு மேற்கு வங்காள அரசை

சொல்கிறார்கள். மேற்கு வங்காள அரசில் ஆட்சி நடத்தி, 25 ஆண்டுகாலமாக அவர்கள் மக்களைப் போற்றி பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அரசு, அந்த மாநிலத்திலே மக்களுடைய தேவையை எப்படி பூர்த்தி செய்ய வேண்டுமோ அப்படி பூர்த்தி செய்து கொண்டிருக்கிறது. ஆனால் அது இங்கு இல்லை. Fiscal Development என்பது இன்றைக்கு மக்களை நசுக்கி பிழிந்து எடுக்கிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, மேற்கு வங்க அரசு பயணிகள் கட்டணத்தை உயர்த்திருப்பதைக் காட்டிலும் நமது மாநிலத்திலே குறைவாகத்தான் கட்டணம் இருக்கிறது என்பதை அவருக்கு நான் நினைவூட்டினேன். ஆனால், மேற்கு வங்காள அரசு, ஆண்டுக்காண்டு, அப்போதைக்கப்போது டீசல் விலை ஏறுகிறபோதெல்லாம் கட்டணத்தை உயர்த்திக் கொள்கிறது. ஆனால் தமிழ்நாடு அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அடிக்கடி டீசல் விலையை ஏற்றினாலும்கூட இன்றைக்கும் தொடர்ந்து கட்டணத்தை ஏற்றாமல், இன்றைக்கும் அதே கட்டணத்திலேயே, இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் பஸ் கட்டணம் குறைவு என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேற்கு வங்காளம் மட்டுமல்ல, கர்நாடகக் மாநிலத்தை விட குறைவு. கேரளாவை விடக் குறைவு. ஆந்திராவை விடக் குறைவு. இன்னும் இந்தியாவில் இருக்கிற அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் இன்றைக்கும் போக்குவரத்துக் கட்டணம் குறைவாக இருக்கிற மாநிலம், தமிழகம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்றொன்றைச் சொல்கிறார், மேற்கு வங்காள மாநிலத்தை ஏன் உதாரணம் காட்டுகிறீர்கள் என்று சொல்கிறார். மேற்கு வங்காளமும் இந்தியாவிலேதான் இருக்கிறது, எங்கோ வெளிநாட்டிலே இல்லை. ஆகவே, அதை உதாரணமாக காட்டி இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், he is quoting out of context. அதாவது, என்னுடைய கருத்து, மின்சாரக் கட்டணம் 1800 கோடி ரூபாய்க்கு உயர்த்தப்பட்டு, மக்களுக்கு சுமை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு மேலாக போக்குவரத்து, மின்சாரம் போன்ற



துறைகளிலே தொழிலாளர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒரு தடவை ஏற்படுத்தப்படுகிற ஒப்பந்தத்தை renew செய்யாமல், 5 ஆண்டுகளைத் தாண்டியதற்குப்பிறகும் இன்னும் அந்தத் தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய ஊதிய உயர்வைக் கொடுக்காமல் அவர்களுக்கு ஏற்கெனவே கொடுத்திருந்த போனஸை வெட்டிக் குறைத்து, 8 மணிநேர வேலைக்குப் பதிலாக இன்று 16 மணி நேரம் வேலை வாங்கி ஓவர் டைம் சம்பளம்கூட இன்றைக்கு கொடுக்கப்படாமல்..

முற்பகல் 11-55

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கும் மேற்கு வங்காளத்தை உதாரணம் காட்ட விரும்புகிறேன். மேற்கு வங்காளத்திலே இருக்கக்கூடிய போக்குவரத்துப் பணியாளர்களுக்கு பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை Wage Settlement போடப்படுகிறது. அங்கே இவர்கள் தொழிலாளர்களுடைய தோழர்கள் என்று சொல்கிற அந்த மாநிலத்திலே 10 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் Wage Settlement போடப்படுகிறது. ஆனால் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று இப்போது எங்கள் அரசு அந்த நிலையை ஒப்புக்கொண்டிருக்கிறோம். இருந்தாலுங்கூட அதைச் செயல்படுத்துவதற்கு இன்றைக்கு போக்குவரத்து தொழிற் சங்கங்கள் இதுசம்பந்தமாக நமது உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து இருப்பதன் காரணமாக அதன்மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்க இயலவில்லை. ஆகவே வழக்கு நிலுவையில் இருப்பதன் காரணமாக அந்த Wage Settlement பிரச்சினையைத் தொடர முடியாத சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் எல்லோரும் சேர்ந்து வழக்கு போட்டு இருப்பதை திரும்பப் பெற்று கொண்டால் அரசும் Wage Settlement பற்றி யோசிக்கும் என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டணம் உயர்த்தப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். IPP - Independent Power Project, Captive Power Project நீர் மின்சாரம், அனல் மின்சாரம், அணு மின் மின்சாரம். இந்தவகையில் நமக்கு கிட்டத்தட்ட 7000 மெகாவாட் பீக் டிமான்ட்—ஆக இன்றைக்கு நாம் மீட் செய்து இருக்கின்றோம்.

[திரு. டி. ஜெயக்குமார்] [2004 பிப்ரவரி 9

சமீபத்திலேகூட நான் டெல்லிக்கு சென்றபோது அங்கேயே power cut. ஆனால் இப்போது தமிழ்நாட்டிலே Power cut இருக்கிறதா என்றால் சுத்தமாக இல்லை. மின்வெட்டே இல்லாத ஒரு முழுமையான மாநிலமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). ஏனென்றால் நம்முடைய மின்சாரத்தின் capacity *9000* —ஆக இருக்கின்ற சூழ்நிலையில் *7001*, மெகாவாட் இன்றைக்கு தொடர்ந்து மின் விநியோகம் செய்துகொண்டு இருக்கிறோம். அதுவும் எந்தவித interruption-ம் இல்லாமல்.

இங்கே மழை இல்லாத சூழ்நிலையில் Hydel Power failure. கிட்டத்தட்ட *1955* மெகா வாட் நமக்கு நீர் மின்சாரம் கிடைக்கப்பெற வேண்டும். இதிலே முழுமையான அளவுக்கு *75* சதவிகிதம் நீர் மின்சாரம் நின்றுவிட்டது. நின்றுவிட்ட நிலையிலும்கூட தங்குதடையில்லாத மின்சாரத்தை இன்றைக்கு கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். அது எப்படி? மின் கட்டணத்தை சிறிதளவு ஏற்றினால்தான் இன்றைக்கு அந்த வசதியை நாம் செய்துகொடுக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம். அப்படி கட்டணத்தை ஏற்றியும்கூட இன்றைக்கு மின் வாரியத்திற்கு லாபம் இல்லை. Production cost *3* ரூபாய் *7* காசு ஒரு யூனிட்டுக்கு. ஆனால் மக்களுக்கு வினியோகம் செய்வது ரூ.*1.85* காசு. இதிலே எங்கே மக்களுக்கு சுமை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிய வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மின்சார வெட்டே இல்லை என்று சொன்னார்கள். நேற்றுமுன்தினம், சட்டமன்ற விடுதியில் *15* நிமிடங்கள் மின்சாரம் இல்லை. அது என்ன power cut இல்லையா (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** அதாவது இப்போது *7000* மெகாவாட் பீக் டிமாண்ட். உச்சக் கட்ட மின்சக்தி என்று சொல்லும்போது *6* மணியிலிருந்து *10* மணி வரை நாம் கண்டிப்பாகக் கொடுக்கவேண்டும். எனவே மின்வெட்டு என்று சொல்லும்போது *10* சதவிகிதம், *20* சதவிகிதம் என்று இருக்கும்போது கிட்டத்தட்ட *1000* மெகாவாட், *2000* மெகாவாட் என்று கட்டும்போது — ஒவ்வொரு மாவட்டத்திலும் *2* மணிநேரம், *3* மணிநேரம் மின்சாரத்தை 'கட்' செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால், அது போன்ற நிலைமை இல்லை. மின் interruption அதாவது electricity interruption



என்பது சில தடவை short circuit, மூலமாக ஏற்படலாம். அதற்குப் பல்வேறு காரணங்கள். அதற்காகத்தான் *1912* Call Centre இருக்கிறது. நீங்கள் போட்டால் உடனே மின்சாரம் கிடைக்கும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** உலகவங்கி, இன்றைக்கு தமிழகத்தை நேசிப்பதாக இங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. நிச்சயமாக நேசிப்பார்கள். ஏனென்றால், அவர்களுடைய ஆலோசனையின் விளைவாகத்தான் *18* லட்சம் மக்களுக்கு 'எச்' கார்டு என்றோ 'ஜி' கார்டு என்றோ ஏதோ ஒரு பெயரைச் சொல்லி, பொது விநியோக முறையிலே மலிவு விலையிலே கிடைத்துக்கொண்டு இருந்த பொருள், அவர்களுக்கு கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. இது உலக வங்கியினுடைய ஆலோசனையினுடைய சாதனை. இப்படிப்பட்ட பல சாதனைகளை இந்த அரசு ஏற்படுத்துவதனாலேதான், நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் *8* மணிநேர வேலைக்கு *16* மணி நேரத்திற்கு வேலை வாங்கி *8* மணி நேரம் சம்பளத்தை கொடுத்து சரி பண்ணிக்கொண்டு இருக்கிறார்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான செய்தியை (குறுக்கீடு) இல்லை, இல்லை. *8* மணி நேரத்திற்கு மேல் யாராவது வேலை பார்த்தால் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அதற்குமேல் கூடுதலாக வேலை பார்க்கின்ற நேரத்திற்கு, தனியாக கூடுதல் சம்பளம் தருகிறார்கள். அது அவர்களுடைய விருப்பத்தின்பேரில் செய்கின்ற பணி. யாரையும் கூடுதல் நேரம் வேலை செய்யுங்கள் என்று கட்டாயப்படுத்துவதில்லை. அவர்கள் விருப்பத்தின் பேரிலே கூடுதல் நேரம் பணியாற்றினால் அதற்குரிய சம்பளம் அளிக்கப்படுகிறது. அவ்வளவுதான்.

நண்பகல் *12-00*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது Over time கொடுக்கப்பட வேண்டுமென்பது சட்டம். ஆனால் அவர் என்ன சொல்கிறார், அதாவது விருப்பப்படி, அவன் விருப்பப்படி *8* மணி நேரத்திற்கு மேலே பார்க்கிறான் என்று. நான் பணிவன்புடன் பேரவைத் தலைவர் வழியாகக் கேட்டுக்கொள்வது, சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை

அமையுங்கள். போக்குவரத்துக் கழகங்களுக்குப் போவோம். அவனுடைய விருப்பப்படி அவன் வேலை பார்க்கிறானா இல்லை, அதிகாரிகள் வற்புறுத்தி, அவனை பயமுறுத்தி, வேலை வாங்குகிறார்களா என்பதைக் கண்டுபிடிப்போம்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, யாரையும் கட்டாயப்படுத்தியோ, வற்புறுத்தியோ over time பார்க்க வேண்டுமென்று சொல்லவில்லை. அப்படி குறிப்பிட்டு ஏதாவது இருக்குமென்று சொன்னால், அதை எங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உரிய நடவடிக்கை எடுக்கிறோம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, இன்று வேலையில்லாத் திண்டாட்டம் என்பது பெருகியிருக்கிறது. வேலைவாய்ப்பு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று இங்கே சொல்லப்படுகிறது. நான் ஒன்றைச் சொல்கிறேன். தமிழகத்திலே இருக்கிற Textile Industries முழுமையாக இன்றைக்கு சுக்கு நூறாக ஆகியிருக்கிறது. இன்று கை நெசவு, கை நெசவு என்று சொல்கிற நேரத்தில் விசைத்தறி, கைத்தறி, சாயப்பட்டறை, சலவைப் பட்டறை, printing அதே மாதிரி dyeing போன்ற ஜவுளித் தொழில்கள் அனைத்தும் சுக்கு நூறாக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன். இன்னும் ஐந்து மணித் துளிகளில் உரையை முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, நான் பேசுவதைவிட அதிகமாக அமைச்சர்கள்தான் பேசியிருக்கிறார்கள். மத்திய அரசின் கலால் வரியும், அதேபோன்று நூல் விலை ஏற்றமும், மின் கட்டண உயர்வும், இவற்றின் காரணமாக இன்று இந்தத் தொழில்கள் சின்னாபின்னமாகியிருக்கின்றன. அதற்கும் மேலாக நம்முடைய நாட்டில் பெட்ரோல், டீசல் விலை உயர்வு காரணமாக—மாதத்தில் இரண்டு தடவை உயர்கிறது. அதோடு நம்முடைய மாநில அரசினுடைய வரி. அதற்கும் மேலாக அவர்களுடைய மற்ற விதிகள். இதன் காரணமாக இன்றைக்கு ஆட்டோ, மோட்டார், லாரி போன்ற மோட்டார் வகையறா தொழில்கள் அடியோடு அழிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கும் மேலாக (குறுக்கீடு) not only மைய அரசு, உங்களுடைய Textile Policy, உங்களுடைய Permit Policy, உங்களுடைய மற்ற விதிகள், இதன் காரணமாக இன்றைக்கு இந்தத் தொழில்களை நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்கும் மேலாக...





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அது Textile industry-ஆக இருந்தாலும் சரி, மற்ற எந்தத் துறைக்கும் மாநில அரசினுடைய வரி விதிப்பால் எந்தவித பாதிப்பும் இல்லை. Textile Industry—ல் இருக்கிற Problem CENVAT என்று மைய அரசு கொண்டுவந்த காரணத்தால், அதனால் ஏற்பட்ட பாதிப்புகள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சர் அவர்களுக்கும், துறை சம்பந்தப்பட்ட இதர அமைச்சர்களுக்கும் அஞ்சல் எழுதி இருக்கிறார்கள். கட்டாயம் அந்த CENVAT சிஸ்டத்தை மாற்ற வேண்டும். இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகமான Textile Industries அதையொட்டிய Downward Industries இருக்கிற காரணத்தால் இந்த CENVAT—ஐ நீக்க வேண்டும், Excise Duty—ஐ நீக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் மைய அரசை வற்புறுத்தி உள்ளார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது...

***மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விசைத்தறித் துணிகள் மீது 10 சதவீதக் கலால் வரி விதித்தபோதுகூட, நெசவாளர்களுடைய எண்ணத்தைப் புரிந்துகொண்டு, மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி, அதிலேகூட பல்வேறு சலுகைகளைப் பெற்றுக் கொடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கே மத்தியிலே அமைச்சராக இருந்த நம்முடைய எதிர்கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம்கூட இந்தக் கலால் வரியின் மீது அங்கு எந்தவொரு கருத்தையும் கூறவில்லை. அங்கே இருக்கக்கூடிய அமைச்சகத்திலே அதை எடுத்தும் சொல்லவில்லை. இங்கே இருக்கக்கூடிய நெசவாளர் மக்களுக்காக கடிதம் எழுதி, ஓரளவுக்குச் சலுகைகள் பெற்றுத் தந்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்று இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12—05*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது மத்திய அரசிடம் இந்த மாநில அரசு சொல்லியிருக்கிறது. ஏற்கெனவே நவம்பர் மாதத்திலே இங்கே நடந்த சட்டப் பேரவைக் கூட்டத்திலே மத்திய அரசிடம் பலவற்றையும் கேட்டோம். ஆனால் மத்திய அரசு ஒன்றும் செய்யவில்லை. ஏனென்றால் தமிழகத்திலே அவர்களுக்கு ஓட்டு கிடைக்காது என்றெல்லாம் நீங்கள்

பேசினீர்கள். அதே மத்திய அரசோடுதான், அந்த ஆளும் கட்சியோடுதான் நீங்கள் கூட்டு சேர்ந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருமை சகோதரர் ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும்போது கூட்டணிபற்றி பேசினார்கள். கேரளாவிலே உங்களுடைய நிலை என்ன என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (சிரிப்பு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அங்கே Left Democratic Front என்ற ஒரு Front உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த Left Democratic Front அவர்களுடைய வேட்பாளர்களை நிறுத்தி அவர்கள் போட்டியிடுகிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன் பேசட்டும். (குறுக்கீடு) கருணாகரன், அவருக்கு இன்னும் மூன்று நிமிடங்கள் இருக்கின்றன. அவர் பேசட்டும். (குறுக்கீடு)

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று மாநிலங்களிலே பி.ஜே.பி. அல்லாத காங்கிரஸை எதிர்த்து நாங்கள் போராடுகிறோம். நாங்கள் இருக்கும் இடத்திலே எங்களுக்கு ஓட்டு போடுங்கள். நாங்கள் இல்லாத இடங்களிலே பி.ஜே.பி.க்குப் போடாதீர்கள். இதுதான் எங்கள் நிலைமை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலேயும், மேற்கு வங்காளத்திலேயும் எங்களுடைய Left Democratic Front காங்கிரஸ் கட்சியினுடைய வேட்பாளர்களோடு மோதுகிறார்கள். (குறுக்கீடு) இன்றைக்கு மேற்கு வங்காள Left Democratic Front ரிலீஸ் பண்ணியிருக்கிற candidates-களுடைய லிஸ்ட் வந்திருக்கிறது. 42 தொகுதிகளுக்கும் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. இன்றைக்கு இந்து பத்திரிகையிலே வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் பேசி முடியுங்கள்.





**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்திலேயும், கேரளாவிலேயும் எடுத்த நிலையை ஏன் தமிழகத்திலே நீங்கள் எடுக்கவில்லை? அதே நிலையை நீங்கள் இங்கேயும் எடுக்கலாமே? காங்கிரசோடு கூட்டணி இல்லை என்று சொல்லலாம் இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, தேர்தல் பிரச்சினையிலேயிருந்து வாருங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒரு கொள்கை விளக்கத்தைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது, பி.ஜே.பி. மதவாத ஆட்சி மத்தியிலே அமையாமல் இருப்பதற்கு எதிர்க்கட்சிகளுடைய ஓட்டுகள் split ஆகாமல் இருப்பதற்கு பி.ஜே.பி. வெற்றிபெறுவதற்கு வாய்ப்புள்ள இடங்களில் நாங்கள் அந்த பி.ஜே.பி. வெற்றி பெறாமல் இருப்பதற்கு காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டுப் போட வேண்டி வந்தால் ஓட்டுப் போடுவோமே தவிர, எங்களுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் alliance கிடையாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (மணியடிக்கப்பெற்றது) ஹேமச்சந்திரன், பேசி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதேபோன்று இன்று ஒன்றைத் தெள்ளத்தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். புதிதாக வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கு எந்தவிதமான ஏற்பாடுகளும் இந்த ஆளுநர் உரையிலே இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கும் மேலாக இன்று Waste Land Development Scheme-ஐப் பொறுத்த அளவிலே ஏற்கெனவே 50 இலட்சம் ஹெக்டேர் நிலத்தை இந்த ஸ்கீமிலே கொண்டுவருவதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? ஒரு இலட்சத்திற்கும் அதிகமான நிலம்தான் இந்த ஸ்கீமிலே விவசாயத்திற்காக அல்லது பயன்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) நாங்கள் ஏற்கெனவே சொன்னோம். அதாவது இந்த Waste Land Development Scheme-லே நீங்கள் இந்த நிலத்தை நிலம் இல்லாத, அதாவது Land to the tiller என்ற பாலிசியிலே யதார்த்த விவசாயிகளுக்கு—நிலமற்ற விவசாயிகளுக்கு நிலத்தை நீங்கள் கொடுத்து இந்த நாட்டிலே உணவு அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான, வேலை வாய்ப்பை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று சொன்னோம். (மணியடிக்கப்பெற்றது)

[2004 பிப்ரவரி 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) பதில் மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மேற்கு வங்காளத்திலே அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாகத்தான் இன்று அந்த மாநிலம் உணவுப் பற்றாக்குறை இல்லாத ஒரு மாநிலமாக, அதேபோன்று ஏறத்தாழ 5 இலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மாநிலமாக விளங்குகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அந்த வகையிலே நீங்கள் Land Policy-ஐ உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பழனிசாமி அவர்களும் திரு. ஹேமச்சந்திரன் அவர்களும் பேசுகிறபோது உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசு நிதியினை ஒதுக்கத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டைக் கூறினார்கள். அது உண்மையானதல்ல. அது பற்றிய ஒரு விளக்கத்தை மட்டும் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். 2003-2004—ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 3 நிலை ஊராட்சிகளுக்கும் மாநில நிதிக் குழு மானியம் ரூ.773.45 கோடிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏப்ரல் 2003 முதல் ஜனவரி 2004 வரை கிராம ஊராட்சிகளுக்கு 210.16 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 2001.27 கோடி ரூபாய் முழுவதும் டிசம்பர் 2003 வரை விடுவிக்கப்பட்டுவிட்டது. ஜனவரி 2004 ஆம் மாதத்திற்கு முன்னரே நிதி விடுவிக்கப்பட்டுவிட்டது. பிப்ரவரி 2004 மற்றும் மார்ச் 2004 ஆம் மாதங்களுக்கு ரூ.165.4498 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிக்கு மட்டும் ரூ.77.77 கோடி அனுமதிக்கப்பட்டிருக்கிறது. 2002-2003 ஆம் ஆண்டு கிராம ஊராட்சிகளுக்கு ஏப்ரல் 2002 முதல் பிப்ரவரி 2003 வரையிலான காலத்திற்கு ரூ.276.75 கோடி விடுவிக்கப்பட்டது. கிராம ஊராட்சிகளுக்கான மார்ச் 2003 ஆம் மாத நிதி ரூ.27.75 கோடியும் ஒதுக்கப்பட்டுவிட்டது. அது மட்டும் அல்லாமல் இந்த மானியத்தைத்



2004 பிப்ரவரி 9] [திரு. சி. பொன்னையன்]

தவிர சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ.149 கோடியும் மற்றும் ரூ.80.54 கோடி இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் மூலமும் விடுவிக்கப்பட்டு இருக்கிறது. 11 ஆம் நிதிக் குழு மானியத்தினுடைய முதல் தவணை ரூ. 23.6 கோடி ரூபாயும் இரண்டாம் தவணை ரூ. 23.63 கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒரு நிமிடம், அவர் சொன்னதற்கு பதில் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு ஹேமச்சந்திரன், இல்லை, முடியுங்கள், உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் படித்த நோத்திலே அனுமதிக்கப்பட்டது என்று சொல்லப்பட்டதே தவிர அது அங்கே போய்ச் சேர்ந்ததாகத் தெரியவில்லை. அது தான் எங்களுடைய குற்றச்சாட்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் ஒன்றைச் சொல்கிறேன். என்னைப் பொறுத்த அளவிலே எனக்கு நேரடியாகத் தெரிந்த விஷயம். எம்.எல்.எ. ஃபண்டிலே செய்த வேலைகளுக்குக்கூட பணம் இன்னும் வந்து சேரவில்லை என்று கான்டிராக்டர்கள் எங்களிடம் குறை சொல்கிறார்கள். அதே மாதிரி தொகுப்பு வீடுகளுக்கு......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லிவிட்டீர்கள், உரையை முடியுங்கள். முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** வீடுகள் கட்ட பணம் கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன் முடியுங்கள். திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) மணி (குறுக்கீடு) இல்லை, இல்லை உங்கள் நேரம் முடிந்துவிட்டது. திரு. ஜி.கே. மணி.

[2004 பிப்ரவரி 9

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவை....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** முடித்தாகிவிட்டது. அவர் முடித்தாகிவிட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, சொல்லி விடுகிறேன். சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 3 நிலை ஊராட்சிகளுக்கும் மாநில நிதிக் குழு மானியம் ரூபாய் 773.45 கோடிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதில் a total sum of Rs. 671.2 crores has been released to the local bodies. This includes equalisation grants of Rs.94.6 crores. 671.2 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பணம் தரப்பட்டுவிட்டது என்ற தகவலை அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். Released means it has been released from the State Exchequer in favour of the local bodies.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, (குறுக்கீடு) திரு. மணி, பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன் முடியுங்கள். திரு. ஜி.கே. மணி (குறுக்கீடு) இல்லை, விளக்கம் சொல்லிவிட்டார்கள். அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார்கள். முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அமைச்சரின் கவனத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத் தனியாகச் சொல்லுங்கள். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இந்த நிதி மற்ற வகையிலே போக வேண்டிய நிதி, அந்த டிபார்ட்மெண்டுகளுக்குப் போய்ச் சேராததன் காரணமாக அந்த டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் இந்தப் பணத்தை rotate பண்ணுகிறார்களா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் அவர்கள் உரையின் மேலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் கூற



2004 பிப்ரவரி 9] [திரு. ஜி.கே. மணி]

விழைகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாமன்றத்திலே ஆளுநர் உரை நிகழ்த்துவது என்பது மகத்துவம் வாய்ந்தது. அதிலே சொல்லப்படுகின்றவை எல்லாம் நிறைவேற்றப்படும் என்று நாட்டு மக்கள் எல்லாம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்தச் சூழ்நிலையிலே இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 2001, 2002, 2003, 2004 ஆம் ஆண்டு ஆகிய 4 ஆண்டுகளுடைய ஆளுநர் உரைகளை நான் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தேன். படித்துப் பார்த்ததிலே 2001 ஆம் ஆண்டு சொன்னது 2002, 2003, 2004 ஆம் ஆண்டு அதையே பல இடங்களிலே திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டிருக்கிறது.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

சொன்ன திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. அப்படி ஒரு சில காரியங்கள் நிறைவேற்றியிருந்தாலுங்கூட அவையும் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவற்றை எதற்காகச் சொல்லியிருக்கிறார்கள் என்ற கேள்வி எழுப்பக்கூடிய சூழ்நிலையில் நாட்டு மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த வகையிலே ஆளுநர் படிக்கக்கூடிய உரை என்பது மக்கள் நலனை உள்ளடக்கி இந்த மாநிலத்தினுடைய வளர்ச்சியை உள்ளடக்கியதாக இருக்க வேண்டுமே தவிர, அதை விடுத்துவிட்டு இந்த மாநிலத்தினுடைய முதலமைச்சர் அவர்களை பாராட்டுவதற்காக பகட்டுரையாக நிச்சயமாக இருந்துவிடக் கூடாது. அந்த வகையிலே பார்க்கிறபோது நம்முடைய திருக்குறள் ஒன்று நினைவுக்கு வருகிறது.

"நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்."

நாள்தோறும் தன் ஆட்சியில் விளையும் நன்மை, தீமைகளை ஆராய்ந்து அறிந்து முறை செய்யாத மன்னவன் நாள்தோறும் மெல்ல மெல்ல தன் நாட்டை இழந்து வருவான். இதுதான் நிலைமை. அந்த வகையிலே மக்கள் நலனிலே அக்கறை இல்லாமல் இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்பதை முதலிலேயே நான் பகிரங்கமாக குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [2004 பிப்ரவரி 9

*பிற்பகல் 12-15*

முதலிலே என்னுடைய தொகுதி பிரச்சினைகள் ஒரு சிலவற்றை இங்கே நான் சுருக்கமாகச் சொல்ல விழைகிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது கடுமையான வறட்சி. எங்களுடைய பெண்ணாகரம் தொகுதி மிக மிக பின்தங்கிய பகுதி. மேடு பள்ளங்கள் நிறைந்த பகுதி. அங்கே குடிநீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இன்று குடிநீர்ப் பஞ்சத்தோடு அங்கே விவசாயத்தை நம்பி வாழக்கூடிய மக்கள் எல்லாம் கிராமங்களை விட்டுவிட்டு கர்நாடக மாநிலம் பெங்களூருக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். பிழைப்பதற்காக அங்கு சென்று கொண்டிருக்கக்கூடிய அவல நிலையிலே என்னுடைய தொகுதி மக்கள் வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பஞ்சத்தைப் போக்கக்கூடிய வகையிலே நிவாரண உதவிகளை வழங்க வேண்டும். குடிநீர்ப் பிரச்சினையைப் போர்க்கால அடிப்படையிலே தீர்த்து வைக்க வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

பாசன வசதியைப் பெருக்க வேண்டுமென்று கடந்த 2 ½ ஆண்டுகளுக்கு மேலாக இந்த மாமன்றத்திலே சொல்லி வருகிறேன். என்னுடைய தொகுதியிலே பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள ஏரிகளை இணைப்பதற்காக பஞ்சப்பள்ளி கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். திட்டம் தயாரிக்கப்பட்டு டெண்டர் விடும் நிலையிலேயிருக்கிறது. அதை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

அதைப்போலவே, ஏரியூரிலிருந்து பழையூர் வரை இருக்கக்கூடிய சாலை பழுதடைந்து குண்டும் குழியுமாக பேருந்துகள் எல்லாம் நிறுத்தி நிறுத்தி ஓட்டப்படுகின்றன. மக்கள் அவதிப்படுகிறார்கள். அது ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருக்கிறது. அதை கிராமச் சாலை திட்டத்தின் அடிப்படையில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பலமுறை வற்புறுத்தியும்கூட இதுவரை எடுத்துக்கொள்ளப்படவில்லை. அந்தச் சாலையை திருத்தம் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, தருமபுரி மாவட்டம் தமிழகத்திலேயே மிகவும் பின்தங்கிய மாவட்டம். ஐரோப்பாவின் நோயாளி துருக்கி என்று சொல்வார்கள். அதைப் போல தமிழகத்தினுடைய நோயாளி, படுத்த



2004 பிப்ரவரி 9] [திரு. ஜி.கே. மணி]

படுக்கையாக இருக்கக்கூடிய நோயாளி எங்களுடைய தருமபுரி மாவட்டம் என்று நான்கூட சொல்வதுண்டு. கடந்த ஆண்டு இந்த மாவட்டத்திற்கு வந்த முதலமைச்சர் அவர்கள், இந்த மாவட்டத்து மக்கள் தர்மம் செய்யக்கூடிய தர்ம சிந்தனையுள்ள மக்கள், இவர்கள் களியைச் சாப்பிடுகிறார்கள், புளி விளைகிறது, கம்பளி நெய்யப்படுகிறது, தளி இருக்கிறது என்று எல்லாம் பாராட்டினார்கள். இந்த மாவட்டத்து அடித்தட்டு மக்கள், உழைக்கும் மக்களுடைய பொருளாதார மேம்பாட்டுக்காக சிறப்புத் திட்டங்களை அறிவிப்பதாகச் சொன்னார்கள். இதுவரையிலே எந்தச் சிறப்புத் திட்டமும் இல்லை. இப்போதுகூட இந்த மாவட்டத்தினுடைய நன்மையைக் கருதி, வளர்ச்சியைக் கருதி நிர்வாக நலனுக்காக கிருஷ்ணகிரி என்ற இரண்டாவது ஒரு புதிய மாவட்டத்தை உருவாக்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்றிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். மாறுபட்ட கருத்தல்ல. தொடர்ந்து கடந்த ஆட்சிக் காலத்திலேயிருந்து இந்த ஆண்டு வரை நான் இந்த மன்றத்திலே வற்புறுத்தி பேசி வந்தேன். ஆனால், அதிலே இந்த இரண்டு மாவட்டங்களைப் பிரிக்கின்ற நேரத்திலே, பின்தங்கிய மாவட்டம், அதிலேயும் வளமிக்க பகுதிகள் எல்லாம் ஒரு மாவட்டத்திலேயும், வளமில்லாத வறண்ட பகுதிகள் எல்லாம் இன்னொரு மாவட்டத்திலேயும் பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் வேதனையோடு நான் சுட்டிக்காட்டுகிறேன். இது மாற்றியமைக்கப்பட வேண்டும். அதுமாத்திரமல்ல, இப்படி நிர்வாக வசதிக்காக ஒரு மாவட்டத்தைப் பிரித்து தொடக்க விழா என்று செய்யக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரியலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தார்களே அதை மீண்டும் இணைத்தது எந்த வகையிலே நியாயம்? அந்த மாவட்டத்து மக்கள் எல்லாம் எவ்வளவு வேதனைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்? அதிலும் ஒரு பெருத்த சமுதாய மக்கள் வாழ்கிறார்கள் என்று சொல்லி ஒரு ஜாதியைச் சொல்லி இணைக்கலாமா? எவ்வளவு பெரிய வேதனை?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜி.கே. மணி, இது பற்றி ஏற்கெனவே பேசப்பட்டு முதலமைச்சர் அவர்களால் விளக்கம் எல்லாம் சொல்லப்பட்டுவிட்டது. மறுபடியும் அதே பிரச்சினையை நீங்கள் கிளப்பாதீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பிரிக்கப்பட்ட நேரம், அதிலே சொல்லித்தானே ஆக வேண்டும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மக்கள்தொகையை தயவுசெய்து கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள்தொகையை கணக்கெடுத்துக்கொண்டால் மிகப் பெரிய மாவட்டம் வேலூர் மாவட்டம், கடலூர் மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், கோவை மாவட்டம், இந்த மாவட்டங்களையெல்லாம் இன்னும் பிரிக்க வேண்டுமே, எப்போது பிரிக்கப் போகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** நீங்கள் சொன்னது அரியலூரைத்தான் சொன்னீர்கள். அரியலூரிலே இரண்டு அசெம்பளி தொகுதிக்கு ஒரு டிஸ்டிரிக்ட்.....

**திரு. ஜி.கே. மணி:** நீங்கள் அப்படிப் பார்த்தீர்கள் என்று சொன்னால் இப்பொழுது கிருஷ்ணகிரியைப் பிரித்திருக்கிறீர்கள். இந்த மாதிரி மற்ற மாவட்டங்களை ஏன் பிரிக்கவில்லை? கிருஷ்ணகிரியை மட்டும் பிரிப்பதாகச் சொல்கிறீர்களே, கிருஷ்ணகிரி அளவுக்கு இருக்கக்கூடிய பிற மாவட்டங்களை எப்போது பிரிக்கப் போகிறீர்கள்? ஏன் பிரிக்கவில்லை?

*பிற்பகல் 12-20*

தருமபுரி மாவட்டத்திற்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வேண்டுமென்று சொல்லி நீண்ட நாட்களாக வற்புறுத்தி வருகிறோம். பெருந் தலைவர் காமராஜர் காலத்திலே திட்டமிடப்பட்டது இன்னும் நிலுவையில் இருக்கிறது. இதற்குக்கூட நான் இந்த மாமன்றத்திலே பேசிவிட்டு நிறைவேறவில்லை என்று உயர் நீதிமன்றத்திலே ஒரு வழக்கைத் தொடர்ந்து இருக்கிறேன். அந்த வழக்கிலே நம்முடைய அரசாங்கத்தின் பதில் என்ன தெரியுமா? 8 ஆண்டுகளிலே முடித்து கொடுக்கப்படும். 8 ஆண்டு வரையிலே அந்தப் பின்தங்கிய மாவட்ட மக்கள் குடிநீருக்கு எங்கே செல்வது? அரசிடம் நிதியில்லையா? நிதியமைச்சர் அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள், 2003 ஆம் ஆண்டு திருப்புமுனை ஏற்பட்டு, இப்போது நிதிநிலைமை எல்லாம் சீராகிவிட்டது என்று சொல்லியிருக்கிறார்களே, இதை நிறைவேற்ற வேண்டாமா?

இந்த ஆளுநர் உரையைப் படித்துப் பார்த்தேன். இந்தச் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் சமூகத்திலே ஏற்றத்தாழ்வு நிறைந்து இருக்கிறது. ஏற்றத்தாழ்வு மாற வேண்டுமென்று சொன்னால், சமூக நீதி வேண்டும்.





சமூக நீதியைப் பற்றி இடஒதுக்கீட்டைப் பற்றி ஆளுநர் உரையிலே ஒரு வார்த்தைகூட எங்கும் சொல்லப்படவில்லை. சரி, ஆளுநருக்கு அக்கறை இல்லையோ என்னவோ தெரியவில்லை. அரசாங்கத்திற்கு அதிகாரிகள் எழுதிக் கொடுத்தார்களே, அவர்களாவது சொல்ல வேண்டாமா?

இங்கே மதுக் கடைகளுக்கு பணி நியமனம் செய்தார்கள். படித்தவர்களை, பட்டதாரிகளை எல்லாம் பணி நியமனம் செய்தீர்களே அதிலேகூட இடஒதுக்கீடு முறை பின்பற்றப்பட்டதா? இங்கே அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டக் காலங்களிலே நியமனம் செய்தீர்கள். நியமனம் செய்ததில் இடஒதுக்கீடு பின்பற்றப்பட்டதா? அரசாணையிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? இடஒதுக்கீடு எங்கெல்லாம் பின்பற்றப்படவில்லையோ அங்கே criminal நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அதிகாரிகள் மீது, இந்தத் தவறைச் செய்தவர்கள் மீது அரசாங்கம் criminal நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு மிக முக்கியமான பிரச்சினை. இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி மேம்பாட்டு நிதி வழங்கப்பட்டு வருகிறது. இந்த தொகுதி மேம்பாட்டு நிதி எதற்கு என்று சொன்னால், இந்த மன்றத்திலே முதன்முதலாக அறிவித்தபோது நீண்ட நாட்களாக தீர்க்கப்படாத பிரச்சினை அந்தத் தொகுதியிலே ஏதாவது இருக்கும் என்று சொன்னால், அதைச் சட்டமன்ற உறுப்பினர் உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதற்காக வழங்கப்பட்ட நிதி. ஆனால், இப்போது என்ன நிலைமை? நீங்களே அதற்கு வரையறை கொடுத்து விட்டீர்கள். இப்படி இப்படி எல்லாம் செலவிட வேண்டுமென்று சொன்னால், அந்த நிதி தேவையே இல்லை. சட்டமன்ற உறுப்பினர் நிதியை, தொகுதி மேம்பாட்டு நிதியை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள். இல்லையென்று சொன்னால் அவசியத் தேவைகளுக்கு ஏற்ப சட்டமன்ற உறுப்பினர்களே அதை வரையறுத்துக் கொள்ளலாம் என்ற திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியின் காரணமாகத்தான் குடிநீர்ப் பிரச்சினைக்காக குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்பட்டது. (குறுக்கீடு) வறட்சிக்காகத்தான் எடுத்தது. தவறான முறையில் எடுக்கவில்லை.

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2004 பிப்ரவரி 9

கடந்த கால ஆட்சியிலே கூட கம்ப்யூட்டர் வேண்டுமென்று அவர்களும் நிதி எடுத்தார்கள். ஆகவே, இது புதிதல்ல உங்களுக்கு. உங்களுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. மணி அவர்களே கடந்த கால ஆட்சியிலும் கம்ப்யூட்டர் வேண்டுமென்று நிதியை எடுத்துக்கொண்டார்கள். நீங்களும் நிதியை கொடுத்தீர்கள். இந்தக் காலத்திலே வறட்சிக்காக இந்த நிதி எடுக்கப்பட்டிருக்கிறது.

***திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, சென்ற முறை இந்த நிதியைத் தருகிறபோது முழுவதும் எம்.எல்.ஏ-க்கள் விருப்பப்படி செலவு செய்யலாம் என்ற உறுதிமொழியை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே கொடுத்தார். அவரும் ஆமாம் என்கிறார். குடி தண்ணீர் பிரச்சினைக்கு ஒவ்வொரு தொகுதி எம்.எல்.ஏ-வும் செய்ய வேண்டும்தான். அதுமட்டுமல்ல village office கட்டுவது, அதற்குப் பிறகு கழிவறைகள் கட்டுவது, அதற்குப் பிறகு சுகாதார நிலையம் கட்டுவது எல்லாம் போட்டுவிட்டு கடைசியில் கேட்டபோது 22 இலட்சம்தான் கொடுக்கிறான். இந்த யூனியன், அந்த யூனியன் என்று போய் விடுகிறது. கால் மீட்டர், அரை மீட்டர்தான் ஊருக்குப் போட வேண்டியதாக வருகிறது. ஆகையினால் நான் என்ன சொல்கிறேன் என்றால், நீங்கள் செய்வதை எல்லாம் செய்யுங்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார். போனமுறை restriction. இந்த வருடம் restriction இல்லையென்று சொன்னார். இதனால் நாங்கள் என்ன பண்ணுகிறோம் என்றால் மக்களுக்குத்தான் போடுகிறோம். சில இடங்களில் Government போடாது. அதற்கு norms வரவில்லை என்கிறார்கள். எங்கே அரசு norms வரவில்லை என்று சொல்கிறார்களோ அங்கு இந்தப் பணத்தைக் கொண்டு போய் ஒரு தொகுதி உறுப்பினர் அங்கே செலவு செய்து அந்த மக்களுடைய அபிமானத்தைப் பெறுவார். எனவே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இப்பொழுது எழுந்து அதைச் சொல்ல வேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதால் சொல்கிறேன். மத்திய அரசினுடைய வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின்கீழே அந்த வேலைகள் முழுவதையும் நாம் செய்கிறோம். அநேகமாக பார்த்தீர்கள் என்றால், தொகுதியில் இருக்கிறவர்கள் யாராவது கழிப்பறை கட்ட வேண்டுமென்று சொன்னால்கூட பள்ளிக்கூடம் கட்ட வேண்டுமென்று சொன்னால்கூட, கட்ட முடியாத சூழ்நிலை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறது. ஆகையால் நம்முடைய மாண்புமிகு



2004 பிப்ரவரி 9] [திரு. ஜி. பழனிசாமி]

உறுப்பினர் மணி அவர்கள் சொன்னதுபோல் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். இல்லையென்றால் 82 லட்சம் ரூபாயையும் ரூபாயாக கொடுத்து அந்தத் திட்டத்தை நீங்கள் டெண்டர் வைத்து விடுங்கள். முறைப்படி செய்யுங்கள். ஆகவே, அதுமாதிரி அந்த வேலைகளை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து சென்ற மன்றத் தொடரிலும், தற்போதும் பலவித ஆலோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கிறார்கள். அவற்றை அரசு ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து ஆளுநர் உரையிலே புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான திட்டங்களே சொல்லப்படவேயில்லை. இப்போது படித்துவிட்டு, வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்த ஆண்களும், பெண்களுமாக 50 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். நிதியமைச்சர் அவர்கள் 2003 ஆம் ஆண்டு திருப்புமுனை, நிதி சீராகிவிட்டது என்று சொல்கிறார்கள். ஆனால் அரசு துறைகளில் வேலைவாய்ப்புக்குத் தடை விதித்திருக்கிறார்களே, அதைத் திரும்பப் பெற வேண்டாமா? இரத்து செய்யவேண்டாமா? ஆகவே, படித்த இளைஞர்களுக்கு, பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திட அந்தத் தடையாணையை இரத்து செய்துவிட்டு மீண்டும் அரசுத் துறைகளிலே, எல்லாத் துறைகளிலும் பணி நியமனங்கள் செய்யப்படும் என்ற அறிவிப்பை வெளியிடவேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மூடிய ஆலைகள் எல்லாம் திறக்கப்படவேயில்லை. இப்போது வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்றால் புதிய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். ஆனால், மூடிய ஆலைகள் திறக்கப்படுகின்றனவா, இல்லையா என்று ஒரு வார்த்தைகூட இதிலே சொல்லப்படவில்லை. ஆகவே, மூடியிருக்கக்கூடிய ஆலைகளெல்லாம், புத்துணர்வு பெற்று இயங்குவதற்கும் வேலை இழந்தவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைப்பதற்கும் நீங்கள் மீண்டும் அவற்றைத் திறக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பார்த்தீர்கள் என்றால், கூட்டுறவு சர்க்கரை ஆலை, கூட்டுறவு நூற்பாலை, இந்த ஆலைகளை எல்லாம் தனியாருக்குக் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்புறம் அரசுப் பேருந்துகளைக் கூட தனியாருக்குக் கொடுக்கக்கூடிய நிலை அறிவித்து, நிலுவையிலே இருக்கிறது. அரசாங்கத்திற்கு ஒரு சொத்தை உருவாக்குவதற்கு எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன? அப்படி உருவாக்கிய சொத்தை தனியாருக்குக் கொடுப்பது என்பது எந்த வகையிலும் பொருத்தமாக இருக்காது. இது நாட்டுமக்களுக்குச் செய்யக்கூடிய மிகப் பெரிய துரோகம். ஆகவே, அவை அரசு நிறுவனங்களாகவே இயங்க வேண்டும் என்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் பிரச்சினை பற்றி நிறைய பேசவேண்டும். தொழிலாளர்கள் பிரச்சினை பற்றி இங்கே கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் எல்லாம் பேசினார்கள். இந்த அரசு தொழிலாளர்கள் நலனைக் காக்கக்கூடிய அரசாக இருக்கவேண்டும். போக்குவரத்துத் துறை தொழிலாளர்கள், பஞ்சாலைத் தொழிலாளர்கள், சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள், இப்படி அரசு நிறுவனங்களிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குப் பணிப் பாதுகாப்பும், ஊதிய உயர்வும் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மிக முக்கியமான பிரச்சினை, அரசு ஊழியர்கள் பிரச்சினை, ஆசிரியர்கள் பிரச்சினை. அவர்கள் ஏதோ அரசாங்கத்தைக் குறை சொல்லவேண்டும், அரசாங்கத்திற்கு நிர்பந்தம் உண்டாக்க வேண்டும் என்று போராட்டம் நடத்தவில்லை. அறிவிக்கப்பட்ட சலுகைகள் கிடைக்கவில்லையே என்று போராட்டம் அறிவித்தார்கள். போராட்டத்தை அறிவித்து, போராட்டத்திற்குப் பிறகு பேச்சுவார்த்தையிலே சுமூக உடன்பாடு ஏற்படாத காரணத்தினாலே, அறிவித்துவிட்டுப் போராடினார்கள். அந்தப் போராட்டத்திலேகூட 30-6-2003-லே, போராட்டத்திற்கு முன்பே 30-6-2003 ஆம் தேதி கைது செய்யப்படுகிறார்கள். 2-7-2003 ஒரு நாள் மட்டும் வேலைநிறுத்தம். 3ஆம் தேதி வேலைக்கு வரவேண்டும் என்று சொன்னால், பயந்து கொண்டு வருகிறார்கள். காவல் துறை கைது செய்கிறது என்று தயங்கி நிற்கிறார்கள். அப்புறம் 4 ஆம் தேதி, 5 ஆம் தேதி விடுமுறை. தொடர் நடவடிக்கை, தொடர்ந்து உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடிய நிலை. அதிலே 25 நாட்கள் அவர்களுக்கு மிகப் பெரிய தண்டனை. 25 நாட்கள் No work, No pay. ஆகவே, அதுவே மிகப் பெரிய தண்டனை. அதற்குப் பிறகு நீதிமன்றங்களுக்கு அலைக்கழிப்பு, அங்கே பதவித்தரம்





குறைப்பு. இப்போது 999 பேர் பணிநீக்கம். இவர்கள் எல்லோரையும் பார்த்தீர்கள் என்றால் இப்போது ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். 6 மாதம் 50 சதவீதம் சம்பளம்; இப்போது மூன்று மாதம் சம்பளமே இல்லை. இப்போது சாப்பாட்டுக்கே வழியில்லாமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள். 25 வருடங்கள், 30 வருடங்கள் பணி செய்தவர்கள், 50 வயதைக் கடந்து விட்டார்கள். சாப்பாட்டுக்கே வழியில்லை. மகளுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டு, திருமணம் செய்ய முடியவில்லை. மாப்பிள்ளை வரமாட்டேன் என்கிறான். ஏன் என்றால் 'உன் அப்பனுக்கு வேலையில்லை, கட்டிக் கொள்ள முடியாது' என்று சொல்கிறான். இப்படிப்பட்ட குடும்பங்கள் ஏராளமாக இருக்கின்ற காரணத்தினாலே, நான் ஆட்சியை அரசியலாக்கிச் சொல்லவில்லை. ஆட்சியாளர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தாயுள்ளத்தோடு, எதைச் சொன்னாலும் எல்லாம் தாயுள்ளம் என்று சொல்கிறோம். ஆகவே, இந்த அரசுக்கு தாயுள்ளம் இருக்கும் என்று சொன்னால், அரசு ஊழியர்கள் பிரச்சினையிலே எந்த நிபந்தனையும் இல்லாமல் அவர்களை மீண்டும் பணியமர்த்தி இந்தப் பிரச்சினையிலே சுமூகத் தீர்வு காண வேண்டும் என்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

இன்னொன்று. 2003 ஆம் ஆண்டிலே ஆளுநர் உரையிலே ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. பக்கம் 6, பத்தி 5, அதே வாசகம் 2004 ஆம் ஆண்டும் பக்கம் 13, பத்தி 15-லே சொல்லப்பட்டிருக்கிறது. ஒப்பற்றதும், முன் எப்போதும் இருந்திராத புதிய நடவடிக்கையாக காவல் துறையினரின் குறைகளைத் தீர்ப்பதற்காக தமிழ்நாடு காவல் துறை அதிகாரிகள், காவலர்கள் மற்றும் பிற பதவித் தரங்களைச் சார்ந்தவர்களுடன் முதலமைச்சர் அவர்கள் 5 நாட்களில் 5 விரிவான கூட்டங்களை நடத்தினார்கள். இதே பொருளிலே இந்த ஆண்டும் வந்திருக்கிறது. சரி, 5 முறை என்று சொன்னீர்களே, 2003-ல்தான் சொன்னீர்கள், 2004-ல் அதை ஏன் திரும்பச் சொல்ல வேண்டும்? சரி, காவலர் குறைகளை எல்லாம், அதிகாரிகள் குறைகளைக் கேட்டு அறிந்தீர்கள். என்ன குறை நிவர்த்தி செய்யப்பட்டது? காவலர்கள் எல்லாம் நிவர்த்தி செய்யவில்லையே, எங்கள் குறை கேட்கப்படவில்லையே, நிறைவேற்றப்படவில்லையே, என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 8 மணி நேரம் பணி வரையறுக்கப்பட வேண்டுமென்று சொன்னார்களே, இதுவரையில்

வரையறுத்துக் கொடுக்கப்படவில்லை. அந்தத் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுக்கு சம்பளமும் மிகக் குறைவு, ஊதிய உயர்வு இல்லை. இன்னும் பார்த்தால் ரேஷன் இல்லை. அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் அறிவிக்கப்பட்டது. இன்றுவரை இல்லை. இன்னொன்றும்கூட சொல்கிறார்கள். மத்திய ரிசர்வ் போலீஸில் மத்திய அரசாங்கத்தினுடைய காவல் துறையில் ரேஷனுக்குப் பதிலாக தொகையாகக் கொடுத்துவிடுகிறார்கள், எங்களுக்கு அதைத் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், தொப்பியும், ஷூவும் கொடுக்கிறீர்கள். தலை பெரியதாக இருந்தால் தொப்பி சிறியதாக இருக்கிறது. கால் பெரியதாக இருந்தால் ஷூ சிறியதாக இருக்கிறது. இதையாவது சரியாகக் கொடுக்க வேண்டாமா? இதையெல்லாம் நிறைவேற்றவில்லை என்று சொன்னால், குறைகளைக் கேட்டு, பிறகு என்ன நிவர்த்தி செய்திருக்கிறீர்கள் என்பதை நான் கேட்டுக்கொண்டு இதையெல்லாம் வழங்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அளவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு அதிகப்படியான சலுகைகளை, அதிகப்படியான வசதிகளைச் செய்து தந்திருப்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்மை மாநிலமாக இருக்க வேண்டுமென்று சொல்கிறோம், சொல்லிக்கொண்டே இருக்கிறீர்கள். அப்போது முதன்மையாக இருக்க வேண்டுமா, இல்லையா, எல்லாவற்றிலும்? (குறுக்கீடு) இல்லையே! (குறுக்கீடு) இல்லை, இல்லை, தொப்பிகூட மாற்றிக் கொடுக்கப்படவில்லை. (குறுக்கீடு) இல்லை, சப்தம் போடுவதில் பிரயோஜனம் இல்லை. சப்தம் போடுவதற்காக இந்த மன்றம் அல்ல. (குறுக்கீடு) இல்லை. அதாவது நீங்கள் ஷூ-வுக்குத் தொகை கொடுக்கிறீர்கள், தொப்பிக்கு (குறுக்கீடு) அதை நீங்கள் தொகையாகக் கொடுத்துவிடுங்கள். அவர்கள் அளவுக்கு வாங்கிகொள்ளப் போகிறார்கள். 8 மணி நேரம் வேண்டுமா இல்லையா? ஆகவே இதையெல்லாம் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



பிறகு, சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திலே 14 ½ கோடி ரூபாயிலே வழக்கறிஞர்களுக்கான அறைகள் ஒதுக்குவதற்காகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, திறப்புவிழா முடிந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. 14½ கோடி ரூபாய் செலவழித்து கட்டப்பட்டு, இரண்டு வருடங்களுக்கு முன்பாக திறப்பு விழாவும் செய்து அந்தக் கட்டடம் இயங்காத நிலையிலே இருக்கிறது. அறைகளை உடனடியாக வழக்கறிஞர்களுக்கு ஒதுக்கிக் கொடுத்து அவ்வளாகத்தை இயங்க வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டணம்கூட, அந்த deposit கூட ஒவ்வொரு வழக்கறிஞரிடமும் வசூலிக்கக் கூடாது என்ற வகையில், 60 இலட்சம் ரூபாயை ஒட்டுமொத்தமாக அரசு ஏற்றுக்கொண்டது. வழக்கறிஞர்களுக்கு அந்த அறைகள் ஒதுக்கப்படுவது உயர் நீதிமன்றத்தினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டது. எனவே, உயர் நீதிமன்றம்தான் இதில் முடிவு செய்ய வேண்டும். உயர்நீதிமன்றம் வழக்கறிஞர்களோடு இதுகுறித்துப் பேசி அரசுக்கு அனுப்பும்பட்சத்தில், நிச்சயமாக வாடகை சம்பந்தமாக அரசு நல்ல முடிவை அறிவிக்கும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14½ கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம், இரண்டு வருடம் ஆகிவிட்டது, அதை சீக்கிரம் முடியுங்கள் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள், வேறு ஒன்றும் அல்ல.

அடுத்து 13-4-2004 அன்று உயர் நீதிமன்றத்தினுடைய கிளை மதுரையிலே தொடங்கப்படவிருக்கிறது. இது வரவேற்கக்கூடியது. இது நல்ல காரியம். நிர்வாக வசதிக்காக செய்வதிலே மாற்றம் ஏதும் இல்லை. ஆனால் இதைப் பிரிக்கின்ற நேரத்திலே - உயர்நீதிமன்றத்தினுடைய மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை 42. இப்போது 34 பேர் இருக்கிறார்கள். 8 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இதிலே சென்னை கிளைக்கு ஏறக்குறைய 14 பேரோ அல்லது 28 பேரோ நியமனம் செய்யப்பட உள்ளதாகச் சொல்கிறார்கள். அப்படியே பார்த்தாலுங்கூட உயர் நீதிமன்ற கிளைதான் மதுரைக்குச் செல்கிறது. உயர்நீதிமன்றம் இங்கேதான் இருக்கிறது. ஆக, நீதிபதிகள் எண்ணிக்கை இதில் அதிகமாக இருக்கிறது. அந்த வகையிலே மக்கள் விருப்பத்திற்கு மாறாகக்கூட பல மாவட்டங்கள் மதுரை கிளையிலே சேர்க்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. தஞ்சை, திருவாரூர், நாகை, அரியலூர் போன்ற அந்த மாவட்டத்து மக்கள், அந்த மாவட்டங்களிலே

இருக்கக்கூடிய வழக்கறிஞர்கள் சங்கங்கள் எல்லாம் எங்களுடைய தமிழகத்தினுடைய தலைநகரான சென்னை உயர் நீதிமன்றத்திலே இருக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த வகையிலே அதை மீண்டும் பரிசீலனை செய்து அந்தக் கிளையைத் தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Judiciary is separate from Legislature. நீதிமன்ற அதிகாரத்திற்குள் நாம் தலையிட முடியாது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது கருத்து இருந்தால், அரசுக்கு அவர்கள் கருத்துரு அனுப்பி வைக்கட்டும். அந்தக் கருத்துருவை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கலாம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான பிரச்சினையாக இருப்பதால், இந்த மன்றத்திலேகூட தீர்மானம் நிறைவேற்றி, அமைச்சர் அவர்கள்கூட எங்களுடைய கோரிக்கையைப் பெற்று அனுப்பி, எந்த வகையிலேயாவது நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—35

அடுத்து ஒரு தனி மனிதனுக்கு கல்வி ரொம்ப முக்கியம். அதுவும் ஆரம்பக் கல்வி மிக மிக முக்கியம். பதினான்கு வயது வரையிலே இலவசக் கட்டாயக் கல்வி கொடுக்கப்பட வேண்டுமென்று அரசியல் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அரசாணை 252-ன்படி 96 மாணவர்களுக்கு, ஐந்து ஆசிரியர்கள் என்ற விகிதத்தை 99 மாணவர்களுக்கு இரண்டு ஆசிரியர்கள் என்ற நிலையை உருவாக்கிவிட்டீர்கள். இதனாலே பாதிக்கப்பட்ட பள்ளிகள் எவ்வளவு தெரியுமா? 18,000 பள்ளிகள். ஞாபகம் வைத்துக் கொள்ளவேண்டும். ஆக, அப்படி 18,000 பள்ளிக்கூடங்கள் பாதிப்பு. தமிழகத்தினுடைய மொத்தத் தொடக்கப் பள்ளிகள் 31,800. நடுநிலைப்பள்ளிகள் 5,200, மொத்தம் 37,000 பள்ளிகள். இதிலே பாதிக்கப்பட்ட பள்ளிகள் 18,000. பாதி. அவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதே நேரத்திலே அரசாங்கம் புதிதாக பள்ளிகள் தொடங்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். அதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. புதிதாக தொடங்கப்பட்ட ஆரம்பப் பள்ளிகள் 1,112. நடுநிலைப் பள்ளிகள் 1,075. மற்ற உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் எல்லாம் நிறைய தொடங்கப்பட்டிருக்கின்றன. இந்த புதிதாகத் தொடங்கப்பட்ட



பள்ளிகளிலே மாணவர்கள் சேர்க்கை எவ்வளவு என்றால் 2,70,000. இவ்வளவு மாணவர்கள் சேர்க்கப்பட்ட பிறகும் — அதே நேரத்திலே கடந்த இரண்டு ஆண்டுகளிலே ஆசிரியர்கள் ஓய்வு பெற்ற எண்ணிக்கை 10,000 பேர். ஆக இவ்வளவு இருந்துங்கூட ஏறக்குறைய 20,000 ஆசிரியர் பணியிடங்கள் இப்போது காலியிடமாக இருக்கின்றன. இந்த ratio விலே பார்த்தால் 99 மாணவர்களுக்கு இரண்டு ஆசிரியர்கள் என்ற அடிப்படையிலே பார்த்தாலுங்கூட 20,000 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அது மட்டுமல்லாமல் அரசு உதவி பெறக்கூடிய தனியார் பள்ளிகள். அந்தப் பள்ளிகளிலே மட்டும் 28,000 காலிப் பணியிடங்கள் இந்த அரசினுடைய ஆணை அடிப்படையிலே. இப்படி இருக்கின்ற நேரத்திலே ஆசிரியர்கள், இப்பொழுது அமைச்சர் அவர்கள்கூட பெருமையோடு சொன்னார்கள். நான் ஏற்றுக்கொள்கிறேன். குறைத்து எண்ணிக்கையைத்தான் சொல்லி இருக்கிறார்கள். இவை போதாது. இன்னும் கூடுதலாக ஆசிரியர்கள் நியமனம் செய்ய வேண்டும். அதற்குப் பிறகு, 187 தொடக்கப் பள்ளிகளிலே தலைமை ஆசிரியர் பணியிடம் இன்னும் post —ஏ sanction பண்ணாமல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நினைத்துப் பாருங்கள் எவ்வளவு வேதனையாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, மொத்த உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் தமிழ்நாட்டிலே 374 பேர். இதிலே 90 சதவிகிதம் அலுவலகத்திலே, அலுவலகப் பணியாளர்களே இல்லை. அங்கு இல்லாமல் ஆசிரியர்கள்தான் போய் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அதே நேரத்திலே இந்தத் தொடக்கக் கல்வி மாவட்டங்கள். அங்கே Elementary Education D.E.O. இருக்கிறார்கள். அது எவ்வளவு என்றால் தமிழ்நாட்டிலே 29, கிருஷ்ணகிரி இல்லாமல் 29. இந்த 29-லே, 23 இடங்கள் காலியாக இருக்கின்றன. நன்றாக ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது எப்படி பள்ளிக்கூடங்கள் எல்லாம் இயங்கும்?(குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள் பணியிடம் காலியாக இருந்தது உண்மைதான். ஏற்கெனவே துறை மூலமாக அரசுக்கு அந்த Panel, அந்தப் பட்டியல் அனுப்பப்பட்டது. அதிலே குறைபாடுகள் இருந்தன என்பதாலே அரசு அதை பரிசீலனை செய்யும்போது அந்தப் பட்டியலை மீண்டும் துறைக்கு அனுப்பி, மீண்டும் அந்தப் பட்டியலைத் திருத்தி, திருத்தப்பட்ட பட்டியல் அரசுக்கு வந்துவிட்டது. இப்பொழுது அந்தப் பணி முடிந்து விட்டது. மாவட்ட உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் அத்தனைபேரும் இந்த மாதமே நியமிக்கப்பட்டு விடுவார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதே போல இந்த Secondary Education D.E.O. அது மொத்தம் தமிழ்நாட்டிலே *52. 52*-லே *16, 17* இடங்கள் இன்னும் காலியாக இருக்கின்றன. ஆகவே இதையெல்லாம் நீங்கள் நிவர்த்தி செய்யவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசையேதவிர, குற்றம் சொல்லவேண்டும் என்பது என்னுடைய நோக்கம் அல்ல. இப்பொழுதுகூட தமிழ்நாட்டிலே இந்த மாணவர்கள் எல்லாம் குறைத்திருக்கிறீர்கள் அல்லவா? மாணவர்கள் எண்ணிக்கை குறைந்து விட்டதாக, குறைவான மாணவர்கள் இருப்பதாகச் சொல்லி *290* பள்ளிகள் மூடப்பட்டிருக்கின்றன. ஒரு பக்கம் அரசாங்கத்திலே பள்ளிக்கூடம் திறந்துகொண்டிருக்கிறார்கள். மற்றொரு பக்கம் மூடிக்கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது எப்படி கிராமத்திலே இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு, அனைவருக்கும் கல்வி என்ற இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்பதை இந்த நேரத்திலே கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே நடத்தப்படுகின்ற பள்ளிகள் மூடப்பட்டு விட்டன, மூடப்பட்டுவிட்டன என்று தொடர்ந்து மாண்புமிகு மணி அவர்கள் ஒரு குற்றச்சாட்டாகவே சொல்லி வருகிறார்கள். நாங்கள் புதிய பள்ளிகளைத் திறந்து கொண்டு இருக்கிறோம் என்பதையும் அவர் ஒத்துக்கொண்டிருக்கிறார். நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசுகின்றபோது அதற்குப் பதிலாகச் சொல்லியிருக்கிறேன். அதாவது மாணவர்களுடைய வருகை குறையும் பட்சத்திலே அந்தப் பள்ளியைத் தொடர்ந்து நடத்த முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, அந்தப் பள்ளியை மூடவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதனாலே அப்பகுதி மாணவர்கள் அல்லது மாணவிகள் பாதிக்கப்படப்போவது இல்லை. பக்கத்திலேயே ஒரு கிலோமீட்டர், *1½* கிலோமீட்டர் தூரத்திலே இருக்கின்ற அடுத்தப் பள்ளிக்கு அனுப்பப்படுகிறார்கள். ஆக, இந்தப் பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கைக் கூடுதலாக வருகிறபோது இந்தப் பள்ளி மீண்டும் தொடங்கப்படுவதற்கு நாங்கள் ஆணையிட்டிருக்கிறோம். எனவே, இது மூடப்படுவதற்கு வாய்ப்பேயில்லை. அந்த மாணவர்களும் பாதிக்கப்படுவதில்லை. *1½* கிலோமீட்டர் தூரத்திலே இருக்கிற அடுத்தப் பள்ளிக்கு அனுப்பப்படுகிறார்கள். காரணம் நீங்களே தெரிவித்ததைப் போல ஆசிரியர்கள் பற்றாக்குறை. *15* மாணவர்கள், *16* மாணவர்களை வைத்துக்கொண்டு ஒரு தொடக்கப் பள்ளிக்கு — ஓராசிரியர் பள்ளி இருக்கக் கூடாது என்பது அரசினுடைய நிலை. எனவே, *15*



மாணவர்களுக்கு இரண்டு ஆசிரியர்களை நியமித்து ஒரு பள்ளிக்கூடத்தை நடத்த முடியுமா என்பதையும் நீங்கள் யோசிக்க வேண்டும். எனவே, இந்த ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதால் *15* மாணவர்களுக்கு அல்லது வருகை குறைவாக இருக்கிற பள்ளிகளிலே இரண்டு ஆசிரியர்களைப் போட்டு நடத்துவதற்குப் பதிலாக இந்த மாணவர்களை அவர்கள் பாதிக்கப்படாமல் பக்கத்திலே இருக்கிற பள்ளிக்கு அனுப்பி இந்த ஆசிரியர்களை அங்கு பயன்படுத்திக் கொள்கிறோம். அவ்வளவுதானே தவிர வேறு ஒன்றுமில்லை. இது ஒரு மாற்று ஏற்பாடு. இந்த மாற்று ஏற்பாடே குறிப்பிட்ட பள்ளிக்கு மாணவர்களுடைய எண்ணிக்கை உயருகிறவரையிலேதான் ஒரு மாற்று ஏற்பாடாகச் செய்கிறோமே தவிர, பள்ளிக்கூடத்தை மூடிவிட்டோம் என்பதற்கு வாய்ப்பே இல்லை. அப்படி ஒரு நிலைமையும் இல்லை.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, இன்னும் *5* மணித் துளிகளிலே பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள், ஓராசிரியர் பள்ளி இல்லாத நிலையே அரசினுடைய நிலைப்பாடு என்று. ஆனால் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. என் தொகுதியிலே, தருமபுரி மாவட்டத்திலே மற்ற மாவட்டங்களிலே எல்லாம் பார்த்தோம் என்று சொன்னால் ஓராசிரியர் பள்ளிகள் நிறைய இருந்துகொண்டிருக்கின்றன. தருமபுரி மாவட்டத்திலே மட்டும் ஏறக்குறைய *129* பள்ளிகளுக்கு மேலே இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலை கூடாது. ஆகவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டு, கூடுதலான ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அமைச்சர்கள் எல்லாம் ஆளும் கட்சித் தரப்பிலே சொல்லப்படுவது, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு வர வேண்டுமென்பது. அதிலே எங்களுக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் என்ன நிலைமை? தமிழர்கள் வாழ்ந்தால்தான் தமிழ்நாடு உயரும்; தமிழ் வாழ்ந்தால்தான் தமிழர்களுக்குப் பெருமை; தமிழ் வளர்ந்தால்தான் தமிழர்களுக்குப் பெருமை. அந்த நிலையை எடுப்பதற்கு என்ன திட்டங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்? இங்கேகூடப் பேசினோம். தமிழிலே ஆளுநர்

[திரு. ஜி.கே. மணி] [2004 பிப்ரவரி 9

உரை வாசிக்கப்படவில்லை என்று. ஏற்கெனவே சொன்ன பிரச்சினை என்றுதான் சொல்வீர்கள், இருந்தாலுங்கூட, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்காகவா இந்த மன்றம் இருக்கிறது? நாட்டு மக்களுக்காக ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகள் எல்லோரும் சேர்ந்து பாடுபடுகிறோம். ஆனால், இங்கே தமிழிலே உரை வாசிக்கப்பட வேண்டுமா, வேண்டாமா? எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருந்தால் வாசிக்கப்படும், இல்லை என்று சொன்னால் வாசிக்கப்படாது என்று சொன்னால், அப்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இல்லை என்றால் நிர்வாகம் நின்று போய்விடுமா? ஆகவே அதெல்லாம் கூடாது. ஆகவே, தமிழிலே வாசிப்பதற்கு, தமிழை வளர்ப்பதற்கு ஆர்வம் இல்லை என்று இங்கே எடுத்துக்காட்டப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

பக்கத்திலே இருக்கிற கர்நாடக மாநிலத்திலே 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரையிலேயும் கன்னட மொழிப் பாடம்தான் இருக்கலாம். இங்கே தமிழுக்கு அறிவியல் தமிழ் என்றெல்லாம் சொல்கிறீர்கள். ஆனால், இன்னும் தருமபுரி மாவட்டத்தினுடைய எல்லையோர பள்ளிகளிலே தமிழ்ப் பாடமே இல்லாத பள்ளிக்கூடங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. என்ன நிலைமை? அப்போது தமிழ்நாட்டிலே ஒரு பாடம்கூட தமிழ்ப் பாடம் இல்லாத பள்ளிக்கூடம் இருக்கலாமா? தமிழே படிக்காமல் நாம் படித்துக் கொண்டிருக்கிறோமா? அதே நேரத்திலே 8 ஆம் வகுப்பு வரையிலேயும் தமிழிலே என்று சொல்லி கடந்த ஆட்சிக் காலத்திலே ஓர் உத்தரவு போட்டு நீதிமன்றத்தில் நிலுவையிலே இருக்கிறது. தமிழக அரசாங்கம் எது எதற்கோ ** இந்தப் பிரச்சினையிலும் தலையிட்டு அந்த நீதிமன்றத்திலே ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு என்ன செய்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வரிகளை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டும். ** என்ற அந்த வரிகள். அது என்ன அது தேவையில்லாமல்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதை ஒன்றும் நான் தவறாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது நீக்கப்படுகிறது. அதிலே ஒன்றும் இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2004 பிப்ரவரி 9]

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, எதற்காக நீக்குகிறீர்கள் என்றே தெரியவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ** என்பது சரியல்ல. இன்னும் இரண்டு மணித் துளியிலே உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** சரி, பேரவைத் தலைவர் அவர்களே, அப்புறம்....

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கிற பள்ளிகளில் தமிழ் இன்னும் போதிக்கப்படாத, பயிற்றுவிக்கப்படாத நிலைமை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது ஏன் என்பதும் அவருக்குத் தெரியும். வழக்கும் நிலுவையிலே இருக்கிறது என்று சொன்னார்கள். அங்கே, நம்முடைய அந்தப் பகுதி-1-ல் ஏற்கெனவே இருக்கிற அரசாணையின்படி வட்டார மொழி அல்லது தாய்மொழி என்று இருப்பதால், தாய் மொழி வேற்று மொழியாக உள்ளவர்கள் தமிழ் மொழியைத் தவிர வேறு மொழியாக இருப்பவர்கள் அந்தப் பாடத்தை எடுத்துவிடுகிறார்கள். எனவே தமிழ் மொழி படிக்க முடியாத சூழ்நிலை அங்கே ஏற்பட்டுவிடுகிறது. இதற்காகத்தான் அந்த வழக்கு இப்போது உச்ச நீதிமன்றத்திலே இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில்கூட அந்த முயற்சி எடுக்கப்பட்டு அவர்களாலே வெற்றிபெற முடியாத நிலைமையிலே இன்றைக்கு வழக்கு இருக்கிறது. நாமும் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறோம். எனவே, இதை எல்லாம் கருத்திலே கொண்டுதான் தமிழ்நாட்டிலே இருக்கிற அனைத்துப் பள்ளிகளிலும் எந்தக் குழந்தையும் பள்ளியைவிட்டு வெளியேறுகிறபோது, தமிழைப் படிக்காமல் வெளியேறக் கூடாது என்ற ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே தமிழகத்தினுடைய முதல்வர், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இப்போது அறிவியல் தமிழை அறிமுகப்படுத்தி, இப்போது அந்த அறிவியல் தமிழ்ப் பாடம் அனைத்துப் பள்ளிகளிலும் பயிற்றுவிக்கப்படுகிறது. எனவே, நீங்கள் சொன்னதைப் போல, தருமபுரி மாவட்டத்தில் அந்த கர்நாடக பகுதியிலே இருக்கின்ற அந்தப் பள்ளிகளிலும் இப்போது அது ஒரு பாடமாக இருப்பதாலே அனைத்துப் பள்ளிகளிலே படிக்கிற மாணவ மாணவிகளும் இன்றைக்கு தமிழை ஒரு பாடமாக அதுவும் கட்டாயமாகப் படிக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[திரு. செ. செம்மலை] [2004 பிப்ரவரி 9

*பிற்பகல் 12-45*

இதிலே இன்னும் ஒரு மகிழ்ச்சியான செய்தி. இதுவரை நம்முடைய State Board நம்முடைய பள்ளிகளில்தான் தமிழ் பயிற்று மொழியாக இருக்கின்றது. தமிழைப் படிக்கிறோம். மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் இதுவரை தமிழ் பாட மொழியாகவும் இல்லை, அது பயிற்று மொழியாகவும் இல்லை. இப்போது அந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும் இந்த அறிவியல் தமிழ் அறிமுகப்படுத்தப்பட்டு, அந்தப் பள்ளிகளிலும் இப்போது கற்றுக் கொடுக்கப்படுகிறது. அதைவிட முக்கியமாக மத்திய அரசிற்குட்பட்ட C.B.S.E. - Central Board of Secondary Education அந்தப் பள்ளிகளிலும் தமிழ் வாசனையே இல்லாமல் இருந்த நிலையில் இன்றைக்கு அந்தப் பள்ளிகளிலும் அறிவியல் தமிழை ஒரு பாடமாகப் பயிற்றுவிப்பதற்கு ஒத்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களே பாடப் புத்தகங்களை விரும்பி வாங்கி, அந்தப் பள்ளிகளிலேயும் விநியோகித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டிலே இருக்கிற நம்முடைய State Board பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள், C.B.S.E. பள்ளிகள் அனைத்துப் பள்ளிகளிலும் இப்போது தமிழ் ஒரு பாட மொழியாக பயிற்றுவிக்கப்படுகிறது. எனவே, முந்தைய ஆட்சியாக இருந்தாலும் சரி, நம்முடைய ஆட்சியாக இருந்தாலும் சரி, தமிழ் வளர வேண்டும் என்கிற எண்ணம் இந்த ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது; நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதிலே இந்த அரசு வெற்றி கண்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடுத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே தாய்மொழி தமிழாக இருப்பது என்பது இப்போது அறிவியல் மொழியாக மாற்றப்பட்டிருக்கிறது. அநேகமாக அறிவியல் மொழியைப் பயிலுகிறவர்களுக்குப் பயிற்சி மொழியாகத்தான் பிற மொழி இருக்க வேண்டும் என்றிருக்கிறது. ஆகவே, ஏன் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுதான் இன்றைக்கு இருக்கிற கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத்தான் பதில் சொல்லி விட்டார்களே அமைச்சர், வழக்கு நிலுவையில் இருக்கிறது என்று. (குறுக்கீடு)



2004 பிப்ரவரி 9]

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** அதாவது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயே (குறுக்கீடு) இல்லை, இல்லை, பயிற்று மொழியாக கட்டாயமாகத் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு வருவதற்கு ஒரு அரசாணையை பிறப்பித்தார்கள். பேராசிரியர், அவர் பொறுப்பிலே இருந்த நேரத்திலேதான் அது கொண்டு வரப்பட்டது. ஆனால், உயர் நீதிமன்றம் அந்த அரசாணையை இரத்து செய்துவிட்டது. காரணம், ஒரு மொழியை கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்று சொல்வதற்கு அரசாங்கத்திற்கு உரிமையில்லை. அது பெற்றோருடைய உரிமை. அரசாங்கத்திற்கு அந்த உரிமை இல்லை. ஆக, எந்த மொழியில் பாடத்தைப் படிக்க வேண்டும், பயிற்று மொழியாக தன்னுடைய குழந்தைக்கு எந்த மொழியை பயிற்றுவிக்க வேண்டும் என்று அரசாங்கம் கட்டாயப்படுத்தக் கூடாது. பெற்றோருடைய உரிமை என்று சொல்லி, இதே சென்னை உயர் நீதிமன்றம் அந்த ஆணைக்குத் தடை விதித்து விட்டதனால்தான், அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் உச்ச நீதிமன்றத்திற்கு அந்த வழக்கு சென்றிருக்கிறது. இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அந்த வழக்கை வாதாடிக் கொண்டிருக்கிறது. அதில் வெற்றி பெறுவதற்குண்டான அனைத்து முயற்சிகளையும் நாங்களும் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். எனவே, பயிற்று மொழி என்று கட்டாயப்படுத்த முடியாது என்பதுதான் நீதிமன்றம் இன்றைக்கு நமக்கிட்டிருக்கிற உத்தரவு, கட்டளை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, உரையை முடித்து விடுங்கள். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் (குறுக்கீடு) இல்லை, இன்னும் *5* நிமிடங்கள் என்பது முடியாது. ஒரு மணித் துளியில் முடியுங்கள். *2* தலைவர்கள் பேச வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையெல்லாம்கூட இப்படி நீதிமன்றத்திற்குப் போகாமலேயே கர்நாடக மாநிலத்திலே அப்படியெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி எல்லாம் நாம் போகவில்லை. அப்படி அந்த நடைமுறையையாவது நாம் பின்பற்றி இருக்கலாமே என்பதுதான்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திற்கு அரசாங்கம் வேண்டுமென்றே போவதில்லை. இன்றைக்கு கர்நாடகத்தை உதாரணமாகக் காட்டுகிறீர்கள். கர்நாடகத்திலே இப்படி ஒரு மொழிப் பிரச்சினையோ அல்லது ஒரு பொதுப் பிரச்சினையோ, காவிரி நீர்ப் பிரச்சினை என்று வருகிறபோது

[திரு. செ. செம்மலை] [2004 பிப்ரவரி 9

அங்கே கட்சி வித்தியாசம் பார்க்காமல் அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையோடு இருக்கிறார்கள்; அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போவதில்லை. ஆனால் இங்குதான் ஏதாவது ஒரு பிரச்சினை என்று சொன்னால் அரசாங்கம் ஒரு கொள்கை முடிவு எடுக்கும்போது, அதை எதிர்க்க வேண்டும் என்பதற்காக எதிர்க் கட்சிகள் நீதிமன்றத்திற்குப் போய் அதற்கு ஏதாவது ஒரு வகையிலே தடை விதித்து விடுகிறார்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மணி உரையை முடித்து விடுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, Point of order, point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அநேகமாக எதிர்க் கட்சிகள்தான் எதை எடுத்தாலும் ஆளுங்கட்சி எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு எதிராக கோர்ட்டுக்குப் போய்விடுகிறார்கள் அல்லது தடுத்து விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். எதிர்க் கட்சிகளை மதித்து நீங்கள் ஆலோசனை நடத்துகிறீர்களா? ஆலோசிக்கப்படுகின்றனவா? எந்த ஆலோசனையும் கிடையாதே?

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பழனிசாமி, கர்நாடகத்தில்—இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குப் போய்த்தான் தீர்ப்பு வந்தது. அதனால் இதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. திரு. மணி, பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோ சீக்கிரம் பேச்சை முடித்துவிடுகிறேன். இன்றைக்கு வறுமையை ஒழிக்கிறோம் என்று சொல்கிறோம். வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழக்கூடியவர்கள் எண்ணிக்கை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி. இன்னும் ஒரு நிமிடத்தில் பேச்சை முடியுங்கள். கடைசி வாக்கியத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஐந்து நிமிடங்களில் பேச்சை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.



2004 பிப்ரவரி 9]

**திரு. ஜி.கே. மணி:** வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழக் கூடியவர்களின் எண்ணிக்கை இன்றைக்கு அரசாங்கக் கணக்குப்படி 30 சதவீதத்திற்கும் மேலே போய்க் கொண்டிருக்கிறது. இது ஐக்கிய நாடுகள் சபையிலே சொல்லப்பட்டிருக்கிறது. *(மணியடிக்கப்பெற்றது)* வளர்ந்த நாடுகளில்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, புதிய கருத்து வேண்டாம். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, நான் சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நேரமாகிவிட்டது. இன்னும் இரண்டு தலைவர்கள் பேச வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** ஐக்கிய நாடுகள் சபையிலே உலக நாடுகளையெல்லாம் ஒப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். சர்வதேச நாடுகளிலே ஒரு தனி மனிதனுடைய உணவுக்குச் செலவிடக் கூடியது இரண்டு டாலர் என்று சொல்கிறார்கள். அப்படி என்றால் 96 ரூபாய். ஆனால் நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையிலே சொல்கின்றபோது, அவர்கள் சொல்வது, ஒரு தனி நபருக்கு, உணவுக்கு ஏழு ரூபாய்கூட செலவழிக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். இரண்டு டாலர் என்றால் 96 ரூபாய், நமக்கு 7 ரூபாய்கூட முடியவில்லை. ஆகவே, அவர்களுடைய சர்வதேச கணக்குப்படி எடுத்துக்கொண்டால், 96 ரூபாய் கணக்கைப் பார்த்தால் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழக் கூடியவர்கள் எண்ணிக்கை 70, 75 சதவீதத்திற்கு மேலே போய்விடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், நேரம் இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** சரி, பேச்சை முடித்து விடுகிறேன் தலைவரே. காவிரிப் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினை. டெல்டா விவசாயிகளினுடைய பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவையெல்லாம் ஏற்கெனவே பேசப்பட்டு விட்டன. திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** டெல்டா விவசாயிகளினுடைய பிரச்சினையிலே தலையிட்டு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பேச்சை முடித்துவிடுங்கள். மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் (குறுக்கீடு) நேரம் இல்லை. நேரம் இல்லை. (குறுக்கீடு) 40 நிமிடங்களுக்கு மேலே பேசக் கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இதோ பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, வேறு பிரச்சினைகளை எல்லாம் பிறகு பேசலாம்.

**திரு. ஜி.கே. மணி:** பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய பேச வேண்டுமென்று சொன்னாலுங்கூட, நேரம் இல்லாத காரணத்தினாலே இந்த ஆளுநர் உரையை திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தேன். படித்துப் பார்த்ததிலே—இன்றைக்கு கல்லறையைத் தோண்டிப் பார்த்தால் என்ன இருக்கும்? எப்படி இருக்கும்? ஆகவே, அதைப்போல ஒரே வார்த்தையில், ஒரே வாக்கியத்தில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்த ஆளுநர் உரை என்பது நேர்த்தியாக, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை என்பதைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது இன்று மூன்றாவது நாளாக விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சிகளின் சார்பில் நாங்கள் பேசி முடித்த பிறகு நாளையதினம் முதல்வர் அவர்கள் பதில் அளிக்க இருக்கிறார்கள். மேதகு ஆளுநர் அவர்கள் அரசியல் சட்ட வழிப்பட்ட தன்னுடைய கடமையைத் தான் ஆற்றியிருக்கிறார்கள். எனினும் இந்த ஆண்டின் முதல் கூட்டத்தைத் தொடங்கி வைக்கும் வகையில் வருகை புரிந்து



உரையாற்றியதற்காக நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஆளுங்கட்சியினரால் முன்மொழியப்பட்டிருக்கிறது. இந்த அரசு தயாரித்திருக்கும் அறிக்கையை ஆளுநர் படித்ததால், ஆளுங்கட்சி தரப்பில் நன்றி தெரிவிக்கும் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனினும் இந்த உரையில் அடங்கியுள்ள அரசின் கொள்கை அறிவிப்புகளுக்கு அரசுதான் பொறுப்பேற்கிறது. ஆளுநர் அதற்கு எந்த வகையிலும் பொறுப்பாளர் அல்ல. அந்த வகையில் எதிர்க்கட்சிகளைச் சார்ந்த நாங்கள் அரசின் கொள்கைகளை ஏற்க முடியாது என்பதைத் தெரிவிக்கும் வகையில் அவையைவிட்டு வெளியேற நேர்ந்தது.

ஆளுநர் உரையை அமைச்சரவையே முடிவு செய்கிறது. அரசின் எந்த ஒரு முடிவாக இருந்தாலும் அது அமைச்சரவைக் கூட்டத்தில்தான் எடுக்கப்படுகிறது. எந்த ஒரு அமைச்சரோ முதலமைச்சரோ அரசின் முடிவை தனிப்பட்ட முறையில் எடுக்க முடியாது. இதுதான் அமைச்சரவையை மையமாகக் கொண்ட பாராளுமன்ற ஜனநாயகத்தின் அடிப்படையாக இருக்கிறது. ஆளுநர் உரையில் கூறப்பட்டிருப்பதைப்போல வளமானதும், உயிரோட்டம் மிக்கதுமான நமது ஜனநாயக மரபுகளைத் தொடர்ந்து பேணிக் காக்க வேண்டுமென்று ஆர்வம் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதேயாகும். ஆயினும் வெளித்தோற்றம் மட்டும் ஜனநாயகப் பண்புகளைக் கொண்டதாகவும் உள்ளடக்கத்தில் அது வேறு விதமாகவும் அமைந்திருந்தால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. வள்ளுவர் கூறியதைப்போல,

'புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்'

வாய்மையே வெல்லும் என்பதைத்தான் நம்முடைய குறிக்கோளாகக் கொண்டிருக்கிறோம். Marxism is omnipotent because it is true. உண்மையை உரைப்பதால் மார்க்சிஸ தத்துவம் சர்வ வல்லமை மிக்கது என்று கூறுவார்கள். அதேபோன்று, there is no religion higher than truth என்பதுதான் பிரம்மஞான சபையின் அடிநாதமாகவும் விளங்குகிறது. எனவே, உண்மையை உரைப்பதாக இருந்தால் மட்டுமே, ஆளுநர் உரையும் உயிரோட்டமுள்ளதாக இருக்க முடியும். வளர்ச்சி மற்றும் வளமான வாழ்க்கைப் பாதையில் வழி நடத்தவல்ல ஒரு அரசையே வரவிருக்கும் மக்களவைத் தேர்தலில் இந்திய மக்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்ற நம்பிக்கையையும் ஆளுநர் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். எனினும், மத்திய அரசைப் பொறுத்தவரை, பிரதமர் வாஜ்பாய் ஒரு நல்ல மனிதர் என்று பாராட்டப்பட்டிருந்தாலும், நல்லாட்சியைத் தரும்

வல்லமை மிக்கவராக அவரால் விளங்க முடியவில்லை என்பது ஒரு யதார்த்தம். எனினும், அவரை விட்டால், வேறு யாரையும் முன்னிறுத்தி வாக்கு கேட்கமுடியாது என்ற ஒரு பரிதாப நிலையே அந்த அணியில் நிலவுகிறது. அந்த அணியிலுள்ள (குறுக்கீடுகள்) சங் பரிவார் அமைப்பைச் சேர்ந்தவர்களே அவரை ஒரு முகமூடியாகக் கொண்டிருப்பதாகத்தான் கூறியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) வாஜ்பாய் ஒருவர் மட்டும் முகமூடி தரித்துக்கொண்டு முன்னேவர முடிந்தாலும் மற்றவர்கள் எல்லாம் மக்களிடம் முகத்தையே காட்ட முடியாமல்தான் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** எங்களாலாவது பிரதமர் வாஜ்பாய் என்று சொல்ல முடிந்தது. எதிர்க்கட்சியிலே இப்பொழுது புதிதாக உறவு கொண்டிருப்பவர்கள் யாரையுமே காண்பிக்க முடியவில்லையே (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அப்படியானால் இவ்வளவு அச்சம் தேவையில்லையே. இன்னும் 9 மாத க ாலம் கழித்து நடக்கும் தேர்தலுக்கு, இப்பொழுதே ஏன் நீங்கள் அச்சாரம் போடுகிறீர்கள்? ஏன் மக்களவையைக் கலைத்தீர்கள்? சென்ற முறை 1999-லே நீங்கள் வாக்கு கேட்ட நேரத்திலே நீங்கள் சொன்னது, 5 ஆண்டு காலம் ஆளவேண்டுமென்று நாங்கள் நினைத்தோம். 5 ஆண்டு காலம் ஆண்டால்தான் ஒரு நிலையான அரசைக் கொடுத்து, அந்த நிலையான அரசின் மூலமாக பல நன்மைகளைச் செய்ய முடியும். ஆனால் எங்களை 13 மாத காலத்திலேயே வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டார்கள் என்று 18-வது மாதம் சொல்லி ஓட்டு கேட்டீர்கள். அது ஓரளவுக்கு பலனும் அளித்தது. அதுபோலவே உங்களுக்கு வாக்கும் அளித்தார்கள். ஆனால் திடீரென்று சென்ற ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்தே தேர்தல், தேர்தல் என்று கூறிக்கொண்டிருக்கிறீர்களே, உங்களுக்கு தன்னம்பிக்கை இல்லாத காரணத்தாலேதான். வாஜ்பாயை விட்டால் ஆள் இல்லை என்று நான் சொன்ன உடனே எழுந்து சொன்னார். அதற்கு ரொம்ப மகிழ்ச்சி. ஆனால் இரண்டு மாதங்களுக்கு முன்னாலே அல்லது 3 மாதங்களுக்கு முன்னாலே அவருடைய கட்சியின் தலைவர் என்ன தெரியுமா சொன்னார்? வாஜ்பாய் மற்றும் அத்வானி 2 பேரின் தலைமையிலும் நாங்கள் தேர்தலை சந்திப்போம்.



'லோக் புருஷ், யுக புருஷ்' அது என்ன லோக் புருஷ், யுக புருஷ், ஒருவர்-வளர்ச்சிக்கு வாஜ்பாய், இரும்பு மனிதர் அத்வானி. வாஜ்பாய் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தார். வாஜ்பாய் என்ன சொன்னார்? அடுத்த தேர்தலில் பாரதிய ஜனதா, அத்வானியின் தலைமையிலே தேர்தலை சந்திக்கும் என்று சொல்லி அமர்ந்துவிட்டார். உடனே அய்யய்யோ, அய்யய்யோ, நான் அப்படிச் சொல்லவேயில்லை. நான் சொல்லவில்லை. நான் எங்கே சொன்னேன் என்று அலறினார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. (சிரிப்பு)

**திரு. கே.என். இலட்சுமணன்:** காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருந்த திரு. சோ. பாலகிருஷ்ணன் என்ன சொன்னார் என்பதையும் விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அந்த அணியில் உள்ள சில தலைவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. இப்பொழுது ஆளுநர் உரைக்கு வாருங்கள். (சிரிப்பு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆளுநர் உரையில்தான் பேசுகிறேன். ஆளுநர் உரையில் உள்ளது. ஆளுநர் உரையில் இல்லையென்றால் நான் பேசியிருக்க மாட்டேன். ஆளுநர் ஆரம்பத்திலேயே தேர்தலைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். அதைத்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாஜ்பாய், அத்வானியைப் பற்றியெல்லாம் ஆளுநர் உரையில் சொல்லவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வாஜ்பாய், அத்வானி என்று பெயர் வரவில்லையே தவிர, மத்திய அரசாங்கத்திலே எப்படிப்பட்ட அரசு அமையவேண்டுமென்பதைச் சொல்லியிருக்கிறார். அதனால் நான் சொல்கிறேன். எப்படிப்பட்ட அரசு அமைய வேண்டும்? அப்படியென்றால் இதைச் சொல்லித்தான் ஆக வேண்டும். சொல்லாமல் எப்படி முடியும்? அந்த அணியிலுள்ள சில தலைவர்கள் தேவலோகத் தலைவர்களாகவே காட்சியளித்து வருகிறார்கள். (குறுக்கீடு) ஏங்க சொல்லிக்கொடுத்து, அவர்களே சொன்னார்கள். விடுங்களேன். (சிரிப்பு)

**திரு. கே.என். இலட்சுமணன்:** இரண்டு தலைவர்களுடைய அனுபவம் உண்டே தவிர, எங்களுக்கு அந்த 2 தலைவர்கள் இல்லை.

[2004 பிப்ரவரி 9

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவர் என்ன சொல்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. அதாவது என்னுடைய கேள்விக்கு அது பதிலும்கூட ஆகாது. அந்த அணியிலுள்ள சில தலைவர்கள் தேவலோக தலைவர்களாகவே காட்சி அளித்து வருகிறார்கள். தேவலோக மாந்தர்களுடைய கால்கள் இந்த மண்ணில் பதிவதில்லை என்று கூறுவார்கள். அத்தகைய தலைவர்களை தூரத்தில் இருந்துதான் தரிசிக்க வேண்டும். அவர்களை எளிதில் நெருங்கவும் முடியாது. எட்ட இருந்துகொண்டு அவர்கள் எறிவதை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை ஒரு பாரம்பரிய தலைமை இருக்கிறது. அந்தத் தலைமை தியாகத்தில் பூத்த புத்தம்புது மலர்களாக மணம் பரப்பிக்கொண்டிருக்கிறது. அனுபவமும், ஆற்றலும் மிக்க தேசத் தலைவர்களாலே இயக்கப்படும் காங்கிரஸ்...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேதகு ஆளுநர் உரையின்மீது பேசுகிறாரா? அல்லது பொதுக் கூட்டத்தில் பேசுகின்றாரா என்பது குறித்து விளக்க வேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீங்கள் நான் பேசக்கூடாது என்று நினைத்திருந்தால், ஆளுநர் உரையிலே அதை சேர்த்திருக்கக்கூடாது. (குறுக்கீடுகள்) உங்கள் அமைச்சரவை எடுத்த முடிவு. நான் எடுத்த முடிவு அல்ல. உங்கள் அமைச்சரவை எடுத்த முடிவிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த franchise-ஐ exercise செய்யவேண்டும் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறதேயொழிய யாரையும் குறிப்பிடவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், வேறு கருத்துகள் எவ்வளவோ இருக்கின்றன. சொல்லுங்கள். (சிரிப்பு)

***திரு. துரைமுருகன்:** எந்தக் கருத்தைச் சொல்லவேண்டும் என்று அவருக்குத்தானே தெரியும். நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அனுபவமும் ஆற்றலும் மிக்க தேசத் தலைவர்களாலே இயக்கப்படும் காங்கிரஸ் பேரியக்கத்தின் கூட்டுத் தலைமை வல்லமை கொண்டது. பாரதத்தின் விடியலுக்கு பூபாளம் இசைப்பது. அதற்கு ஈடு இணையாக காட்டுவதற்கு எந்த ஒரு



2004 பிப்ரவரி 9] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

இயக்கமும் இந்த மண்ணில் இன்னும் தோன்றவில்லை. இளங்கோ அடிகள் கூறியதைப்போல (குறுக்கீடு) "கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்" என்பதற்கு ஒப்ப, இணையற்ற தலைவராக விளங்கி செயற்கரிய செய்த ராஜீவ் காந்தியும், துணைவியராக மாண்புக்குரிய சோனியா காந்தி அவர்களால் தலைமை ஏற்று வழிநடத்தப்படும் தனித்தன்மை வாய்ந்த இயக்கம் ஆகும். ஒரியா மண்ணிலே தோன்றியிருந்தாலும், அந்த மொழியே தெரியாத ஒருவரே அந்த மாநிலத்தின் முதல்வராக இருக்கிறார். அவர் மண்ணோடு ஒட்டாத மைந்தர். அவருடைய தலைமையையேற்று தவறு செய்துவிட்டோம் என்று ஒப்புக்கொண்ட முக்கியத் தலைவர்கள் பலரும் அவரைவிட்டு விலகி காங்கிரஸில் இணைந்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-00*

இந்தோனேஷியா சென்றிருந்த பிஜு பட்நாயக்-ஐ இந்தோனேஷிய அதிபர் சுகர்னோ அவர்கள், தன்னுடைய புதல்விக்குப் பெயர் சூட்டுமாறு கேட்டுக்கொண்டார்கள். அவரும் சுகர்னோவின் புதல்விக்கு 'மேகவதி' என்ற இந்தியப் பெயரைச் சூட்டி மகிழ்ந்தார்கள். ஆயினும், அவருடைய புதல்வருக்கு ஒரிய மொழியே தெரியாது என்ற நிலை நீடித்திருப்பது ஒரு அவலமேயாகும். இந்நிலையில், இந்த நாட்டின் பெருமைமிகு மருமகளாக வந்துவிட்ட சோனியா காந்தி அவர்கள், இந்த மண்ணையே தன் கண்ணிலும் மேலாகக் கருதுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டின் மொழியையே கற்றுத் தேர்ந்து....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போழுதே கூட்டணி தன்னுடைய கடமையைச் செய்கிறது என்று தெரிகிறது. (சிரிப்பு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீங்கள் ஒன்றுசேர்த்து வைக்கும்போது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது; மிகுந்த மகிழ்ச்சி. இந்த நாட்டின் மொழியையே கற்றுத் தேர்ந்து மக்களோடு அன்றாடம் உறவாடி வருகிறார்கள். அவரே காங்கிரஸ் இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பது நாம் பெற்றிருக்கும் ஒரு பேறாகவே கருதப்படவேண்டும். அந்தவகையில், இந்த இயக்கம் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்ததே தவிர, தனித்து விடப்பட்டது அல்ல.

இந்திய மருத்துவரான டாக்டர் கோட்னிஸ், யுத்த காலத்தில், போர் காலத்தில் சேவை செய்வதற்காக சீனாவிற்குச் சென்றார். அங்கு சீனப் பெண்மணி ஒருவரையே திருமணம் முடித்துக்கொண்டார். மருத்துவச் சேவையில் மகத்தான பேராதரவைப் பெற்ற டாக்டர் கோட்னிஸ் அங்கேயே மரித்துப் போனார். கணவனை இழந்த அவருடைய

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2004 பிப்ரவரி 9

மனைவியார் கணவரின் தாயகமான இந்தியாவிற்கு வந்தார். அவரை இந்திய மக்கள் அன்புடனும், வாஞ்சையுடனும் வரவேற்றார்கள். கோட்னிஸ் அவர்களுடைய வாழ்க்கை திரைப்படமாக வந்து உலகப் புகழ் பெற்றது. நெஞ்சைத் தொடும் நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய அந்தத் திரைப்படம் சரித்திரம் படைத்தது. இந்தியாவிற்கு வந்து தனது கணவரின் உறவினர்களுடன் ஒன்றிவிட்ட கோட்னிஸ் அவர்களின் துணைவியாரை அயல்நாட்டவர் என்று கூறி யாரும் ஒதுக்கி வைக்க முயலவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கொஞ்சம் இந்த ஆளுநர் உரையிலே வந்தீர்கள் என்றால் நல்லது. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வந்துவிடுகிறேன், வந்துவிடுகிறேன். ஆளுநர் உரைதாங்க. ஒவ்வொரு paragraph-ஆக வரப்போவதில்லை. நான் ஒவ்வொரு paragraph-ஆக இப்படி பேசப் போகிறேன் என்று நினைக்கிறீர்கள்; அப்படியில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. தேர்தல் என்று ஆளுநர் குறிப்பிட்ட ஒரு காரணத்திற்காக (குறுக்கீடு) தேர்தல் என்று ஆளுநர் குறிப்பிட்ட ஒரு காரணத்திற்காக நீங்கள் காங்கிரஸ் கட்சியைப் பற்றி நிலை விளக்கம் இவையெல்லாம் பேசுவதற்கு வேறு மேடைகள் இருக்கின்றன. ஆளுநர் உரையின் உள்ளே புகுந்து பேசினால்தான் நீங்கள் பேசி முடிக்க முடியும். ஏனென்றால், இன்னொரு தலைவர் திரு. துரைமுருகன் பேசவேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் வேகமாகத்தான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 1-20, 1-22 மணி வரைக்கும் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை. அது போதாது. நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான் முடியும். அதற்குப்பிறகு திரு. துரைமுருகன் பேசவேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, நான் அவரிடம் வாங்கிக்கொள்கிறேன். நீங்கள் மிச்ச நேரத்தை எனக்குக் கொடுங்கள். அதாவது, பாரதிய ஜனதாவைப் பொறுத்தவரையில், அவர்களுடைய தலைவர் திரு. வெங்கையா நாயுடுவே சொல்லியிருக்கிறார். என்ன சொல்லியிருக்கிறார் என்றால், அங்கு அனைத்துமே வாஜ்பாய்-ஆகத்தான் இருக்கிறார். இரண்டாவது ....



2004 பிப்ரவரி 9]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை குறித்த விவாதம் நடந்து கொண்டிருக்கும்போது, சோனியா காந்தியினுடைய வாழ்க்கை வரலாறு, வாஜ்பாயினுடைய வாழ்க்கை வரலாறை பேசுவது முறையல்ல. subject-க்குவரவேண்டும். அவையினுடைய விதிகளில் இப்படிப் பேசுவதற்கு இடம் இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், அவையினுடைய நேரம் என்பது குறைவாக இருக்கிறது. அதற்காகச் சொல்கிறேன். நீங்கள் இவற்றைப் பேசிவிட்டு, வேறு கருத்துகளைப் பேசுவதற்கு நேரம் இல்லை என்று வருத்தப்படக் கூடாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தச் சம்பந்தமும் இல்லாமல் காலையிலே சோனியா காந்தி பெயரை அவர்தான் சொன்னார். இப்போது நான் சோனியா காந்தியினுடைய பெயரைச் சொன்னால் என்ன கஷ்டம் அவருக்கு? அதிலே என்ன சிரமம்? நீங்கள் சொல்கிறீர்கள், நான் சொல்கிறேன். நான் இந்தமாதிரி பேசிப் பழக்கப்பட்டவன் அல்ல. என்னுடைய பேச்சுக்களை எடுத்துப் படித்துப் பாருங்கள். ஒரு பேச்சிலேகூட நான் இப்படிப் பேசியது இல்லை. ஆனால், today I am forced, I am rather compelled to speak in this vein. அதனாலே, நான் ஆளுநர் உரையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 1-22 மணி வரைக்கும் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவரே கூறியதைப்போல அவர்கள் எடுத்துக்கொள்கிற முக்கியமான பிரச்சினைகள் மூன்று. ஒன்று, வளர்ச்சி, வளர்ச்சி, வளர்ச்சி. இரண்டு, வாஜ்பாயி, வாஜ்பாயி, வாஜ்பாயி. மூன்று, இந்தியா, இந்தியா, இந்தியா. இந்த மூன்றில்தான் அவர்களுடைய மூச்சே அடங்கியிருக்கிறதாம். நெருப்பு பிடித்து எரிவதற்கும், விளக்கு ஏற்றப்பட்டதற்கும் வேறுபாடுகள் தெரியாதவர்களாக அந்த இயக்கத்தினர் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் இந்தியா பற்றி எரிந்து கொண்டிருப்பதைப் பார்த்தும்கூட, ஒளிர்கிறது, ஒளிர்கிறது என்று ஓங்காரம் இடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) கங்கையும், காவிரியும், உற்பத்தியாகும் இடத்தில் வாழ்பவர்களுக்கு மட்டுமே உரிமை படைத்தவை அல்ல. அதைப் போன்றே பிறருக்காகவே வாழும் பெருமைகொண்ட மனிதர்கள், எங்கு பிறந்திருந்தாலும், அவர்கள் எல்லோருக்கும் உரியவர்களாகவே விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்த வரிசையில் வருபவர்தான் அன்னை தெரசா...



2-26057

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2004 பிப்ரவரி 9

வரிசையிலே முன்னணியில் நிற்கும் அன்னை சோனியா காந்தி அவர்களை அயல்நாட்டவர் என்று கூறி கொச்சைப்படுத்த முயல்வது, மனித இயல்புக்கே மாறானது. இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டு பல நாடுகளில் குடியேறி வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களைப்பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும். பல வெளிநாடுகளில் பிரதமர் உட்பட பல முக்கிய பொறுப்புகளில் அமர்ந்து அரசுகளை வழி நடத்தியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-05

ஒரு குழந்தை தன் தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தையோ, அல்லது தந்தையின் பெயரில் உள்ள முதல் எழுத்தையோ, அல்லது பெற்றோர்களுடைய பெயரில் உள்ள முதல் எழுத்தையோ, தன்னுடைய பெயரின் முதல் எழுத்தாக வைத்துக்கொள்ளலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது இந்த அரசின் புரட்சிகரமான கொள்கை என்றும், பெண் உரிமையை பெருமளவுக்கு உயர்த்தி உள்ளது என்றும் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமணம் முடிந்த பெண்களைப் பொறுத்தவரையில் கணவனுடைய பெயரை, தன்னுடைய பெயருக்குப் பின்னாலே சேர்த்துக்கொள்வார்கள். கமலா நேரு என்றும், கஸ்தூரிபா காந்தி என்றும், ஜோதி வெங்கடாசலம் என்றும் சேர்த்துக்கொள்வார்கள். அதுபோல சோனியா காந்தி அவர்களும் அந்தப் பண்பைப் போற்றும் வகையில் மண்ணிற்கேற்ப தன்னுடைய பெயரை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

புதிய தொழில் கொள்கை, தொழில்களைத் தொடங்குவதற்கு தமிழக அரசு அளிக்கும் உதவிகளைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. மத்திய அரசு பின்பற்றும் கொள்கையைத்தான் இந்த அரசும் பின்பற்றுகிறது. செப்டம்பர் மாதம் 23 ஆம் தேதி வெளியிடப்பட்ட அந்த புதிய தொழில் கொள்கையின்படி பொதுத் துறை நிறுவனங்களில் அரசுக்குள்ள பங்குகளை விலக்கிக்கொள்வது, கூட்டுறவு நிறுவனங்களை தனியாரிடம் ஒப்படைத்துவிடுவது, தனியார் முதலீடுகளை ஊக்குவிப்பது, அன்னிய முதலீடு அதிகமாக இருக்கும் வகையில், கவர்ச்சிகரமான சலுகைகளை வழங்குவது, தொழில்களைத் தொடங்குவதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை அரசே ஏற்படுத்திக் கொடுப்பது போன்றவையே தமிழக அரசு அறிவித்துள்ள புதிய தொழில் கொள்கையில் இடம்பெற்றிருக்கின்றன.



2004 பிப்ரவரி 9] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

புதிய தொழில் கொள்கையைப் பின்பற்றியதால் தேசிய அளவில் 40 சதவீதம் சிறுதொழில்கள் மூடப்பட்டுவிட்டன. 20 கோடி பேருக்கு வேலை இல்லை. கடந்த 5 ஆண்டுகளில், சிறு தொழில் துறையில் வெளிநாட்டு முதலீட்டை அனுமதித்ததால் 40 சதவீதம் தொழில்கள் மூடப்பட்டு, 5 கோடி பேர் வேலை இழந்திருக்கிறார்கள். நாடு முழுவதும் வேலைவாய்ப்பின்றி இருக்கும் பெண்கள் கிராமப்புற மக்கள் ஆகியோரையும் சேர்த்தால் வேலைவாய்ப்பில்லாதோரின் மொத்த எண்ணிக்கை 20 கோடி. நகர்ப்புறங்களில் வசிப்போர்கள், 60 சதவீதம் மக்கள் குடிசைப் பகுதியில் வாழ்கிறார்கள். கிராமப்புறங்களில் வாழ்கிறவர்கள் 80 சதவீதம் பேர் ஏழைகள். இந்த இலட்சணத்தில் இந்தியா ஒளிர்கிறது என்று அவர்கள் தம்பட்டம் அடித்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில்..

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்து கிடக்கின்ற சிறுதொழில்களுக்காக upgradation of technology.. ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. நீங்கள் பேசுங்கள். அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். ஓய்வாக பிறகு பேசலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தமிழகத்தைப் பொறுத்தவரையில்..

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இப்போது அவர்கள் பக்கத்தில் இருக்கிற தோழமைக் கட்சியாக இருக்கின்ற தி.மு.க.விலே அப்போது மத்திய அமைச்சராக இருந்த முரசொலி மாறன் வகுத்த அந்தத் தொழில் கொள்கையின் காரணமாகத்தான் எந்த அளவிற்கு இந்தியாவில் இருக்கின்ற தொழிற்சாலைகள் எல்லாம் நசுக்கப்பட்டிருக்கின்றன என்பது உலகத்திற்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** கடந்த 1½ ஆண்டு காலத்திற்கு மேலாக, 2 ஆண்டு காலத்திற்கு மேலாக வேறு தொழில் துறை அமைச்சர் பொறுப்பேற்று நடத்திக்கொண்டிருக்கிறார். தனிப்பட்ட முறையில் மாறன் ஒரு முடிவு எடுக்க முடியாது. அங்கே Cabinet Meeting என்றால், Cabinet Meeting—காகத்தான் நடக்கும். சாதாரணமான Minister of State கூட அந்தத் துறை சம்பந்தப்பட்டவர்கள் உள்ளே போனால் அவர் தன்னுடைய கருத்தைச்

சொல்வார். பிரதம மந்திரியே சொன்னாலுங்கூட ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னால், அதை ஏற்றுக்கொள்வார்கள், ஆக, இது அவர் மட்டும் எடுத்த முடிவு அல்ல. அது சரியான முடிவாக இருக்க முடியாது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் மூடப்பட்ட எந்த ஆலையும் இந்த ஆட்சியில் திறக்கப்படவில்லை.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதோ மாண்புமிகு முரசொலி மாறன் அவர்கள் எடுத்த முடிவு. அந்தத் திட்டத்தால்தான் தொழில் துறை நசிந்து போனது என்று சொன்னார்கள். அவர் 'தோகா' விலும் international level-லிலும் மற்றும் இருக்கிற தொழில் துறையிலும் மாற்றியமைத்த தொழில் கொள்கையின் காரணமாகத்தான் இந்தியாவில் தொழில் வளர்ச்சி அடைந்திருக்கிறது. தமிழ்நாட்டிலேயும் தொழில் வளர்ச்சியாக வேண்டுமென்றுதான் நாங்குநேரியிலே ஒரு பூங்காவைக் கொண்டு வந்தார்கள். அதை நடத்துவதற்கு உங்களுக்கு வக்கில்லை, வகையில்லை, அவர்மீது குறை சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் இதே பிரச்சினையை எழுப்பி அன்றைக்கு விரிவான பதில் கொடுக்கப்பட்டது. நாங்குநேரியிலே அவசரக்கோலத்திலே, நீங்கள் அந்த இடமும் ஆர்ஜிதம் செய்யாமல் தேர்தலை மனதிலே வைத்து செய்யப்பட்டதையெல்லாம் நாட்டு மக்கள் அறிவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கும் மறுவாழ்வு அளிக்கப்படவில்லை, வறுமையில் வாடிய பல குடும்பங்கள்...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய அந்தக் கூட்டணி எப்படிப்பட்ட முரண்பாடுகள் உள்ளன என்பதை இப்போது அவர்களுடைய இரண்டு பேச்சுகளில் இருந்து நீங்கள் நிச்சயமாக அறிய முடியும். இவருடைய பேச்சில் தொழில் வளர்ச்சி இல்லை என்று சொல்கிறார்; அவருடைய பேச்சில் தொழில் வளர்ச்சி உள்ளது என்று சொல்கிறார். எது உண்மை?





*பிற்பகல் 1-10*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமையில் வாடிய பல குடும்பங்கள் சிதைந்து சின்னாபின்னமாகிவிட்டன. மூடப்பட்ட ஆலைகள் ஏராளம். சென்னையாக இருந்தாலும், கோவையாக இருந்தாலும், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலே ஏராளமான ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஜவுளி ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. நூற்பாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இன்னும் பல ஆலைகளை மூடிக் கொண்டிருக்கிறார்கள். மூடிய ஆலைகளைத் திறப்பதற்கு எந்த வழியும் காணப்படவில்லை. அரசு அதற்கான முன்முயற்சிகளை எடுத்ததாகவும் தெரியவில்லை. பஞ்சாலைகளில் வேலையிழந்த தொழிலாளர்கள் இலட்சக்கணக்கான பேர் இன்று தெருவிலே நிற்கிறார்கள். அந்த பஞ்சாலைகளைத் திறப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது; என்ன செய்யப் போகிறீர்கள் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், பஞ்சாலை அதிபர்கள் சொல்கிறார்கள்; எங்களுக்கு கச்சாப் பொருள் பஞ்சு விலை அதிகம். எனவே, எங்களாலே தொழில் நடத்த முடியவில்லை என்று சொல்கிறார்கள். கைத்தறி நெசவாளர்கள் சொல்கிறார்கள்; எங்களுக்கு இந்த நூல் விலை அதிகம். எங்களாலே இந்த அளவிற்கு நூலை விலை கொடுத்து வாங்கி, எங்களாலே நெசவுத் தொழில் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். ஆக, கைத்தறி நெசவாளர்களும் பாதுகாக்கப்பட வேண்டும். அதேபோல, பஞ்சாலைத் தொழிலாளர்களும் பாதுகாக்கப்பட வேண்டும். ஏனென்றால், தொழிலாளர்கள் பிரச்சினை; சாதாரணமான பிரச்சினை அல்ல. ஆகவே, ஒரு நல்ல முடிவு காண வேண்டுமென்று அன்போடு நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, Foundries, Engineering Industries. வார்ப்படத் தொழிற்சாலைகளும், Engineering தொழிற்சாலைகளும் கோவையிலே மிகக் கஷ்டமான நிலையிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. சென்ற மாதம, அல்லது சென்ற ஆண்டு கடைசி மாதத்திலே, அவர்கள் அரசுக்குப் பலமுறை வேண்டுகோள் விடுத்ததோடு அல்லாமல், ஒரு நாள் வேலைநிறுத்தமும் செய்தார்கள். நிரந்தரமாகச் செய்யப் போகிறோம் என்று சொன்னார்கள். நல்லகாலம் நிரந்தரமாகச் செய்யவில்லை. இப்பொழுது வேலைநிறுத்தம் செய்து, அவர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் என்ன பிரச்சினை என்று கேட்டால், வார்ப்படத் தொழிற்சா

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2004 பிப்ரவரி 9

மூடப்படுமேயானால், கோவையிலே மட்டும் ஒரு இலட்சம் தொழிலாளர்கள் வேலையிழப்பார்கள். ஏன் வார்ப்படத் தொழிற்சாலைகளை மூடப்போகிறோம் என்று சொல்கிறார்கள்? கச்சாப் பொருள் அனைத்தும் விலை அதிகம். இன்றையதினம் pig iron-தேனிரும்பு விலை பல மடங்கு உயர்ந்துவிட்டது. 10,300 ரூபாய்க்குச் சென்ற டிசம்பரிலே விற்றது என்று சொல்கிறார்கள். சிலபேர், இன்னும் குறைவாக விற்றதாகச் சொல்கிறார்கள். 10,300 ரூபாய்க்கே விற்றிருந்தாலுங்கூட, அவர்கள் கொடுத்த கணக்குப்படி இந்த டிசம்பரில் 15,500 ரூபாய் என்று சொன்னார்கள். நேற்றையதினம் நான் காலையிலே பேசினேன். 17,000 ரூபாய் கொடுத்தாலும், 18,000 ரூபாய் கொடுத்தாலுங்கூட, உடனடியாக pig iron கிடைக்காத நிலை இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

அதேபோல, ஸ்டீல். ஸ்டீல் விலை இன்றைக்கு டன் ஒன்றுக்கு 23,000 ரூபாய். அவர்கள் 22,000 ரூபாய் என்றுதான் சொன்னார்கள். மெட்ராஸ்காரர் எனக்குச் சொல்கிறார்; இன்றைக்கு 23,000 ரூபாய் அதன் விலை என்று சொல்கிறார். அதேபோல, பழைய இரும்பு விலை உயர்ந்திருக்கிறது. Coke—நிலக்கரி விலை உயர்ந்திருக்கிறது. Foundries-ஐ நடத்த முடியவில்லையென்று சொன்னால்; பல மாநிலங்களுக்கும் சரி, இந்தியா முழுவதற்கும் நாம் அங்கேயிருந்துதான் எடுத்துக் கொண்டிருக்கிறோம். பல இலட்சம் தொழிலாளர்கள் வேலை இழக்க வேண்டி வரும். எனவே, Engineering தொழிற்சாலைகளும், Foundries-ம் தொடர்ந்து இயங்குவதற்கு உரிய முயற்சிகள் எடுத்துக்கொண்டு, அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். மத்திய அரசோடு பேச்சுவார்த்தை தேவை என்று சொன்னால், மத்திய அரசோடு பேச்சுவார்த்தை நடத்தியாவது, அந்த Engineering தொழிற்சாலைகளும், வார்ப்படத் தொழிற்சாலைகளும் தொடர்ந்து இயங்குவதற்கு வழிகாண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சவுத் இந்தியா விஸ்கோஸ். இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன. தொழிலாளர்களுக்கு பல மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை. B.I.F.R.-க்குப் போனார்கள். B.I.F.R. தீர்ப்பு வழங்கிவிட்டது. அந்தத் தீர்ப்பின்படி, அந்தக் கம்பெனிக்குச் சொந்தமான சொத்தையெல்லாம் விற்று, கடன் கட்டி விடவேண்டுமென்று B.I.F.R. சொல்லியிருக்கிறது. ஆனால், மற்றவர்களெல்லாம் மேல்முறையீடு செய்திருக்கிறார்கள். A.I.F.R.-க்குச் சென்றிருக்கிறார்கள. அதன்படி அவர்கள் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்தத் தொழிற்சாலையை எடுத்து, தொடர்ந்து இயக்குவதற்கு சில



2004 பிப்ரவரி 9] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

பேர் அக்கறை காட்டியிருக்கிறார்கள். சிலபேர் ஆர்வமாக இருக்கிறார்கள். குறிப்பாக, Grasim, India Rayons என்று பல்வேறு கம்பெனிகள் இருக்கின்றன. அதேபோல, வங்கிகளும் உடனடியாக அந்தச் சொத்தையெல்லாம் முடக்க வேண்டும்; விற்று எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற வேகத்திலே இல்லை. அவர்களும் ஒப்புக் கொள்வார்கள். இரண்டு தரப்பையும் அழைத்து தொழிலாளர்களையும் அழைத்து, இன்றைய நிர்வாகத்தையும் அழைத்து, அரசுத் தரப்பிலேயும் நீங்கள் உட்கார்ந்து ஒரு பேச்சுவார்த்தை நடத்துவீர்களேயானால், நிச்சயமாக அதற்கு ஒரு விடிவுகாலம் பிறக்கும். ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கிடைக்கும். அந்தத் தாலுகாவிலேயே எந்த வேலைவாய்ப்பும் இல்லாமல், ஒரு அசாதாரணமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது (குறுக்கீடு) மேட்டுப்பாளையம் தாலுகா. அதற்கு நீங்கள் ஒரு வழிகாண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குச் சம்பளம் கிடைப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

H.P.F. Hindustan Photo Films. அந்த Hindustan Photo Films நிறுவனத் தொழிலாளர்கள் கடந்த பல நாட்களாக ஊட்டியில் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்நிறுவனம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது; தடுமாறிக் கொண்டிருக்கிறது. நாங்கள் செய்கிறோம், செய்கிறோம் என்று மத்திய அரசு சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால், எதையும் செய்ததாகத் தெரியவில்லை; செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், அது ஒரு prestige; நமக்கு ஒரு கௌரவமான தொழிற்சாலை அது. அதுமட்டுமல்ல, அந்தப் பகுதியிலே வாழ்கிற மக்களுக்குப் பலகாலமாக வேலைவாய்ப்பு கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு பெரிய தொழிற்சாலையாக இருந்து கொண்டிருக்கிறது. இன்று பல பேரை வெளியே அனுப்பியாகிவிட்டது. இருப்பவர்களுக்காவது வேலை தொடர்ந்து கிடைக்க நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். மத்திய அரசாங்கத்திலிருந்து—கடைசியாக நான் அங்கே மத்தியிலே இருந்த நேரத்திலே—26 கோடி ரூபாயை மானியமாக வாங்கிக் கொடுத்தேன். 5½ கோடி ரூபாய், கட்டிய வரியைத் திருப்பி அந்த கம்பெனிக்கே கொடுக்கச் செய்தேன். நான் 31½ கோடி ரூபாயை வாங்கிக் கொடுத்தேன். அதனால் கொஞ்ச நாள் இயங்கியது. மீண்டும் நல்லமுறையிலே இயங்குவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2004 பிப்ரவரி 9
பிற்பகல் 1-15

அதேபோல, கட்டடத் தொழில் மிக மோசமான நிலைக்கு வந்துவிட்டது. இன்று சிமெண்டின் விலை 180 ரூபாய். மணல் விலை உயர்ந்து இருக்கிறது. சென்னையிலேகூட மணலின் விலை உயர்ந்து இருப்பதாக நண்பர்கள் சொல்கிறார்கள். கோவை மாவட்டத்தை எடுத்துக்கொள்வீர்களேயானால், அரசு மணல் குவாரிகளை எடுத்துக்கொள்வதற்கு முன்பு விற்ற விலையைப்போல இரண்டு மடங்கு இன்றையதினம். முன்பு 4500 ரூபாய் கொடுத்தால் அல்லது 5000 ரூபாய் கொடுத்தால் 5 யூனிட் மணல் கிடைக்கும். குறைந்தபட்சம் நாலரை யூனிட் மணல் கிடைக்கும். இன்றைக்கு 4000 ரூபாய் கொடுத்தால் 2 யூனிட்தான் மணல் கிடைக்கிறது. இதே நிலைமைதான் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருப்பதாக நண்பர்கள் சொல்கிறார்கள். எனவே, மணல் விலையைக் குறைப்பதற்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். மணல் விலையைக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல சிமெண்ட் விலையையும் குறைப்பதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். ஏன் என்று சொன்னால், திடீரென்று ஒரே நாளில் 20 ரூபாய் ஏறுகிறது. சிமெண்ட் விலை இப்படி திடீரென்று ஏறுகிறது. 120 ரூபாய்க்குக் கொண்டு வந்து குறைத்தீர்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. குறைந்த சிமெண்டின் விலை இன்று மீண்டும் ஏறுவதன் மர்மம் என்ன? அதன் இரகசியம் என்ன என்பதை நீங்கள் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இரும்பு விலையையும் குறைக்க வேண்டும். இரும்பு விலை குறைந்தால்தான், இந்தப் பொருட்களின் விலைகள் குறைந்தால்தான் மீண்டும் கட்டடத் தொழில்கள் நடைபெறும். இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்க வேண்டிய ஆபத்து இருக்கிறது. இந்தத் தொழிலாளர்களின் நலனைக் கருத்திலேகொண்டு கட்டடத் தொழில் செம்மையாக நடைபெறுவதற்கு இந்தத் தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையைச் சுற்றியுள்ள ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ், பி.&சி.மில், டன்லப், மெட்டல்பாக்ஸ், எஸ். & எஸ். English Electricals மற்றும் அம்பத்தூர், கிண்டி போன்ற தொழிற்பேட்டைகளில் உள்ள தொழிற்சாலைகள் மூடப்பட்டு கிடக்கின்றன. பல தொழிற்சாலைகளை மூடுவதற்கு அரசால் அனுமதி மறுக்கப்பட்டும், சட்டவிரோத கதவு



2004 பிப்ரவரி 9] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

அடைப்பு என்று அறிவிக்கப்பட்டும் பல நிறுவனங்கள் அசைந்து கொடுக்கவேயில்லை. அவற்றிற்கு எதிராக அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தொழிலாளர்கள் சம்பளத்தைப் பிடித்தம் செய்த பணத்தைக்கூட கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செலுத்தவில்லை. இவ்வாறு தொழிலாளர் பணத்தை கோடிக்கணக்கில் கையாடல் செய்திருக்கும் பி.&சி. நிர்வாகத்தின்மீதோ, போரூர் எஸ். & எஸ். கம்பெனி நிர்வாகத்தின் மீதோ criminal நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆனால், காவல் துறையை நவீனப்படுத்தப் போவதாகவும், அதற்கென கோடிக்கணக்கில் பணத்தை செலவிடப் போவதாகவும் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. புதிய டி.ஜி.பி. அலுவலகம் கட்ட 30 கோடி ரூபாய் செலவிடப்போவதாகவும், 241.61 கோடி ரூபாய் செலவில் காவலர்களுக்கு வீடுகளைக் கட்டப்போவதாகவும், 77.09 கோடி ரூபாய் செலவில் புதிய சிறை வளாகம் கட்டப்போவதாகவும், சிறை நிருவாகத்தை நவீனப்படுத்த 19.07 கோடி ரூபாய் ஒதுக்கப்படுவதாகவும், 188 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைக்கப்போவதாகவும் ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கிறது. எனினும் வழிப்பறி, கொள்ளை, கொலை போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாத நாட்களேயில்லை என்ற அளவிற்கு இன்று நிலைமை மோசமாகிக் கொண்டே வருகிறது.

காவிரி பாசனப் பகுதியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாதந்தோறும் 30 கிலோ அரிசி 9.71 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டதாகவும், அதற்கான திட்டம் 115.94 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், மாநிலத்தின் அரிசி தேவை மாதம் ஒன்றிற்கு 1.75 இலட்சம் டன், அதாவது ஒன்றேமுக்கால் இலட்சம் டன் என்றும், தற்போது கையிருப்பு வெகுவாக குறைந்துவிட்டது என்றும் கூறப்படுகிறது. மதுரையிலுள்ள உணவுக் கிடங்கில் 30 டன் அரிசி மட்டுமே இருப்பதாகவும், தூத்துக்குடி, திண்டுக்கல், கோவை போன்ற இடங்களிலுள்ள உணவுக் கிடங்குகளில் கையிருப்பேயில்லையென்றும் கூறப்படுகிறது. இந்நிலையில் மாநிலத்தின் மொத்தத் தேவை எவ்வளவு என்பதையும், தேவையை நிறைவு செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அரசு தெரிவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் கூறி இருப்பதுபோல சட்டத்தினால் மட்டும் ஊழல் உட்பட எந்தக் குற்றத்தையும் ஒழித்துவிட முடியாது. இலாட்டரிச் சீட்டுகளை தடை செய்தும், கந்துவட்டி வசூலிப்புக்கு எதிராகவும் சட்டங்களைக் கொண்டு வந்திருப்பதும் ஒரு சமூக சீர்திருத்தப் பணி என்று கூறப்பட்டிருக்கிறது. ஆயினும், இந்தச்

சட்டங்களால் எதிர்பார்த்த பலன்கள் ஏற்படவில்லை என்பதை இந்த அரசு உணர வேண்டும்.

*12-ஆம் நிதிக் குழுவிடம் மத்திய வரி தொகுப்பிலிருந்து, மாநிலங்களுக்கு வழங்கும் பங்கை 29.5%-லிருந்து 50%-ஆக உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. அரசு நிருவாகத்தை நவீனப்படுத்துவதற்கும், தமிழ்நாட்டிற்குச் சில விசேஷ பிரச்சினை குறித்து தீர்வு காண்பதற்கும் அரசு மேற்கொள்ளும் முயற்சிக்கு நிதி உதவி அளிக்குமாறு ஆணையத்திடம் கோரியிருப்பதாகவும் கூறப்பட்டு இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி., 5 மணித்துளியில் பேசி முடித்துக்கொள்ளுங்கள். அடுத்து, துரைமுருகன் பேச வேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வேளாண்மையைப் பற்றியாவது நான் பேச வேண்டாமா? தயவு செய்து அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, துரைமுருகன் பேச வேண்டும். (குறுக்கீடு) இரண்டு மணிக்குள்ளேயாவது முடிக்க வேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சரி, முடிந்த வரைக்கும் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) கண்களை விற்று விட்டு சித்திரம் வாங்கிய கதையைப் போல, அரசு ஊழியர்களை வேதனைத் தீயில் வெந்து மடியச் செய்துவிட்டு நிர்வாகத்தினை நவீனப்படுத்துவதற்கு மத்திய அரசிடம் நிதி உதவி கோரியிருப்பதாகக் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு, மூன்று பக்கங்களை அப்படியே தள்ளி விடுங்கள். (சிரிப்பு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தமிழகத்தில் முழு பாதுகாப்பு நிலவுவதாக, குடிமக்கள் உணர்வதாகவும் ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கிறது. நாட்டின் பாதுகாப்பைக் கருதாமல் குறுகிய நோக்கத்தோடும் அரசியல் சுய இலாபத்திற்காகவும், 'பொடா' போன்ற சட்டங்களைப் பயன்படுத்தி அரசியல் எதிரிகளை இந்த அரசு பழி வாங்கி இருக்கிறது. கைது செய்யப்பட்டவர்களை ஜாமீனில் விடுவதற்குக் கூட கடும் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது. அரசாங்கத்தின் இந்தப் போக்கை உச்ச நீதிமன்றமே கண்டித்து இருக்கிறது. தமிழக அரசின் இத்தகைய போக்கினால்தான், 'பொடா' சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வர வேண்டிய நிலை மத்திய அரசுக்கு ஏற்பட்டது. அந்தத் திருத்தத்திற்கு எதிராக அ.இ.அ.தி.மு.க. மட்டுமே வாக்களித்தது. இவ்வாறு



எல்லோராலும் வெறுத்து ஒதுக்கப்படும் செய்யக்கூடாத செயல்களையெல்லாம் இந்த அரசு விருப்பத்துடனும், முனைப்புடனும் செய்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1-20

இரு நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சினைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் மட்டுமே தீர்க்க முடியும். அதேபோன்று இரு மாநிலங்களுக்கிடையே உள்ள பிரச்சினைகளை பேச்சுவார்த்தையின் மூலமாகத்தான் தீர்க்க முடியும். மத்திய அரசும், உச்ச நீதிமன்றமும் அவற்றால் உருவாக்கப்பட்ட மற்ற அதிகார அமைப்புகளும் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு உறுதுணையாகத்தான் இருக்க முடியும். இதனை மறந்துவிட்டு கர்நாடக மாநிலத்திடம் பேசவே மாட்டேன் என்ற நிலையை மேற்கொள்வது பிரச்சினைக்குத் தீர்வு காண உதவாது. அயோத்தி பிரச்சினையைக்கூட பேச்சுவார்த்தையின் மூலமாகத்தான் தீர்க்க வேண்டுமென்று பாரதப் பிரதமர் இரண்டு நாட்களுக்கு முன்னாலே குறிப்பிட்டு இருக்கின்றார்கள். காவிரி நீர்ப் பிரச்சினையை தனிப்பட்ட ஒரு கௌரவப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு பேச்சு வார்த்தைக்கு முன்னுரிமை வழங்காத போக்கு நம்மிடம் மேலோங்கி இருப்பதால்தான் உரிய தீர்வு காணப்படாமல் காலம் கடந்துகொண்டு இருக்கிறது. மற்ற அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பையும், ஆலோசனைகளையும் உரிய முறையில் பெற்றுக் கொள்வதற்கு முதலமைச்சர் முன்வரவில்லை என்பது ஒரு வருந்தத்தக்க நிலையாகும். கர்நாடக மாநிலத்திடம் தனிப்பட்ட மோதல் போக்கையும், காழ்ப்புணர்ச்சியையும் வெளிப்படுத்துவது நம்முடைய மாநிலத்தின் நலனுக்கு உதவுவதாக இருக்க முடியாது. கர்நாடக மக்களின் அன்பையும் பாசத்தையும் இயல்பாகவே பெற்றிருக்கிற நம்முடைய முதலமைச்சர், அவர்களுடைய ராஜதந்திர அணுகுமுறையின் மூலம் ஒரு நல்ல தீர்வை எட்டியிருக்க முடியும். ஜம்மு காஷ்மீர் பிரச்சினையில் தலையிட்டு அந்த அரசுக்குத் தகுந்த ஆலோசனை வழங்கவேண்டுமென்று சோனியா காந்தி அவர்களை சில எதிர்க்கட்சிகள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அதேபோல, இந்தப் பிரச்சினையிலும் ஒரு நல்ல தீர்வைக் காண்பதற்கு தன்னுடைய மேலான யோசனைகளை கர்நாடகத்துக்கு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதில் தவறு இல்லை. இந்தியா—பாகிஸ்தான் இடையேயுள்ள பிரச்சினையைக்கூட இரு நாடுகள் மட்டுமே பேசித் தீர்க்க வேண்டும். அமெரிக்கா, ரஷ்யா போன்ற நட்பு நாடுகள் அதற்குத் தார்மீக ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்க முடியுமே தவிர, நேரடியாகத் தலையிட முடியாது.

[2004 பிப்ரவரி 9

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினை குறித்து மிகத் தெளிவான விளக்கத்தை ஏற்கெனவே நான் அவையிலே கூறி இருக்கிறேன். பேச்சு வார்த்தை, பேச்சு வார்த்தை என்பது தமிழகத்துக்குச் செய்கின்ற துரோகம் என்பதற்கான காரணங்களையெல்லாம் நான் சொல்லி இருக்கிறேன். பேச்சுவார்த்தையெல்லாம் கடந்துதான் C.R.A. உச்ச நீதிமன்றம் என்ற அளவிற்கு இந்தப் பிரச்சினை சென்று இருக்கிறது. உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பையே துச்சமென மதிக்கின்ற குணமுள்ள ஒருவரிடம் பேசி, மீண்டும் காரியத்தை சாதிக்கலாம் என்று எண்ணுவது, காவிரியில் ஒரு சொட்டு தண்ணீர், இரண்டு சொட்டு தண்ணீர் வருவதைக்கூட வராமல் செய்து விடுவதற்கான வழிமுறையாக ஆகிவிடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் கருத்தில் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றுதான் தமிழகத்தைப் பாதுகாக்க முடியுமேயொழிய பேச்சுவார்த்தை என்பது கர்நாடகத்துக்குத்தான் வாழ்வளிக்கும் என்பதனை உணர்ந்து நாம் செயல்படவேண்டுமென்பதனை அவையின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேராசிரியர் அவர்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றுப் பிரச்சினையைக் குறித்து இந்த அவையில் விவாதிக்கத் தேவையில்லை; இதுபற்றி அடிக்கடி பேச வேண்டாம் என்ற ஒரு கருத்தைக் கொண்டவன்தான் நான். ஆனால் பேச்சுவார்த்தை மூலமாக கர்நாடகத்தோடு ஒரு நிரந்தரமான முடிவிற்கு வரவே முடியாது என்ற முடிவு திராவிட முன்னேற்றக் கழகம், அ.இ.அ.தி.மு.க., ஆகிய இரண்டு கட்சிகளும் நீண்டகாலமாக கொண்டு இருக்கிற கொள்கை. ஆனால் இப்போது சொல்லப்படுகின்ற பேச்சுவார்த்தை என்பது உடனடித் தேவைக்காக, தற்காலிகமாக, ஒரு சலுகை காட்டுகிற முறையில், அதில் நம்முடைய வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளச் செய்யும் முறையில் அந்த மாநிலத்தை அணுகி இருக்கலாம். அணுகுகிற முறையினாலே ஓரளவு அதன்மூலமாக நாம் சாதகம் பெறலாம், நம்முடைய பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்கலாம் என்று ஒரு தற்காலிக ஏற்பாடாக பேச்சுவார்த்தை என்று பேசப்படுகிறதே தவிர இந்தப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு உச்ச நீதிமன்றமோ அல்லது நடுவர் மன்றமோதான் முடிவு எடுக்க முடியும் என்ற கருத்திலே எந்த மாறுபாடும் இல்லை.



2004 பிப்ரவரி 9]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகத் தீர்வுக்குப் பேச்சுவார்த்தைத் என்றாலுங்கூட, நாங்கள் பேச்சுவார்த்தையில் இருக்கிறோம; ஒரு adjournment தாருங்கள் என்று தீர்ப்பாயத்திலும்; உச்ச நீதிமன்றத்திலும் வழக்குகளில் பல முறை வாய்தா வாங்கி, வாங்கி நமக்கு வரவேண்டிய சாதகமான தீர்ப்பு வந்துவிடும் என்ற அச்சத்தோடு தள்ளிப் போடுகின்ற ஒரு தந்திரத்தை அவர்கள் பல ஆண்டுக்காலமாக கையாண்டு கொண்டு இருக்கிறார்கள். இது நடைமுறை உண்மை. தற்காலிகத் தீர்வுக்குக்கூட தண்ணீர் வேண்டுமென்று நாங்கள் கேட்டு இருக்கிறோம். Monitoring Committee Meeting-க்கு சென்ற தலைமைச் செயலாளர் அவர்கள், அதிகாரிகளெல்லாம் அதை வற்புறுத்தி இருக்கிறார்கள். Monitoring Committee-யிலே இந்தக் கருத்தை எடுத்து வைத்தவுடன் Monitoring Committee பதில் சொல்வதற்குப் பதிலாக, கர்நாடக முதலமைச்சர் உடனடியாக பத்திரிகைக்குச் சென்று, சொட்டுத் தண்ணீர்கூட தமிழகத்திற்குத் தர மாட்டோம் என்று வெளிப்படையாக, தெளிவாகச் சொல்லிவிட்டார். உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கும் அதே பதிலைத்தான் சொல்லி இருக்கிறார். தயவுசெய்து, ஆங்கே எத்தகைய தந்திரமான அணுகுமுறையைக் கையாண்டு, இறுதியிலே தமிழகத்திற்கு சொட்டு நீர்கூட காவிரிக்கு வராத நிலையை உருவாக்கும் பணியிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு நாம் பிரச்சினையை அணுக வேண்டிய கட்டாய நிலையிலே இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., இந்தப் பிரச்சினை வேண்டாம். (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கூட அடுத்த பிரச்சினைக்குப் போகலாம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; தந்திரமாகப் போய் கர்நாடக முதலமைச்சர் ஆணையத்தை அணுகினார். நாம் நம்முடைய உரிமையைப் பெறுவதற்கு நம்முடைய முதலமைச்சர் ஒரு தடவைகூட ஆணையம் நடத்திய கூட்டத்திலே போய் கலந்துகொள்ளவில்லை. அதனாலேதான் கிடைக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டு விடுங்கள்.

பிற்பகல் 1—25

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் சொல்ல வருவது, கோர்ட்டிலே வழக்கைத் திரும்பப் பெறாமல், நம் உரிமைகளை விட்டுத் தராமல், பேச்சுவார்த்தை நடத்தலாம்; தவறில்லை. ஏனென்றால், நாம்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2004 பிப்ரவரி 9

பலமுறை பேச்சுவார்த்தை நடத்தி, தண்ணீர் பெற்றிருக்கிறோம். குண்டுராவ் அவர்களைச் சொன்னேன்; அதேபோல் கலைஞர் இருந்த காலத்திலேயும் சரி, எம்.ஜி.ஆர். இருந்த காலத்திலேயும் சரி, இதற்கு முன்பு, ஏன், இந்த முதலமைச்சர் இருந்த காலத்திலேயும்கூட, டெல்லியிலே கூட்டம் நடைபெற்றது. அதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துச் சென்றார்கள். திரு. பழனிசாமி அவர்கள்கூட என்னோடு வந்திருந்தார்கள். அன்றையதினம் மொத்தமே 11 டி.எம்.சி. தண்ணீர்தான் அங்கே இருந்தது. அதிலே, 6 டி.எம்.சி. தண்ணீர், புத்தாண்டுப் பரிசாக நமக்கு அன்றையதினம் நரசிம்மராவ் அவர்கள் அறிவித்தார்கள். அப்பொழுது நாங்கள் பேசியதன் விளைவாக. அந்தத் தண்ணீரை விட்டார்கள்; அதை எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். விடாமல் இல்லை. ஆகவே, இதை இனி அரசியல் ஆக்குவோமேயானால், அங்கேயும் கொந்தளிப்பு ஏற்படுகிறது. அரசியலை ஏற்படுத்தாதீர்கள். பிரச்சினையை விட்டுக் கொடுத்து, சுமூகமாகத் தீர்ப்பதற்கு வழிகாணுங்கள். கோர்ட்டிலே இருக்கிற வழக்கைத் திரும்பப் பெறச் சொல்லி, நான் ஒருபோதும் சொல்லமாட்டேன். நிச்சயமாக அதைச் சொல்லவில்லை. காவிரி நதிநீர் ஆணையம் இருக்கட்டும்; அது அப்படியே இருக்கட்டும். அதேபோல, கண்காணிப்புக் குழுவிற்கும் நீங்கள் செல்லுங்கள். பேச்சுவார்த்தையின் மூலமாக, உடனடியாக கொஞ்சம் தண்ணீர் கிடைக்கும் என்று சொன்னால், கேட்டுப் பெறுவதிலே எந்தத் தவறுமில்லை என்பதை நான் மீண்டும் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். காவிரி நதிநீர்ப் பங்கீட்டுத் தாவா பற்றியும், காவிரி நீர்ப் பாசனத்தைப் பற்றியும், அந்தப் பகுதியிலே வாழும் விவசாயிகளைப் பற்றியும் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆயினும், மத்திய, மாநில அரசுகளின்கொள்கையால், பெரும்பாதிப்புக்குள்ளாகியிருக்கும் நம்முடைய விவசாயிகளின் கண்ணீரைத் துடைப்பதற்கு எந்தவிதமான உருப்படியான திட்டமும் அறிவிக்கப்படாதது ஏமாற்றம் அளிப்பதாகவே இருக்கிறது.

தாராள இறக்குமதிக் கொள்கையால், வெளிநாடுகளின் விளைபொருட்கள் தங்குதடையின்றி வந்து குவியத் தொடங்கிவிட்டன. நமது விவசாயிகள் உற்பத்திச் செய்யும் பொருட்கள், அவற்றோடு போட்டிப் போட முடியவில்லை. எனவே, கடும் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையிலும், உள்நாட்டு விவசாயத்தைப் பாதுகாக்கும் வகையிலும், உரிய நடவடிக்கை மேற்கொள்ள இந்த அரசு தவறிவிட்டது.



2004 பிப்ரவரி 9] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

நெல் கொள்முதல் என்று சொன்னால், 'நாங்கள் சிலபல மையங்களைத் திறந்திருக்கிறோம்' என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், அதன் நிலைமை என்ன? நீங்கள் விதித்திருக்கிற நிபந்தனைகளின்படி யாருமே நெல்லை அங்கே கொண்டுவந்து தர முடியாததுதான் நிலைமை. இங்கே நெல் வராததற்கு அதுதான் காரணம். ஆனால், கடலிலே கொட்டினார்கள்; தெருவிலே கொட்டினார்கள் என்றால் கோபித்துக்கொள்ளாதீர்கள். யாராவது தவறு செய்திருந்தாலுங்கூட, அவர்கள் ஆத்திரத்திலே, கோபத்திலே செய்திருக்கலாம். அவர்களிடமிருந்து நீங்கள் கொள்முதல் செய்தால், அந்தப் பிரச்சினை முடிந்துபோகும். இப்போது என்ன சொல்கிறீர்கள் என்று சொன்னால், கடிதம் எழுதுகிறோம் என்று சொல்கிறீர்கள். இது, 'கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்'; வேறு ஒன்றுமில்லை.

அதேபோல், தேயிலை விவசாயிகளைப் பொறுத்தவரையில், கடந்த ஐந்தாண்டு காலமாக, விலையே கிடைக்காமல், எவ்வளவு கீழே போக வேண்டுமோ, அவ்வளவு கீழே போய், இன்றும் அங்கே குறைந்த விலைக்கு, 4½ ரூபாய்க்குத் தேயிலையை விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவ்வளவுதான் தொழிற்சாலைகள் எல்லாம் அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். நான் தேயிலை வாங்கச் சொல்லி சொன்னேன். நீங்கள் வாங்கியது உண்மைதான். ஆனால் நான் சொன்னது, பச்சைத் தேயிலை ஒரு கிலோவுக்கு 15 ரூபாய்க்கு வாங்குங்கள்; 15 ரூபாய்க்கு வாங்கி, இலாப நோக்கம் இல்லாமல் குறைந்த விலைக்கு நீங்கள் விற்பீர்களேயானால், மக்களுக்கும் குறைந்த விலைக்குத் தேயிலை கிடைக்கும்; தேயிலை விவசாயிகளுக்கும் விலை கிடைக்கும் என்று சொன்னால், அதைச் செய்யவில்லை.

அதேபோல, மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், priority category-யிலே இருந்து தேயிலையை எடுத்துவிட்டார்கள். priority category-யிலே தேயிலை இருந்திருக்குமேயானால், இன்றைக்குத் தேயிலைக்கு நல்ல விலை கிடைத்திருக்கும். இப்போது 2 ரூபாய் மானியம் என்று சொல்கிறீர்கள். முன்னமேயே, தி.மு.க. ஆட்சியிலே மானியம் 2 ரூபாய்க்குக் கொடுக்கப்பட்டது. அதே 2 ரூபாய் என்று இப்போது சொல்கிறார்கள். 8 ரூபாய் என்பது தூளுக்கு. 4 கிலோ தேயிலை — 4 கிலோ பச்சைத் தேயிலைதான் ஒரு கிலோ தேயிலை தூளாகும். 8 ரூபாய் என்றால், கிலோவிற்கு 2 ரூபாய்தான் போய்ச் சேரும். அந்த 2 ரூபாய்கூட முழுக்க போய்ச் சேருமா என்று சொல்ல முடியாது. எனவே, அவர்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எண்ணெய் வித்துக்கள். குறிப்பாக, தென்னை; கடந்த பல ஆண்டுகளாக விவசாயிகள் மிகவும் சிரமப்பட்டார்கள். ஆனால், இப்போது தேங்காயைப் பொறுத்தவரையில் கொஞ்சம் நல்ல விலைக்கு விற்கப்படுகிறது. நான் மறுக்கவில்லை. ஆனால், அதிலேகூட திடீரென்று நாங்கள் தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்கிறோம் என்று சொன்னால், மீண்டும் விலை குறைந்துவிடும்.

இப்போது, தென்னை மரங்கள் பட்டுப்போய் விட்டன. ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள், இலட்சக்கணக்கான தென்னை மரங்கள் எங்கள் மாவட்டத்திலே மட்டும் பட்டுப்போய் விட்டன. அந்தத் தென்னை மரங்கள் பட்டுப்போன நிலையிலே, இப்போது புதியதாக இறக்குமதியும் இல்லாத காரணத்தினால், ஓரளவுக்கு விலை கிடைக்கிறது. அதற்கு எந்தவித பங்கமும் வந்துவிடாமல் நீங்கள்தான் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** முடித்துவிடுகிறேன்.

கரும்பு விவசாயிகளைப் பொறுத்தவரையில், பணம் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது என்று நீங்கள் சொன்னீர்கள். 2002—2003—க்குப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது உண்மைதான். ஆனால், 2003—2004—க்கு இன்னும் கொடுக்கவில்லை. அதை உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதேபோல, தேர்தல் நேரத்திலே கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்போம் என்று சொன்னீர்களே, அது என்ன ஆயிற்று என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

கோழிகள் (குறுக்கீடுகள்) மாதம் ஒன்றுக்கு — கோழி வளர்ப்பைப் பொறுத்தவரையிலே, விவசாயிகளுக்கு அது முக்கியமான ஒரு உபதொழிலாக இருக்கிறது. எங்கெல்லாம் தண்ணீர் போதிய அளவு இல்லையோ, அந்தப் பகுதிகளில் எல்லாம் கோழி வளர்க்கிறார்கள். கோழி வளர்ப்பிலே, ஓரளவுக்கு அவர்களுக்குப் போதிய அளவுக்கு பலன் கிடைக்கிறது. இப்போது திடீரென்று bird flu, bird flu என்ற காய்ச்சல், கோழிக்குக் காய்ச்சல் என்று சொல்லி அச்சுறுத்தியதன் காரணமாக, கோழி விலையெல்லாம் இறங்கி வருகிறது. இறைச்சிக்கு விற்கிற கோழி, இந்த ஒரே வாரத்தில் அந்த bird flu பேச்சு வந்ததற்குப் பின்னாலே, 33 ரூபாயிலே இருந்து, 26 ரூபாய்க்கு வந்துவிட்டது.





அதேபோல, முட்டை - முட்டை ஏற்றுமதியாகிறது; அதை மறந்துவிடாதீர்கள். நல்ல விலைக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கிறது. இந்தக் கொஞ்ச நாட்களிலே 40 பைசா குறைந்துவிட்டது. ஒரு ரூபாய் 50 பைசாவுக்கு விற்ற முட்டை, இன்றைக்கு ஒரு ரூபாய் 10 பைசாவுக்கு விற்கிறது. மாதம் ஒன்றுக்கு 85 கன்டெய்னர்களில் நாம் அனுப்புகிறோம், தமிழ்நாட்டிலே இருந்து மட்டும் முட்டைகளை Gulf countries-க்கு வளைகுடா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது, அதாவது கிட்டத்தட்ட 3 கோடியே 40 இலட்சம் முட்டைகள் ஏற்றுமதியாகின்றன. இந்த வதந்தி பரவுமேயானால், நிச்சயமாக அதற்கும் ஆபத்து வந்துவிடும்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேச்சை நிறைவு செய்வார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆக, அந்த ஏற்றுமதிக்கு எந்தவிதமான பங்கமும் வந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நீங்கள் தெளிவாக அறிவியுங்கள். இந்தியாவிலேயே எனக்குத் தெரிந்தவரை bird flu கிடையாது. (குறுக்கீடு) நீங்கள் அறிவிக்க வேண்டும். பத்திரிகையில் வந்ததால் அச்சம்தான்; வேறு ஒன்றும் கிடையாது. ஏனென்றால் ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு நமக்கு இருக்கிறது. கோழியை ஏற்றுமதி செய்யலாம். மற்ற நாடுகளிலிருந்து கோழியை யாரும் வாங்குவதில்லை. ஏனென்றால் அங்கு bird flu இருக்கிறது. நம்முடைய நாட்டில் bird flu கிடையாது. அதனால் நாம் ஏற்றுமதி செய்யலாம். எனவே, நீங்கள் தெளிவாக அறிவியுங்கள். இந்த நாட்டில் கோழிக் காய்ச்சல் கிடையாது. அதாவது நம்முடைய கோழிகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை. கோழிக்கறியை சாப்பிடுபவர்கள்பற்றி ஒரு பிரபலமான பத்திரிகை ஒருதடவை எழுதியது. கோழிக் குருமா சாப்பிட்டால் பெண்கள் இளம் வயதிலேயே பூப்பெய்திவிடுவார்கள்; ஈகோலி சிஸ்ட் எல்லாம் வந்துவிடும் என்று எழுதினார்கள். அதெல்லாம் தவறான தகவல்கள். அதனால் கொஞ்சநாள் கோழி விற்கவில்லை. அதேமாதிரி இந்த bird flu ஒரு அச்சுறுத்தும் வேலை. நிச்சயமாக அதற்கு நீங்கள் முடிவு கட்ட வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர்ப் பற்றாக்குறை என்பது ஒரு பெரிய பிரச்சினை. பழனிசாமி நிறைய பேசிவிட்டார். நான் திரும்பவும் சொல்ல வேண்டுமென்று விரும்பவில்லை. பல பகுதிகளில் குடிநீரே இல்லை; என்னுடைய

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2004 பிப்ரவரி 9

தொகுதியிலேகூட பல இடங்களில் மிகவும் சிரமமாக இருக்கிறது. போர்க்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைய அறிவித்து இருக்கிறீர்கள். அவை எதுவுமே செயல்படவில்லை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற பிரச்சினைகளை பிறகு பேசலாம்; (குறுக்கீடு) வேறு நேரங்களில் பேசலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எல்லாம் முடித்துவிட்டேன்; என் தொகுதிபற்றி ஒரே ஒரு வார்த்தைதான். அதில் ஒன்றும் அதிகம் எதுவும் பேசமாட்டேன். கவுண்டம்பாளையம்—வடவள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டம் 2 ஆண்டுகளாக தொடர்ந்து நிறைவேற்றுகிறோம் நிறைவேற்றுகிறோம் என்று சொல்கிறீர்களே தவிர, இன்றுவரை நிறைவேற்ற முயற்சி எடுக்கவில்லை. (குறுக்கீடு)....

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அசைவமா, சைவமா என்பது எனக்குத் தெரியாது. (குறுக்கீடு) அசைவமா, சைவமா என்பது எனக்குத் தெரியாது. நான் கோழிக்கறி சாப்பிடுகின்றேன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் பசி நேரத்திலே அமைச்சர் இதைப் போய் சொல்லிக் கொண்டிருக்கிறார். விடுங்கள்.

**திரு. துரைமுருகன்:** என்ன subject பேசுவது என்பது இல்லையா? அவர்கள் இரண்டு பேரும் கோழி இலாகாவா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி., எல்லாம் சொல்லிவிட்டீர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, முடித்துவிடுகிறேன்; ரொம்ப சுருக்கிவிடுகிறேன்; ரொம்ப சுருக்கிவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, தைரியமாக சாப்பிடலாம்; ஒன்றும் பிரச்சினை இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்ததிலே மகிழ்ச்சி. இங்கே அறிவித்ததோடு நிற்காமல், நீங்கள் விளம்பரம் செய்யலாம்; பத்திரிகையிலே வரும்படி செய்யலாம். நம்முடைய ஊரிலே, இந்தியாவிலேயே பறவைக் காய்ச்சல் கிடையாது; கோழிக் காய்ச்சல் கிடையாது; தமிழ்நாட்டில் சுத்தமாக கிடையாது.



2004 பிப்ரவரி 9]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** அவரே சொல்கிறார்...

***மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசும்போது, அவரே சொல்லிவிட்டார்; சில தென்கிழக்கு ஆசிய நாடுகளில்தான் கோழிக் காய்ச்சல் நோய் இருக்கிறது என்றும்; தமிழ்நாட்டிலே இருக்கின்ற எந்த ஒரு கோழிக்கும் எந்த ஒரு நோயும் இல்லை என்று சொல்லி நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் எந்த ஒரு கோழிக்கும் நோய் இல்லை என்றும் அவரே சொல்லி பாராட்டி வருகிறார் என்பது அவருடைய வாயாலேயே வந்துவிட்டது. ஆகவே, அவரும் தாராளமாக, (குறுக்கீடுகள்) அவரும் நம்முடைய தமிழ் நாட்டிலே இருக்கின்ற கோழியை வாங்கி தைரியமாக சாப்பிடலாம் என்பதை பணிவோடு தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று பேரும் டாக்டர்கள் இல்லை. யாராவது veterinary டாக்டரை சொல்லச் சொல்லுங்கள்; இவர்களை நம்பி மாட்டினால், நீங்கள் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்தான் அமைச்சர்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதாவது, கோழி வளர்ப்பவர்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடாது என்ற எண்ணத்திலே நான் அதைச் சொன்னேன். நான், தமிழ்நாட்டிலே மட்டும் சொல்லவில்லை; இந்தியாவிலேயே அந்த வியாதி கிடையாது; அந்த நோய் கிடையாது; அதைத் தெளிவாக நீங்கள் அறிவிக்கலாம். நம்முடைய பகுதியிலே இல்லை என்பதை தெளிவாக நீங்கள் அறிவிக்கலாம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசும் இது குறித்து தீவிரமாக ஆய்வு நடாத்தியது. தமிழகத்திலும், தமிழக அரசின் சார்பிலும் கோழிக் காய்ச்சல் தமிழகத்தில் இருக்கிறதா என்பது குறித்தும், தற்போது சம்பந்தப்பட்ட துறை சம்பந்தப்பட்ட மருத்துவர்கள் எல்லாம் அதைக் ஆராய்ந்தார்கள். கோழிக் காய்ச்சல் என்பது அறவே இங்கு இல்லை என்று அரசுக்கு அதிகாரபூர்வமாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, கோழிக் காய்ச்சல் என்ற ஒரு பீதி அறவே தேவையில்லை என்பதை நான் அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2004 பிப்ரவரி 9

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவருடைய அறிவிப்புக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதோடு நிறுத்தாமல் ஓரளவு நல்ல முறையிலே விளம்பரப்படுத்துவீர்களேயானால் முழுப் பலனும் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். மொத்தத்தில் இந்த ஆளுநர் உரை ஏமாற்றம் அளிப்பதாகவே இருக்கிறது. நல்ல தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு, சிறந்த முறையில் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டிருந்தாலும், உள்ளடக்கத்தில் ஒன்றும் இல்லாத அத்திப்பழமாகவே அமைந்திருக்கிறது. கொள்கை எதுவுமே இல்லாமலே இருக்கும் இந்த அரசு எந்தக் குறிக்கோளையும் எட்டப் போவதும் இல்லை. இந்நிலையில் இந்த அரசு தாக்கல் செய்யப் போகும் நிதிநிலை அறிக்கையை நினைத்துப் பார்க்கும்போதே கொஞ்சம் அச்சமாக இருக்கிறது. 'அஞ்சுவதற்கு அஞ்சு' என்று ஆன்றோர்கள் கூறிவிட்டார்கள். ஆனால், இந்த அரசு எதற்கும் அஞ்சமாட்டேன் என்று நெஞ்சை நிமிர்த்திக் கூறுகிறது. எந்த நிபந்தனையையும் ஏற்றுக்கொண்டு, எவ்வளவு கடனையும் வாங்கிக் குவிப்பதற்கு இந்த அரசு துணிந்து நிற்கிறது. கடனையும், வட்டியையும் திருப்பிச் செலுத்தும் காலகட்டம் வரும்போது நாம் இருக்கப் போவது இல்லை என்பதில் ஓர் உறுதியான முடிவுக்கே வந்துவிட்டது. (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1—35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதனால்தான் எனக்குப் பிறகு பிரளயம் ஏற்படட்டுமே, 'After me the deluge' என்ற எண்ணத்தில் எதையும் அவசரக் கோலத்தில் செய்ய முற்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான் தொடர்ந்து தமிழகத்தை ஆளுகிற அரசாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) பொருளாதார ரீதியாக தமிழகத்தை வளர்ந்த மாநிலமாக, முன்னிலை அடைந்த மாநிலமாக, அனைத்துத் துறைகளிலும் முன்னிலை அடைந்த மாநிலமாக, அகில இந்தியாவிலே முன்னிலை மாநிலமாக உயர்த்தி தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தமிழகத்தில் தொடர்ந்திருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2004 பிப்ரவரி 9]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஜனாதிபதியே சொல்லிவிட்டார்கள்; எல்லோருக்கும் உரிமை உண்டு, கனவு காண்கிற உரிமை எல்லோருக்கும் உண்டு என்று. நீங்கள் தாராளமாக கனவு காணுங்கள். ஆனால் நிச்சயமாக உங்களுக்குத் தெரியும். அதனால்தான் நீங்கள் இப்படியெல்லாம் திட்டம் போடுகிறீர்கள்.

தலைமைச்செயலகத்தை மாற்றுவது, டி.ஜி.பி. அலுவலகத்தை மாற்றுவது, மெரினா கடற்கரையை அழகுபடுத்துவது, மாமல்லபுரம் அருகில் புதிய நகரை உருவாக்குவது போன்ற திட்டங்களை வேகவேகமாக செய்து முடிப்பதற்காக, வெளிநாடுகளுடனும், உலக வங்கி போன்ற கடன் அளிக்கும் நிறுவனங்களுடனும் ஒப்பந்தம் செய்து வருகிறது. தறி கெட்டு, முறைகெட்டு பயணப்படும் இந்த அரசை தடுத்து நிறுத்தி எச்சரிக்கை செய்வதற்கு ஒரு வேகத் தடை அவசியமாகும். அதனை முதலமைச்சர்மீது அன்பு கொண்டவர்களும், அவருடைய நலம் நாடுபவர்களும் எடுத்துக்கூறி வருகின்றார்கள். ஆயினும் யாருடைய ஆலோசனையையும் அவர் பொருட்படுத்துவதாகவே தெரியவில்லை. தேரான் தெளிவாக அவருடைய திட்டங்கள் அமைந்துவிடக்கூடாது என்ற நல்ல நோக்கத்தோடு இதனை எடுத்துரைப்பது எதிர்க்கட்சியினர் என்ற அடிப்படையில் எங்களுடைய ஜனநாயகக் கடமையாக அமைந்திருக்கிறது. உலக வங்கி அளிக்கும் கடனை, உதவி என்று கூறும் அளவுக்கு இந்த அரசு சென்றுவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு) எஞ்சியதை அவர் பார்த்துக்கொள்வார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உரையை முடித்து விட்டேன். உரையை முடிக்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டேன். அந்த நிலையில் நாம் எத்தகைய இழிவையும், இன்னல்களையும் எதிர்கொள்ள நேரிடும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். உலக வங்கியிடம் பெறும் எத்தகைய கடன் பற்றியும் இந்த அவையில் விவர அறிக்கை வைக்கப்பட்டதில்லை. விவாதிக்கப்பட்டதும் இல்லை. மக்களுக்குப் பொறுப்பு வகிக்கும் இந்த மாமன்றத்தில் வைத்து ஒப்புதலைப் பெற வேண்டுமென்ற அடிப்படை ஜனநாயக நெறியைக்கூட இந்த அரசு கடைபிடிக்கவில்லை. முதலமைச்சர் தலைமையிலான அமைச்சரவை மேற்கொண்ட முடிவுகளின் அடிப்படையில் எந்தத் திட்டமும் செயல்படுத்தப்படுவதாக அறிவிக்கப்படவில்லை. எல்லாவற்றிற்கு,

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2004 பிப்ரவரி 9

முதலமைச்சரே தனிப் பொறுப்பு வகிப்பதைப் போன்றும், அவருடைய தனிமனித சிந்தனையில் உருவான திட்டங்களே அமல்படுத்தப்படுவதைப் போலவும் ஆளுநர் உரையில் திரும்பத் திரும்ப கூறப்பட்டிருக்கிறது. இது பாராளுமன்ற ஜனநாயக நெறிமுறைக்கு எதிரானதாக அமைந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு) போதும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவசரக் கோலத்தில் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கையும் ஆக்கபூர்வமாக இருக்க முடியாது என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் பேசவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள் (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். நீங்கள் பேசி முடிக்கிற வரைக்கும் இருப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

**திரு. துரைமுருகன்:** ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். தலைவரவர்களே, இந்த ஆடு, கோழி வெட்டுவதற்குக்கூட கருணைகூர்ந்து வெட்டக்கூடாது என்று இந்த ஆட்சி சட்டம் போட்டிருக்கிறது. உங்களுக்கு நான் என்ன தீங்கு செய்தேன்? இந்த நேரத்தில் நிற்க வைத்திருக்கிறீர்களே? உங்களுக்கு கருணை வேண்டாமா? (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குத் தெரியும். எல்லா மாநாடுகளிலும் பசி நேரத்தில்தான் முக்கிய பேச்சாளர்களைப் பேச விடுவார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்த ஆடு, கோழி வெட்டுவதைத் தடை செய்கிற சட்டத்தைக் கொண்டு வரவில்லை. 1955 ஆம் ஆண்டே போடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு உதாரணத்திற்காகத்தான் சொல்கிறார்.



2004 பிப்ரவரி 9]

**திரு. துரைமுருகன்:** ஆக, ஆடு, கோழி வெட்டுவதைத் தடை செய்கிற சட்டத்தை அதிகமாக அமல்படுத்தியது நீங்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். நான் பேச வேண்டுமா சார்? எப்படி சார் முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேவையான அளவுக்கு நேரத்தை எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) தேவையான அளவுக்கு நேரத்தை எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. துரைமுருகன்:** இல்லை. நாளைக்கு விட்டுவிடுங்களேன். நீங்கள் நாளைக்கு என்னைப் பேச விட்டீர்கள் என்றால், நீங்களும், அவை முன்னவரும் உங்கள் இடத்தில் இருக்கமாட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆரம்பியுங்கள். இவ்வளவு நேரத்தில் பேசியிருக்கலாம், 10 நிமிடங்கள் ஆகியிருக்கிறது. பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் தலைப்பு செய்திதாங்க வாசிக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரவாயில்லை.

பிற்பகல் 1-40

**திரு. துரைமுருகன்:** யாரும் எழுந்துகொள்ளக்கூடாது. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் இந்த அவையில் நிகழ்த்திய உரையின்மீது கொண்டுவரப்பட்டு இருக்கிற நன்றி பாராட்டும் தீர்மானத்தின்மீது நான் சார்ந்து இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துகளை இந்தப் பசி நேரத்தில் எடுத்து வைக்க முற்படுகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் இந்த அவையில் 1971 ஆம் ஆண்டு நீங்கள் வந்தபோது நானும் வந்து இருக்கிறேன். ஓரிரு ஆண்டுகளைத் தவிர தொடர்ச்சியாக இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்து இருக்கிறேன். சுமார் 20-க்கும் மேற்பட்ட ஆளுநர்கள் உரை நிகழ்த்தி இருக்கிறார்கள். அந்த உரைகளை நான் படித்து இருக்கிறேன். அவற்றின்மீதும் பேசி இருக்கிறேன். ஆனால் இந்த முறை ஆளுநர் உரையைப்போல ஒரு உரையை நான் படித்ததும் இல்லை, பார்த்ததும் இல்லை. இந்த ஆளுநர் உரைக்கு நேர்ந்த அவமானம் அல்லது insignificance வேறு எந்த ஆளுநருக்கும் நேரவில்லை என்பதுதான் நான் முதலிலே சொல்லக்கூடிய ஒன்று. என்ன அப்படிப்பட்ட அவமானம் என்று கேட்டால், இந்த ஆளுநர் என்பவர் இந்த மாநிலத்தினுடைய ஒரு முக்கியப் புள்ளி. அவர் படிக்கிற உரை, [illegible]

[திரு. துரைமுருகன்] [2004 பிப்ரவரி 9

எழுதியது அல்ல, எழுதிக் கொடுப்பது அரசாங்கம். ஆட்சியினுடைய கொள்கை. அந்த உரையை படிக்கிறபோது--கிட்டத்தட்ட 1971 முதல், பார்த்தவரையில், ஆளுநர் உரையின்மீது விவாதம் நடக்கிறது. விவாதத்தின் மீதல்ல, ஆளுநருக்கு காட்டுகிற மரியாதை நிமித்தம் காரணமாக, எல்லோரும் இந்த அவையிலே இருப்பது வாடிக்கை. இங்கே அமைச்சர் பெருமக்கள் இருக்கிறார்கள். கூட்டு மந்திரிசபை, எனக்குத் தெரியும். ஒரு முதலமைச்சருக்கு நிறைய வேலைகள் இருக்கும். நான் இல்லை என்று சொல்லவில்லை. இந்த அவையிலே இருந்துதான் தீரவேண்டும் என்று சொல்வதற்கும் நான் முன் வரவில்லை. ஆனால் எதிர்க்கட்சிக்காரர்கள் பேசுகிற இன்றைக்காவது இந்த அவையிலே இருந்திருந்து நாங்கள் பேசுவதைக் கேட்டு அவர் பதில் அளித்து இருந்தால், ஒன்று ஆளுநரை நீங்கள் மதிக்கிறீர்கள் என்று கருதலாம். இல்லாவிட்டால் எங்களை நீங்கள் மதிக்கிறீர்கள் என்று கருதலாம். (குறுக்கீடுகள்) அதுதான் நான் சொல்கிறேன். ஆளுநரையும் நீங்கள்—ஆனால் என்ன காரணத்தினாலோ முதலமைச்சர் அவர்கள்—தவிர்க்க முடியாமல் போகலாம். இன்றைக்கு கிருஷ்ணகிரி ஏற்கெனவே திட்டமிட்ட ஒன்று. அதை மாற்றிக்கூட அமைக்க முடியாது. ஆனால் இரண்டு தினங்களுக்கு முன்னால்கூட அவரது தொகுதியிலே பணியாற்றுகிறார். போவது ஹெலிகாப்டரில்தான் போகிறோம். மாலையிலே போய் நலத் திட்டங்களை வழங்கி இருக்கலாம். இந்த அவைக்கு ஒரு கௌரவம் வந்து இருக்கும். ஆனால் இங்கே இருக்கிற அமைச்சர்களுடைய திறமைகளையோ, அவர்களையோ, நான் குறைத்து மதிப்பிடுகிறவன் அல்ல. உட்கார்ந்து இருக்கிற அந்த இடத்திற்கு—நானும் ஒரு காலத்திலே அங்கே உட்கார்ந்தவன் என்ற முறையிலே, நான் மதிப்புத் தரத் தயாராக இருக்கிறேன். ஆனால் ஒரு முதலமைச்சர் இருந்து இருப்பாரேயானால், அவர் எங்களை மதிக்கிறார் என்பதை நான் ஏற்றுக்கொண்டு இருப்பேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அவர் வரவில்லை என்கிற ஆதங்கத்திலேதான் நான் சொல்கிறேனே தவிர... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** இருப்பது மரபுதான். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்க வேண்டும். எங்கள் கருத்தைக் கேட்க வேண்டும். அதிலே நல்லது இருந்தால் எடுக்க வேண்டும். மக்களுக்குத் திட்டங்கள் தரவேண்டும் என்ற ஆதங்கத்தில்தான் நான் இந்த விஷயத்தை இங்கே சுட்டிக்காட்ட-



2004 பிப்ரவரி 9]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, நான் சொல்லி விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகச் சட்டமன்ற வரலாற்றிலேயே ஆரம்பத்திலிருந்து இறுதி வரை இங்கே அமர்ந்து மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு, எழுப்புகிற பிரச்சினைகளுக்கு எல்லாம் துல்லியமாக நுனி விரலில் பதில் அளித்து உடனுக்குடன் பதில் அளித்து (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகமே வியக்கக்கூடிய அளவிற்குத் திறம்பட செயல்படுகின்ற முதலமைச்சர் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தற்போது, மாண்புமிகு துரைமுருகன் அவர்களே கூறிவிட்டார். அவசரப் பணி, ஏற்கெனவே இருந்த, திட்டமிட்ட நிகழ்ச்சிகள் காரணமாக வர முடியவில்லை என்று கூறி இருக்கிறீர்கள். அவையிலே நடக்கின்ற அத்தனை நிகழ்ச்சிகளையும், அம்மா அவர்கள், கட்டாயமாக அந்த டி.வி. கேசட் மூலமாகப் பார்க்கிறார். நாளைக்கு வந்து உங்கள் மனம் மகிழ உங்கள் அத்தனை பிரச்சினைகளுக்கும் பதில் தருவார், பதில் தருவார் என்று கூறி அமர்கிறேன்.

பிற்பகல் 1-45

***மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள், எங்களுடைய கட்சித் தலைமையைப்பற்றிக் குற்றம் சொன்னாலும், அவர் இப்போது யாரைக் குத்திக் காட்டுகிறார் என்று சொன்னால், அவருடைய தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே சபைக்கு வராததைக் குத்திக் காட்டுகிறார் என்றுதான் எங்களாலே எடுத்துக்கொள்ள முடிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் செம்மலை அவர்கள், பழைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களும், இன்றைய முதலமைச்சரும் வராமல் இருந்ததையும் மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறார், சபைக்கு. அது போகட்டும்.

நான் முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு வரவில்லை என்றோ, இருந்து பதிலளிக்கவில்லை என்றோ சொல்லமாட்டேன். இன்னும் சொல்லப்போனால், உங்களுக்கெல்லாம் சேர்த்து அவர்தான் பதில் சொல்கிறார். அவருக்குத்தான் விஷயம் தெரியும். (குறுக்கீடு) அவர் மட்டுமல்ல, நீங்களும்தான். நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் எனக்கு என்னவென்றால், இன்றைக்கு நான் பேசும்போது இருந்திருந்தால் இன்னும் கொஞ்சம் எனக்கு inspiration வேகவேகமாக,

முதலமைச்சர் கேட்கிறாரே என்பதிலே பேசியிருக்கலாம் என்கிற ஆதங்கம், அவ்வளவுதான். பரவாயில்லை. I leave the matter for next time.

அடுத்து, இந்த கவர்னருடைய உரையைப் பொறுத்தவரையில் ஒரு கவர்னர் உரை என்பது ஒரு நூலுக்குப் பாயிரம் போன்றது. ஆட்சியினுடைய policy—யை சொல்வது கவர்னர் உரை. ஆட்சியினுடைய வருமானம், செலவு, திட்டம் இவை பற்றிச் சொல்வது பட்ஜெட். ஆனால், இந்த ஆளுநர் உரையில், policy என்று பார்த்தால் அதுவும் கொஞ்சம் இருக்கிறது. ஆனால் கொஞ்சம் உள்ளே போனால் ஒரு குட்டி பட்ஜெட்டைப்போல் இருக்கிறது. என்ன இவ்வளவு குழப்பம்? ஒரு பக்கம் பார்த்தால் இது இராவுத்தர் குதிரை மாதிரி தெரிகிறது. பின்னாலே பார்த்தால் இது மரைக்காயர் குதிரை மாதிரி தெரிகிறது. பாதி படித்தால் இது கவர்னர் உரை மாதிரி தெரிகிறது, policy. கொஞ்சம் பின்னால் போகப் போகப் பார்த்தால் மரைக்காயர் குதிரை, பட்ஜெட், புள்ளிவிவரம், percentage திட்டம், இவை தெரிகின்றன. என்ன காரணம்? யோசித்துப் பார்த்தேன். நமமுடைய நிதியமைச்சர் மகா கெட்டிக்காரர். அவர் என்ன பண்ணுகிறார் என்று கேட்டால் (குறுக்கீடு) ஹக்கீம் குதிரை இல்லை. உட்காருங்கள். (சிரிப்பு) என்னுடைய நண்பர் ஹக்கீம். அதாவது நம்முடைய நிதியமைச்சர் பார்த்தார். ஒருக்கால் முழு பட்ஜெட் போட முடியுமோ, முடியாதோ; முடியாமல் போனால் நம்முடைய திட்டங்களை இதிலே நுழைத்துவிட்டுப் பார்ப்போம். அந்தத் திட்டங்கள் வந்தால் Vote on Account-க்கு வாட்டும். இல்லாவிட்டால் முழு பட்ஜெட்டுக்குப் போகட்டும். இன்னும் தேர்தல் அறிவிக்கவில்லை, ஆகவே எதற்கும் இருக்கட்டும் என்று இதிலே நான்கு திட்டங்களைச் சேர்த்து ஒரு குட்டி பட்ஜெட் ஆக்கியிருக்கிறார். அதானால்தான் சொன்னேன். இரண்டுக்கும் வித்தியாசமில்லாமல் ஒன்றுக்கொன்று இருக்கிறது என்று எடுத்துச் சொன்னேன்.

மூன்றாவது, இந்த ஆளுநர் உரையைப் பார்த்தால் அறிவிப்புகள் அதிகம், நிறைய இருக்கின்றன. அதற்குக் குறைச்சலே கிடையாது. கவர்னர் உரையாக இருந்தாலும் சரி, பட்ஜெட்டாக இருந்தாலும் சரி, அறிவிப்புகள் கொடுப்பதிலே Doctorate கொடுக்க வேண்டும் உங்களுக்கு. நன்றாகக் கொடுங்கள். நல்ல யோசனை. திரு. மணி கூட சொன்னார். அறிவிக்கிறீர்கள். அப்புறம் அதோடு போய் விடுகிறது. எத்தனை அறிவித்திருக்கிறீர்கள் நீங்கள். அடேங்கப்பா!



இங்கே வந்து பார்த்தீர்கள் என்றால், ஒவ்வொரு கவர்னர் உரையிலும் சில விஷயங்கள் இருக்கும். வீரப்பனைப்பற்றி இருக்கும். இந்த முறை இல்லை. முதன் முதலில் நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே சொன்னீர்கள், 'மத்திய அரசின் ஒத்துழைப்புடன், கர்நாடக அரசின் ஒத்துழைப்புடன் பயங்கரக் குற்றவாளியான வீரப்பனைப் பிடிப்போம்' என்று சொல்லியிருக்கிறீர்கள். வீரப்பனையும் பிடிக்கவில்லை. (குறுக்கீடு) பிடித்து விட்டீர்களா நீங்கள்?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல கருத்தைக் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திறமையானவர், இந்த ஆட்சி, இங்கே இருக்கக்கூடிய அமைச்சர்கள் எல்லாம் திறமையானவர்கள் என்று கூறினார்கள். ஆனால் உங்களை மாதிரி நக்கீரன் கோபாலை விட்டு நாங்கள் வீரப்பனை பார்க்கச் சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களாவது வீரப்பன் கடத்திக் கொண்டு போன டாக்டர் ராஜ்குமாரைக் கொண்டு வந்தோம். பாவிகள், நாகப்பாவைக் கொன்று கொண்டு வந்துவிட்டீர்களே நீங்கள்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** உங்களுடைய முன்னாள் முதலமைச்சர் திறமையாற்றவர் என்பதை நீங்களே தெரிவித்து விட்டீர்கள்.

**திரு. துரைமுருகன்:** அடுத்து, 2001 ஆம் ஆண்டு படிக்கப்பட்ட முதல் ஆளுநர் உரையில் ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்பதை முக்கியக் குறிக்கோளாகத் தெரிவித்தீர்கள். கடந்த மூன்று ஆண்டுகளில் எத்தனை வீடுகளைக் கொடுத்தீர்கள் என்பதை முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலிலே தெரிவித்தால் சரியாக இருக்கும்.

வெளிநாட்டு முதலீடுகளைப் பெறுவதற்காக உலகம் முழுவதும் வாழும் தமிழர்களைக் கொண்ட ஒரு கூட்டமைப்பு, ஒரு Consortium ஏற்படுத்தப்படும் என்று சொன்னீர்களே, நல்ல அறிவிப்பு. ஏற்படுத்தப்பட்டதா?

சாலைகளைப் பற்றி எல்லாம் இங்கே சொன்னார்கள். மறுபடியும் நீங்கள் போட்ட, நான் போட்ட சாலைகள் என்றெல்லாம் சொன்னீர்கள். பரவாயில்லை. இப்போதுகூட 400 கோடி ரூபாய்க்கு டெண்டர் விட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். நம்முடைய நிதியமைச்சர்தான்

[திரு. துரைமுருகன்] [2004 பிப்ரவரி 9

சொல்ல வேண்டும். நாளைக்கு அல்லது நாளை மறுநாள் சொல்வாரா ஏற்கெனவே இல்லாத நிதிக்கு விட்டுவிட்டு, பின்னாலே ratification-க்கு வருகிறாரா, இல்லை கொடுத்திருக்கிறாரா என்பதைப் பார்க்க வேண்டும்.

*பிற்பகல் 1-50*

அடுத்து வேலைவாய்ப்புகளைப் பெருக்குவோம் என்று முதல் ஆளுநர் உரையிலே சொன்னீர்கள். என்ன ஆயிற்று? வேலை எல்லாம் போய்விட்டது. நிறைய பேர்களுக்கு வேலை கிடையாது. இப்போது கடைசியிலே 999 பேர் அரசு ஊழியர்கள் 3X9=27 இரண்டையும் கூட்டினால் 9. நம்முடைய சின்னமாகவே ஆக்கிவிடலாம் சார், அதை. ஆகையினாலே என்ன செய்யலாம் என்றால், சாலைப் பணியாளர்கள் இல்லை, அங்கன்வாடிப் பணியாளர்கள் இல்லை. இவ்வளவு போய் இப்போது என்ன ஆகிவிட்டது என்றால், இன்னும் பார்த்தீர்கள் என்றால், இன்றைக்கு ஒரு பத்திரிகையிலே நான் படித்தேன். எவ்வளவு பேருக்கு வேலை போய்விட்டிருக்கிறது என்றால், கிட்டத்தட்ட 8,200 பேர்களுக்கு வேலை போய்விட்டது. தமிழக அரசிலே 122 துறைகளிலே காலியாகக் கிடக்கிறது, நிரப்பப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தவறு, தமிழக அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரைக்கும் surplus employment ஒவ்வொரு துறையிலும் கிட்டத்தட்ட ஒட்டுமொத்தமாக இரண்டரை இலட்சத்திலிருந்து மூன்று இலட்சம் பேர் அதிகமான பணியாளர்கள் இருப்பதாகத்தான் அந்தக் குழுவினுடைய ஆய்வு எங்களுக்குத் தந்திருக்கிறது. எனவே surplus employment இருக்கிற காரணத்தால், அவர்களுக்கே, V.R.S. கொடுத்து வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்றுகூட அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். இதுதான் உண்மை நிலை.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கூறும்போது சாலைப் பணியாளர்கள் பற்றிக் கூறினார்கள். பொதுவாக வேலைவாய்ப்பு என்பது Employment Exchange மூலம் எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் Paper advertisement மூலம் எடுக்கவேண்டும். ஆனால் உங்கள் காலத்தில் குலுக்கல் முறையிலே எடுத்தீர்கள். தவறான முறையிலே சாலைப் பணியாளர்களை எடுத்தீர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*



**திரு. துரைமுருகன்:** நீங்கள் வேண்டுமானால் அவர்களை employment மூலமாக மறுபடியும் எடுத்துக்கொள்ளுங்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. வேலைவாய்ப்புத் துறை பற்றிச் சொன்னேன். இது முடிந்தது.

அடுத்து திருமுல்லைவாயிலில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு சிறு தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்று அறிவித்தீர்கள். நல்ல திட்டம். யாமறியோம் பராபரமே, இருக்கும் நிலைமை. அடுத்து, *15-3-2002* அன்று ஆளுநர் உரைக்குப் பதில் அளித்தபோது... (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, 290.84 ஏக்கர் நிலப் பரப்பிலே திருமுல்லைவாயிலிலே மகளிர் தொழிற்பேட்டை தொடங்கப்பட்டு, மகளிருக்காக பெருமளவு மனைகள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமின்றி, திருமுல்லைவாயிலிலே பகுதி-2 திட்டத்திற்காக ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, வருவாய்த் துறை அலுவலர்களை நிலம் கையகப்படுத்தும் அந்தப் பணிக்காக பணி நியமனம் செய்யக் கோரி துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொண்டை கட்டிய நிலையிலும் துரைமுருகன்மீது இவ்வளவு அக்கறையோடு பதில் சொல்கிறார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, I am expecting a good reply from the Hon'ble Chief Minister tomorrow. அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஒருபோதும் தனியார்மயமாக்கப்பட மாட்டாது; இலாபத்தில் இயங்கும் அரசு நிறுவனங்களைத் தனியார்மயமாக்க நாங்கள் ஒன்றும் முட்டாள்கள் இல்லை. அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமாக உள்ள சில வழித்தடங்களில் தனியார் பேருந்துகளை அனுமதிக்கலாம் என்று முடிவெடுத்துள்ளோம் என்று இங்கே தெரிவித்தார்கள். ஆக இலாபத்தில் இயங்குகின்ற அந்த வழித்தடங்களை எல்லாம் நாங்கள் தனியார்மயமாக்க மாட்டோம்

என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு வருகிற செய்திகள், அவையும் இன்றைக்கு தனியார்வசம் போகின்றன என்று வந்துகொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களைத் தனியாருக்குக் கொடுப்பதாக நாங்கள் எப்போதும் சொல்லவில்லை. ஆனால் நஷ்டத்தில் இயங்குகின்ற ஒரு சில வழித்தடங்களைத் தனியாருக்குக் கொடுப்பது பற்றி அரசு ஆய்வு செய்யும், சிந்திக்கும், பரிசீலிக்கும் என்றுதான் சொல்லியிருக்கிறோம். இது சம்பந்தமாக இப்போது நீதிமன்றத்திலே வழக்கு இருப்பதால், அந்த நடவடிக்கையும்கூட, இப்போது தொடர் நடவடிக்கை இல்லாமல் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்த்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-55*

**திரு. துரைமுருகன்:** உங்களுக்கு இலாபம், இன்றைக்கு C.M. இல்லை என்பதால் நல்ல chance பதில் சொல்வதற்கு.

இன்னொன்று, திட்டங்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் சொல்ல வேண்டிய திட்டங்களை இந்த அறிக்கையிலே சொல்லவில்லை. அன்னதானத் திட்டம், யானைகளுக்கு ஓய்வு கொடுக்கும் திட்டம், மகாமகத் திருவிழாவிற்கான வசதிகள், கோயில் கும்பாபிஷேகங்கள் போன்ற தெய்வீக சத்காரியங்கள், citizen என்ற சொல்லுக்குப் பெண்பால் கண்டுபிடிக்கின்ற சாமர்த்தியம், முருங்கைக்கீரை, கறிவேப்பிலைப் பொடி போன்றவை குறித்த சர்வரோக நிவாரணிகள் பற்றிய விவரங்கள், சுற்றுலா மையங்கள் இவை எல்லாம் திட்டங்களாகச் சொல்லி இருக்கிறீர்கள். அன்னதானத்திற்கும், யானைக்கும் திட்டம் இருக்கிறது. ஆனால், வழக்கமாக இதில் ஒன்றிருக்கும். அது என்ன என்றால், கிருஷ்ணா குடிதண்ணீர்...

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னதானத் திட்டத்தைக் கொண்டு வந்ததை நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள். உங்களால் உங்களுடைய ஆட்சியில் கொண்டு வரமுடியவில்லை. அதை ஏன் இன்றைக்குப் பொறாமையாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?

**திரு. துரைமுருகன்:** நான் உண்மையிலேயே சொல்கிறேன். நான் குறை சொல்லவில்லை. இந்தத் திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன



என்று படித்துக் காண்பித்துவிட்டு, ஆனால் முக்கியமான திட்டங்கள் இல்லையே என்பதற்காகத் தான் சொன்னேன். அது என்ன? கிருஷ்ணா நதித் திட்டம். (குறுக்கீடு) வரவில்லை. அதுவும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். எப்போது வருகிறது? இன்றைக்கு Hindu-விலே போட்டிருக்கிறார்கள். இன்னும் 1 வாரத்தில், 2 வாரத்தில் வரும் என்று. இதே Hindu டிசம்பர் மாதம் 10 ஆம் தேதி எழுதுகிறார்கள். அப்போது என்ன செய்தார்கள்? 'பம்ப்பிங் பண்ணுகிறார்கள். The Government has called for a tender'--இன்றைக்கு என்னென்ன சொல்கிறார்களோ அதையேதான் டிசம்பர் 10 ஆம் தேதி சொன்னார்கள்-- to acquire a *8000* hp 'heavy duty motor for pumping water to meet the drinking water needs of Chennai' என்று போட்டார்கள். எப்போது? டிசம்பர் 10ஆம் தேதி. அதற்குள்ளே சொல்கிறார்கள். அதற்குப் பிறகு 'pumping water for Chennai may take place perhaps towards December end'. டிசம்பர் end-லேயே இன்றைக்கு எழுதிய அதே 'Hindu' அதே இராமகிருஷ்ணன் அவர்கள், டிசம்பரிலே வரும் என்று போட்டார்கள். இன்றைக்கும் 'Hindu' தான் சொல்லியிருக்கிறது. ஆனால் நான் கேட்பது 'Hindu' அல்ல. ஒரு பத்திரிகையிலே முக்கியமான பத்திரிகையிலே வந்த செய்தியை ஒரு எதிர்க் கட்சி உறுப்பினர் சொல்கிறேன். அதற்குப் பதில் அளிக்க வேண்டியது ஆளுங்கட்சி. இல்லை, இது தப்பு, ரைட் என்று சொல்ல வேண்டியது. அதே மாதிரி 'after initial problem' ஜனவரி 20 ஆம் தேதி 'water release from Kandaleru dam to Chennai is likely to be resumed tomorrow' எப்போது? ஜனவரி 20 ஆம் தேதி.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** நீங்கள் 'Hindu' வைப் படித்தீர்கள். சில தலைவர்கள் 'தினமலர்' பத்திரிகையைப் படிக்கக் கூடாது என்று அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. துரைமுருகன்:** அது எங்கள் இஷ்டம். அது வேறு, இது வேறு. (குறுக்கீடு) அவர் பாவம், அதே 'Hindu' சொல்கிறது ' By the first week of February, initial flows are expected to reach the zero point'. என்று எழுதினார்கள். ஆனால் இதுவரையில் அந்தத் தண்ணீர் வந்து சேரவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'Hindu' பத்திரிகையையே அரசாங்கம் என்று எண்ணிக் கொண்டு மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுவது முறையான ஒன்று அல்ல. 'Hindu' பத்திரிகையில்

அவர்களுக்கு விருப்பமான செய்தி, ஏதோ செய்தி, அது ஒரு செய்தி மட்டும்தான். அது அரசினுடைய அறிவிப்பு அல்ல. அரசு எடுத்த முயற்சிகள் எல்லாம் ஆக்கபூர்வமான முயற்சிகள். தற்போது தண்ணீர் விரைவிலே வரக்கூடிய நிலையில் இருக்கிறது. இதுதான் உண்மை நிலை.

**திரு. துரைமுருகன்:** நான் கேட்பது, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், கிருஷ்ணா குடிநீர்த் திட்டம் ஒரு முக்கியமான திட்டம். அந்தத் திட்டத்தைப் பற்றி ஒரு paragraph, நீங்கள் ஏன் உங்களுடைய கவர்னர் உரையிலே குறிப்பிடவில்லை என்று கேட்கிறேனே தவிர, இப்படி பத்திரிகைகள் எழுதுகின்றன, ஆனால் உங்கள் கவர்னர் உரையில் இல்லையே என்று சொன்னேனே தவிர, 'Hindu'-வை உங்களுக்குச் சொல்லவில்லை. ஆனால் நீங்கள் அடித்தாலும் அவர்கள் ஆதரிப்பார்கள். அது வேறு விஷயம். விட்டுவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வரவேண்டும் என்கிற வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளை இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்கு நான் தெரிவித்துக்கொள்வது, உங்களைப் போன்று நாங்கள் ** அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) 1996 அக்டோபர் மாதம் (குறுக்கீடுகள்) 1996 அக்டோபர் மாதம் (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். 1996 அக்டோபர் மாதம் உங்களுடைய தலைவருடைய மகன் ஸ்டாலின் சென்னை மாநகர மேயராக ஜெயிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக ஒரு பெரிய அளவுக்கு விழா மேடை போட்டு, ஆந்திர முதலமைச்சரை இங்கே வரவழைத்து குடத்திலே தண்ணீர் கொடுப்பது போன்ற அந்தக் காட்சி பத்திரிகையிலே வந்ததா, இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இருங்கள், இருங்கள் நான் சொல்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, எங்களைப் பார்த்து மாண்புமிகு அமைச்சர்—நான் எதிர்பார்க்கவில்லை—நம்முடைய ஜெயக்குமார் அவர்கள் ** என்று சொன்னார். (குறுக்கீடுகள்) Wait, wait. நீங்கள் சொன்னதை- - நீங்கள் சொல்லிவிட்டீர்கள் சார். நான் ஒன்றும் சொல்லவில்லை. சொன்னீர்கள் என்று சொல்கிறேன். ஆனால், இதே அவையிலே ** என்று சொன்னார்கள். அதுபற்றி எனக்கு ஒன்றுமில்லை. ஆனால், அன்றைக்கு நாங்கள் கொண்டு வந்து கொடுத்தது கிருஷ்ணா தண்ணீர். (குறுக்கீடுகள்) இல்லை, நான்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





சொல்கிறேன். ஆனால், அந்தத் தண்ணீர் கிருஷ்ணா தண்ணீர்தான் என்பதற்கு ஒரு மணி நேரம் இந்த அவையிலே நான் அன்றைக்கு வாதிட்டுப் பேசியிருக்கிறேன். ஆனாலும், அந்தத் திட்டத்தைக்கூட கொண்டு வந்து கொடுக்காமல், ** (குறுக்கீடுகள்)

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) மாண்புமிகு துரைமுருகன் சொன்னதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, உட்காருங்கள்; சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடு) மணி உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவர் சொன்னதற்கு....(குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) பேராசிரியர். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். பேராசிரியர்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பேராசிரியர் பேசட்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உட்காருங்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் பயன்படுத்தப்பட்ட ** என்ற வார்த்தையையும், ** என்ற வார்த்தையையும் ** என்ற வார்த்தையையும், இரண்டையும் தாங்கள் நீக்கி அமைதி காக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டுமே நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) இரண்டுமே நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) இல்லை, அதே மாதிரி துரைமுருகன் அவர்கள் பேசுகிறபோது ** சொல்லப்பட்டது, அதுவும் உறவைப் பாதிக்கும். அதுவும் நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**பேராசிரியர் க. அன்பழகன்:** அது அவைக் குறிப்பிலே இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இப்போது நீக்குவதாக சொன்ன கருத்து ஏற்கெனவே இந்த அவைக் குறிப்பிலே இடம்பெற்று இருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவைக் குறிப்பிலே இருக்கிறதா, இல்லையா என்பதல்ல. அண்டை மாநிலத்தினுடைய உறவை அது பாதிக்கக்கூடியது. அது நீக்கப்படுகிறது.

**பேராசிரியர் க. அன்பழகன்:** சட்டப் பேரவைக் குறிப்பேட்டிலே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது நீக்கப்படுகிறது.

**திரு. துரைமுருகன்:** அடுத்து, இன்னொன்று சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். ஒரு படத்தைப் போட்டு, தண்ணீர் வந்ததாகக் கூறி ஏமாற்றுவது என்பது ** இல்லையா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏமாற்றுவது என்று சொல்லலாலம். அது பற்றி ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு கிருஷ்ணா தண்ணீர் வந்தது என்பதற்கு என்னென்ன ஏற்பாடோ, அவ்வளவும் நடைபெற்றதால்தான் அதே தண்ணீர்தான் இப்போதும் முதலமைச்சர் அவர்கள் பெறுவதற்கு முயற்சிக்கிறார். இப்போது கேட்பது வேறு தண்ணீர் அல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லையென்றால் அந்தச் சொற்றொடருக்குப் பதிலாக, மக்களை ஏமாற்றினார்கள் என்று எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொன்று, (குறுக்கீடு) சரி அந்தத் திட்டம் போய்விட்டது...

**திரு. ஜி.கே. மணி:** வீராணம் திட்டம் failure என்று சொல்லித்தான், வராது என்று bore போட்டிருக்கிறீர்களே, ராட்சச bore. அது failure தானே?

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, நான் இங்கே சொல்ல விழைவதெல்லாம் அந்தத் திட்டத்தில் 13 கிலோமீட்டர் பிரம்மகாரிமடத்திற்கும் சோமசீலா Dam—க்குமிடையே வெட்டப்படவில்லை. அது ஏன் வெட்டப்படவில்லை என்று அன்றைக்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நீங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டார்கள். நான், மூன்று ஆண்டு காலமாகிவிட்டது, இன்றைய வரையிலே, அந்த 13 கிலோ மீட்டர் வெட்டப்படவில்லை, நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்க எனக்கு உரிமை உண்டு. ஆனாலும், அந்தத் திட்டத்தை, அந்தச் செய்தியை இந்த அறிக்கையிலே சொல்லவில்லை என்பதுதான் என்னுடைய contention. ஆனால், இதற்குப் பின்பாக இன்னொன்று புதியதாக சொல்லியிருக்கிறார்கள். புதிய வீராணம் திட்டம், சுமார் 700 கோடி ரூபாய் மதிப்பீட்டில். வீராணத்திலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தால் மகிழ்ச்சியடைகிறவன் நான். எந்த ரூபத்திலும் மக்களுக்குத் தண்ணீர் கிடைத்தால் போதும். வேறு அல்ல. ஆனால், வீராணத்திலே இப்போது தண்ணீர் இல்லை. எப்படிக் கொண்டு வர முடியும்? காவிரியிலே வந்தால்தான், காவிரி கரை புரண்டு, கூர்க்கில் மழை பெய்து, கே.ஆர். சாகர் நிறைந்து, பாகமண்டலா வந்து, ஹேரங்கி எல்லாம் நிறைந்து கடைசியில் மேட்டூர் வழிந்து, இனி அங்கு தடுத்து நிறுத்த முடியாது என்று வந்தால், முக்கொம்பிலே கொண்டு வந்து, இனி அடைக்க முடியாது என்கிறபோதுதான் கொள்ளிடத்திலே திருப்பினால், கொள்ளிடத்திலேயிருந்து வடவாறு வழியாக 22 கிலோ மீட்டர் வெட்டி, அது வந்து சேர வேண்டும். ஆனால், இப்போது தண்ணீர் இல்லை. ஏன்? கர்நாடகத்திலிருந்து தண்ணீர் விட்டால்தான் நமக்கு வரும். எப்படி எடுப்பீர்கள் என்று கேட்டதற்கு, அன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் ஒருவர் சொன்னார். நாங்கள் அங்கே bore போட்டு எடுப்போம் என்று சொன்னார். உடனே, பாதிக்கப்படுவார்களே என்று கேட்டபோது, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் சொன்னார்கள், நாங்கள் வீராணத்திலே bore போடுவதில்லை, கொள்ளிடத்திலே bore போடப்போகிறோம் என்று சொன்னார். நான் ஒன்று தெரிவிக்கிறேன். கொள்ளிடத்திலே bore போட்டால், அந்தத் தண்ணீர் off take எங்கே? வீராணம். இந்த வீராணம் ஏரிக்கு அந்தத் தண்ணீரைக் கொண்டு வர வேண்டும். 22 கிலோ மீட்டர், கொள்ளிடத்திலிருந்து வீராணம். அந்த 22 கிலோ மீட்டர் இப்போது lining செய்து வைத்திருக்கிறோம். ஆனால் open canal-லில்தான் வர வேண்டும். open canal-லில் வந்தால் கொள்ளிடத்திலும், வடவாற்றிலும், அந்தக் கால்வாயில் 24 வாய்க்கால்கள். 12 ஆயிரம் ஏக்கர் தண்ணீர் எடுத்து விடுவான். 24 வாய்க்கால்களில் தண்ணீர் போய் விடும். நீங்கள் என்ன பம்ப் பண்ணுகிறீர்களோ, கொள்ளிடத்தில் பம்ப் பண்ணி அதை

வடவாற்றில் அனுப்பினீர்கள் என்றால், அது வீராணத்தில் ரீச் ஆவதற்கு முன்பே 24 கிலோமீட்டரில் எடுத்து விடுவான். அது வந்து அங்கு தேங்கி Off take point வருவதற்குள் வீராணம் ஏரியில் 34 கால்வாய்கள், கிட்டத்தட்ட 45 ஆயிரம் ஏக்கர். அதிலும் கொஞ்சம் மிஞ்சிப் போய்விட்டது என்றால் சேத்தியாதோப்பிற்கு 38 ஆயிரம் ஏக்கர் தண்ணீர் போய்விடும். ஆக, தண்ணீருக்கு நீங்கள் காவிரியைத்தான் நம்பி இருக்க வேண்டும். விட்டால், கொள்ளிடத்தில் பம்ப் பண்ணினால் அந்தத் தண்ணீரை வீராணத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தும், அந்தத் தண்ணீர் வந்து சேராது. ஆகையினால் என்னைப் பொறுத்தவரையில் ரொம்ப remote chance தண்ணீர் வந்து சேராது. எனவே, எப்படி நீங்கள் இதைத் தீர்க்கப் போகிறீர்கள் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

*பிற்பகல் 2—05*

இன்னொரு பிரச்சினை. அதையும் இந்த அறிக்கையிலே தெரிவித்திருக்க வேண்டும். எனக்கு மகிழ்ச்சிகரமான செய்திதான். இங்கே நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உட்கார்ந்து இருக்கிறார். அந்த நிதியமைச்சர் அவர்களும், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும், எல்லோரும் ஒரு தனி விமானத்திலேயே கேரள மாநிலம் திருவனந்தபுரத்திற்குச் சென்று — சிக்கனமாக சென்று பிறகு அங்கு பேச்சுவார்த்தை நடத்தி— (குறுக்கீடு) எனக்குத் தெரியும். I know it. That is why I mentioned that word. அங்கே போயிருக்கிறார்கள். பத்திரிகையிலே பார்த்தால் என்ன செய்தி வந்திருக்கிறது என்றால், "Kerala and Tamil Nadu have reached a broad agreement on revising the Parambikulam - Aliar inter-State river water agreement by March."

ஆக, இரண்டு மாநிலங்களுக்கு இடையே நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிற ஒரு பிரச்சினையை இரு மாநில அமைச்சர்களும் உட்கார்ந்து பேசி முடிவெடுத்து விட்டார்கள். ஜேக்கப்— கேரளாவினுடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர், ஜாம்பவான். எனக்கு அவரைப் பற்றித் தெரியும். தமிழ்நாட்டின்மீது எவ்வளவு அக்கறை என்று எனக்குத் தெரியும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பார்த்துவிட்டு வந்திருக்கிறார். அவர் சொல்கிறார்— Jacob said "After the talks, the Kerala Minister for Water Resources Mr. T.M. Jacob and the Tamil Nadu Public Works Minister Mr. O. Panneerselvam told presspersons that the Chief Ministers' would meet in March to sign the





revised agreement. The meeting would be held either here or in Chennai. Jacob said progress was made in to-day's talks." என்று வந்தது. என்னென்ன தீர்த்து விட்டார்கள் என்று சொன்னதாகப் பார்த்தீர்கள் என்றால், ..Main issues of water release from Neerar Weir to Kerala. நீராரிலிருந்து கேரளாவிற்குத் தண்ணீர் போகும் பிரச்சினை தீர்ந்து விட்டது என்கிறார்கள்.

இந்த மன்றத்திலே நிறைய உறுப்பினர்கள் இருக்கிறார்கள். தலைவர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். பொதுவாக நதிகள் மேற்கே தொடங்கி கிழக்கே ஓடும். ஆனால், கிழக்கே தொடங்கி மேற்கே ஓடி அரபிக் கடலில் கலக்கிற நதிகள் உண்டு மலையிலும், சமவெளியிலும். மேல்நீராறு, கீழ் நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம், தூணக்கிடவு, பெருவாரி பள்ளம், ஆழியாறு, பாலாறு இந்த 8 ஆறுகள் கிழக்கே தோன்றி மேற்கே நோக்கி ஓடுகின்றன. பாலாறும், ஆழியாறும் பூமியிலே ஓடுகின்றன. மீதி இருக்கிற 6 ஆறுகள் மேலே ஓடுகின்றன. இந்த ஓடுகிற தண்ணீரைத் தடுத்து நிறுத்தி, மலையைக் குடைந்து, மறுபடியும் சமவெளிக்கு கொண்டு வருகிற ஒரு மகத்தான unique திட்டம் இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. நம்முடைய மகத்தான சாதனை அது. அந்த சாதனைத் திட்டத்திலே ஒரு திட்டம் என்னவென்றால், அந்த நீராறில் அக்டோபர் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து ஜனவரி மாதம் 31 ஆம் தேதி வரையில் வருகிற தண்ணீரை எல்லாம் கேரளாவிற்கே விட வேண்டுமென்று ஒரு விதி இருக்கிறது. நாம் கேட்கிறோம். அது எதுவரையில் விடலாம் என்றால், பெரியாற்றினுடைய துணை நதியாக இருக்கக்கூடிய இடைநிலை ஆற்றிலே கட்டுகிறார்களே, ஒரு Power Station, அது முடிகிற வரையிலே தர வேண்டும் என்கிறார்கள். ஆனால், நாம் கேட்பது முழுத் தண்ணீரை தமிழகத்திற்கே தர வேண்டும். பிறகு நல்லாற்றின் வழியாக திருமூர்த்தி அணைக்குக் கொண்டு வர வேண்டும் என்பதுதான் பரம்பிக்குளம் ஆழியாற்றினுடைய மிகப் பெரிய திட்டம்.

*பிற்பகல் 2-10*

இதிலே நான் கேட்க விரும்பவது இதுதான். நீங்கள் தமிழ்நாட்டின் நலனை மனதில் வைத்து, நல்லபடிகூட முடிவை எடுத்திருப்பீர்கள். ஆனால் எங்களுக்கு, என்ன முடிவு எடுத்தீர்கள் என்று தெரியவில்லை. நீராறு பிரச்சினை — அடுத்து என்ன? sharing of water பரம்பிக்குளம் பேசின். 14 டி.எம்.சி. வரையில் நமக்கு வர வேண்டும். 16-1/2 — 2-1/2 டி.எம்.சி. வந்தால் இரண்டு பேரும் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்

அதற்கு மேல் வந்தால் விட்டுவிட வேண்டும். இன்னும் நமக்கு அது ரீச்சே ஆகவில்லை. அதிலே ஷேர் முடிந்துவிட்டது என்று சொல்கிறார். மூன்றாவது சோலையாறு. சோலையாற்றில் நாம் வந்து 12.5 டி.எம்.சி.யை மெயின்டெயின் பண்ணிக் கொடுத்து இருக்க வேண்டும். பிப்ரவரி 1 ஆம் தேதியும் செப்டம்பர் 1 ஆம் தேதியும் எஃப்.ஆர். லெவலுக்கு வைத்திருக்க வேண்டும். ஆனால், நம்மாலே செப்டம்பர் 1 ஆம் தேதி வைக்க முடியும். பிப்ரவரி 1 ஆம் தேதி நம்மாலே வைக்க முடியாது. அந்த நிலைக்கு ஒத்துக் கொண்டிருக்கிறீர்களா என்பது தெரியவில்லை. எல்லாவற்றையும்விட கீழே என்ன சொல்கிறீர்கள்? கடைசியாகச் சொல்கிறீர்கள், Release of water from Manakadavur -- 7-1/4 டி.எம்.சி. கீழே மணக்கடவில் நாம் கொடுக்க வேண்டும். ஆனால், 12 டி.எம்.சி.—ஐ ஜேக்கப் கேட்டதாகவும், அதை நாங்கள் தருகிறோம் என்று நீங்கள் ஒத்துக்கொண்டதாகவும் செய்தி வந்திருக்கிறது. ஒத்துக்கொண்டீர்கள் என்று சொல்லவில்லை. நான் ஒன்று கேட்கிறேன். இவ்வளவு பெரிய திட்டம். கிட்டத்தட்ட 5 இலட்சம் விவசாயிகள் நம்பியிருக்கிற இந்தத் திட்டத்தை, நீங்கள் மறுபடியும் ஒரு agreement போடுவதற்கு முன்னால், இந்த அவையிலே இருக்கிற இந்த எதிர்க்கட்சித் தலைவர்களையாவது உட்கார வைத்து, எங்களை என்ன என்று கேட்டிருக்க வேண்டாமா? எங்களுக்கு, உங்களுக்கு யோசனை சொல்கிற அளவிற்கு அருகதை இல்லாவிட்டாலும், நீங்கள் எங்களுக்கு விஷயத்தைச் சொல்லி எங்களை அறிவுறுத்தக்கூடாதா? எங்களுக்குத்தான் ஒன்றும் தெரியாது. ஆகையினால் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** முடிந்து விட்டதா? முடித்துவிட்டீர்களா?

**திரு. துரைமுருகன்:** இல்லை. ஆகவே, அந்தத் திட்டத்தையும் விட்டுவிட்டால், மணக்கடவிலே என்ன சொல்வார்கள் என்று கேட்டால், தண்ணீர் சரியாக வந்து சேரவில்லை என்று சொல்வார்கள். இன்றைக்குச் சொல்கிறேன் நான் நிதியமைச்சரிடம். ஒன்று வைத்துக்கொள்ளுங்கள். 8 ஆண்டு காலம் இதை நான் தலைகீழ் மனப்பாடமாகப் படித்து வேலை செய்தவன். அவர்கள் என்ன செய்வார்கள்? இன்றைக்கு 500 கியூசெக்ஸ் நாம் விட்டோம் என்றால், 5 பர்சன்ட் குறைந்தது என்றால், அன்றைக்கு 500 கியூசெக்ஸ் எடுப்பார்கள். 7 பர்சன்ட், 8 பர்சன்ட் குறைந்தது என்றால், அன்றைக்குத் தண்ணீர் வந்த மாதிரியே எடுக்க மாட்டார்கள். இதை ரொம்ப deep ஆக, அந்த Technical Officers-களோடு பேசியிருக்க வேண்டும். நம்முடைய இன்ஜினியர்களை நான்



குறைத்து மதிப்பிடக்கூடியவன் அல்ல. எனவே, இந்தத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றுவதற்கு முன்னால், கோவை மாவட்டத்திலே இதை நம்பியிருக்கிற, கோடானுகோடி விவசாயிகள் நம்பியிருக்கிற பிரச்சினையில் ஏனோதானோ என்று நீங்கள் இருந்திருக்கக் கூடாது. இந்த அவையிலே இதைத் தெரிவித்திருக்க வேண்டும். அப்போதுதான் பாலசுப்பிரமணியமோ, மற்றவர்களோ இதுகுறித்துப் பேசியிருக்க முடியும். எனவே, இதை ஏன் நீங்கள் தெரிவிக்கவில்லை என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அமைச்சர் மாண்புமிகு ஜேக்கப் அவர்கள் கூறியதாக பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதையெல்லாம் பேசுவது சரியல்ல. சோலையாறினுடைய இரு மாநில பேச்சுவார்த்தையாக இருந்தாலும் சரி, பரம்பிக்குளத்தினுடைய இரு மாநில பேச்சுவார்த்தையாக இருந்தாலும் சரி, நீராறு பேச்சுவார்த்தையாக இருந்தாலும் சரி, பேச்சுவார்த்தை என்ற அளவில்தான் இவை இன்னும் இருக்கின்றன. அந்த அறிக்கை தமிழக அரசு கொடுத்த அறிக்கை அல்ல. கேரள அரசின் சார்பிலே கேரள அமைச்சர் கொடுத்து இருப்பதை, நீங்கள், அதுதான் தமிழக அரசினுடைய நிலை என்று—அவர் என்ன பேசினார் என்பதை அவர் கூறியிருக்கலாம். ஆனால், அப்படி அல்ல. மணக்கடவைப் பொறுத்தவரைக்கும் அவர் கூறியிருப்பதைப்போல தண்ணீர் தருவதற்கு நாம் ஒத்துக்கொள்ளவில்லை. மணக்கடவை பொறுத்தவரைக்கும் அங்கே there is no Regulator. ஒரு Regulator—தடுப்பணை போட்டால் நமக்கு எவ்வளவு இலாபம் என்பது மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்குத் தெரியாத ஒன்றல்ல.

தமிழ்நாட்டுக்கு தமிழக விவசாயிகளுக்கு எவ்வளவு பலனைத் தரமுடியுமோ அந்த அளவிற்குப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்திற்கு முழுக்க, முழுக்க சாதகமாக அது அமையும். முதலமைச்சர்கள் சந்திப்பதற்கு முன்னால், இன்னும் ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது. அவர்கள் கூறியிருப்பதைப் போலவோ, அல்லது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூறியிருப்பதைப் போலவோ எந்த ஒன்றும் அதிலே உண்மையானது அல்ல என்பதைத் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஜேக்கப் சொன்னதை வேதவாக்காக எடுத்துக்கொண்டு பேசுகிறவன் அல்ல

ஆனால், எனக்கு வேறு செய்தி தெரியவில்லையே? ஒரு எதிர்கட்சிக்கு நீங்கள் ஒரு நோட் அனுப்பியிருந்தாலும் அல்லது அதிலே நீங்கள் குறிப்பிட்டிருந்தாலும்—அதிலே நீங்கள் சொல்லியிருந்தால் பரவாயில்லை. ஆகவே, இப்போதும் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. என்ன பேசப்பட்டது? அதிலே இப்படியொரு condition போடுவார்கள்; அதாவது, நம்முடைய demand என்ன? அவர்களுடைய demand என்ன? என்ன ஒத்துக்கொண்டோம்? என்ன போட வேண்டும் என்று அவரிடமே ஒரு நோட் இருக்கும். அதை எடுத்துப் பார்த்து, அதேமாதிரி atleast எங்களுக்கு, எதிர்க்கட்சிகளுக்காவது தர வேண்டாமா? அப்படித் தந்திருந்தால் நான் ஏன் ஜேக்கப்பிடம் போகிறேன்? நீங்கள் விஷயம் கொடுக்காததாலே இப்படியெல்லாம் news paper-களிலேயிருந்து collect பண்ண வேண்டியதாக இருக்கிறது என் நிலைமை (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். என்ன பேசவேண்டுமோ, பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே ஒரு முக்கியமான பிரச்சினை. கேரளத்திலேயிருந்து அண்மையிலே அக்டோபர் மாதத்திலேயிருந்து, ஜனவரி 31 முடிய நீராறிலே இருக்கிற தண்ணீர் அனைத்தையும் நாம் கொடுத்துவிட வேண்டும். அதிலே கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால், இப்போது சொல்வது, குறைந்தபட்சம் ஒவ்வொரு ஆண்டும் அந்தக் காலகட்டத்தில் 6 டி.எம்.சி. தண்ணீரை நாம் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த மாதிரி எந்த ஒப்பந்தமும் கிடையாது. தமிழக அரசு எந்தவகையிலும் அதிலே விட்டுக் கொடுத்துவிடக் கூடாது. காரணம் அதிலேயிருந்து 6 டி.எம்.சி. என்று சொன்னால், சோலையாற்றிலேயிருந்து அல்லது வேறு எங்கேயாவது எடுக்க வேண்டிய நிலை ஏற்படும். கண்டிப்பாக தமிழக அரசு அதிலே விட்டுக்கொடுக்கக் கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 2-15*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற ஒப்பந்தத்தில் பிப்ரவரி மாதம் வரை, அந்த நிலை, that should be maintained என்று இருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கூறியதைப்போல summer season-ல் அதைப் பண்ண முடியாது. அதை மிகவும் தெளிவாகத் தெளிவுப்படுத்தியிருக்கிறோம். அவர்கள் வற்புறுத்துகிறார்கள். காரணம் அவர்களுக்கு மின் உற்பத்தி குறைந்துவிடும் என்பதற்காக அதை அவர்கள் வற்புறுத்துகிறார்கள். மணக்கடவை நீங்கள் எடுத்துக்கொண்டால் தண்ணீர் ஓடிவிடுகிறது. அங்கே தடுப்பு இல்லை, regulator இல்லை. அவர்களுக்குத் தரவேண்டியது 7.5 ஆக இருந்தாலுங்கூட, சில நேரம் 8, 9, 10 என்றுகூட போய்விடுகிறது. அதை நாம் தடுத்தாக வேண்டும். இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகின்ற நேரத்தில் நமக்கு அதிகப்படியான பலன் கிடைக்கும். அந்த அளவுக்கு நாங்கள் எச்சரிக்கையாக இருக்கிறோம். நாங்கள் வெற்றியும் பெறுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவும் நான் 'இந்து' பத்திரிகையைப் பற்றி பேசியதால்தான் வெளியே வந்திருக்கிறது, இல்லையென்றால் வந்திருக்காது. போகட்டும்.

அடுத்து, நான் காவிரியைப் பற்றி பேசப்போவதில்லை. ஏனென்றால் நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். ஏனென்றால், இந்த அவையிலே, காவிரியைப் பொறுத்தவரையில் சரியாகச் செய்யவில்லை என்று நீங்கள் எங்களைச் சொல்லுகிறீர்கள், உடனே நாங்கள் சரியாகச் செய்தோம் என்று சொல்லுகிறோம். பிறகு நீ யோக்கியன், நான் யோக்கியன் என்று பேசுகிறோம். இதை சில பேர் லாவணி செய்துகொள்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் எங்கள் மேல் குற்றம் சொன்னால் பேசாமல் ஒத்துக்கொள்ள முடியுமா? இல்லை, அவர்கள் மேல் குற்றம் சொன்னால் அவர்கள் பேசாமல் உட்கார்ந்து இருப்பார்களா? பதில் tit for tat அடிக்கமாட்டார்களா அரசியலிலே? அதை லாவணி என்று சொன்னால் எப்படி? அதனால், அந்த லாவணி என்று சொல்கிறதை நான் கண்டிக்கிறவன். அவர்களும் சொல்கிறார்கள், நாங்களும் சொல்கிறோம், அது வேறு விஷயம். ஆனால் இன்றைக்கு நான் ஒரு கருத்தைச் சொல்லப் போகிறேன். என்னவென்று கேட்டால்—இது தவிர இன்னொன்று—இன்னொரு பத்திரிகை. அதுவும் நீங்கள் சொல்லவில்லை. கேட்டால், பத்திரிகைதானே என்று கேட்கலாம்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் லாவணி என்று சொல்லவில்லை. சொல்லாத வார்த்தையைச் சொன்னார். (குறுக்கீடு) இல்லை அவர் சொன்னார். (குறுக்கீடு) இல்லை, அமைச்சர் சொன்னதைச் சொல்கிறேன் நான். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் சொன்னதை நான் மறுக்கிறேன். அப்படி நான் சொல்லவில்லை. அதுமாதிரி சொல்லவில்லை.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொல்லவில்லை, சொல்லவில்லை, சொல்லவேயில்லை.

பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியில் இன்னொன்று என்ன என்று கேட்டால்—இந்தப் பிரச்சினையை இதோடு முடியுங்கள்; பிறகு பார்க்கலாம். நான் அதைப் பேசினால் நேரம் ஆகிவிடும் இப்போது ஒரு பயங்கரமான செய்தி. அதை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள்கூட ஓட ஓடச் சொன்னார்கள். இப்போது 11.20 இலட்சம் ஏக்கர்தான் according to the interim order அவர்கள் பயிர் பண்ணலாம். ஆனால் 1500 கோடி ரூபாயில் 50 காவிரிப் பாசனத் திட்டங்களை விரிவுபடுத்துவதற்காக, கிட்டத்தட்ட, 2.17 இலட்சம் எக்டேர் நிலத்தை அவர்கள் இப்போது பயிராக்கப் போகிறார்கள். அப்படியானால், காவிரியில் தண்ணீர் என்பதே கனவாகி, பொய்யாய், பழங்கதையாய்ப் போய்விடும். நான் கேட்கிறேன் இந்த ஆட்சியை, இந்தச் செய்தி வந்ததற்குப் பிறகு நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன? கடிதம் எழுதியிருந்தால் சொல்லுங்கள், மத்திய அரசுக்குத் தெரிவித்திருந்தால் சொல்லுங்கள், வழக்குமன்றத்திற்குப் போயிருந்தால் சொல்லுங்கள், எதிர்க்கட்சிகளைக் கூப்பிட்டு என்ன செய்யலாம் என்று கேட்டிருந்தால் சொல்லுங்கள். இவ்வளவு பெரிய பயங்கரமான செய்தி வந்த பின்னும் பேசாமல் இருக்கிறீர்களே, நான் சொல்கிற வரையில். இதையாவது நீங்கள் இந்த கவர்னர் உரையிலே சொல்லக்கூடாதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத்தான் இந்தச் செய்தி ஒரு புதுச் செய்தி, இவ்வளவு காலம் எப்படி நீங்கள் தெரியாமல் இருந்தீர்கள் என்று புரியவில்லை. நீங்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த காலத்திலேயே கர்நாடக அரசு இப்படி catchment area -விலிருந்து—நான் ஏற்கெனவே சொன்னதுபோல—கபினிக்கு, ஹேரங்கிக்கு, காவிரிக்கு அந்த ஆறுகளுக்கு வரக்கூடிய தண்ணீரை, ஆற்றுக்கு வந்தால்தான் காவிரி அக்ரிமெண்டில் வந்துவிடுகிறது என்ற காரணத்தால், மிகவும் தந்திரமாக catchment area-விலிருந்து கபினிக்கோ, காவிரிக்கோ, ஹேரங்கி, ஹேமாவதி ஆறுகளுக்கோ அந்தத் தண்ணீரே போகாமல், மலையிலிருந்து தண்ணீர் வருகிறபோது சிறிய தடுப்புச் சுவரை இரண்டு அடி உயரத்தில், 1/2 கிலோ மீட்டர் தூரத்திற்குப் போடுகிறார்கள். அங்கு வருகின்ற தண்ணீர் எல்லாம் தடுக்கப்பட்டு, பக்கத்து ஊருக்குச் செல்கிறது. அங்கே இருக்கிற 5 ஏக்கர், 10 ஏக்கர் உள்ள ஏரி, குளத்தை, 15 ஏக்கர், 20 ஏக்கர் உள்ள குளமாக, 20 அடி, 30 அடி, 40 அடி என்ற பெரிய ஏரிகளாக மாற்றுகிறார்கள். அந்த ஏரி நிரம்பி அடுத்த ஊருக்குப் போகிறது. இப்படி ஓராண்டு, ஈராண்டு அல்ல, கடந்த பல ஆண்டுகளாகவே,



சதித் திட்டமாக, மைய அரசினுடைய விதிமுறைகளை எல்லாம் மீறி கர்நாடக அரசு செய்துகொண்டு வருகிற காரணத்தால்தான், படிப்படியாக காவிரியிலே கரை புரண்டு வந்த தண்ணீர் இப்போது இல்லாமல் வற்றிய காவிரியாக இருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரையில், 5 இலட்சம் ஏக்கர் என்ற நிலையை இன்று 21 இலட்சம் ஏக்கர் என்ற முறையிலே அவர்கள் விஸ்தரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், ஹேமாவதி அணையைப் பெரிதாக்கி அல்ல, ஹேரங்கி அணையைப் பெரிதாக்கி அல்ல, கபினி அணையைப் பெரிதாக்கி அல்ல, கிருஷ்ணராஜசாகர் அணையைப் பெரிதாக்கி அல்ல. ஆங்காங்கே catchment area-விலிருந்து தண்ணீரைத் தடுத்து இந்த சதித் திட்டத்தைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதனால்தான் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று இருக்கிறோம். இதை நாங்கள்—மாநில அரசு—தீர்ப்பாயத்திற்கு எடுத்து வைத்திருக்கிறோம். உச்ச நீதிமன்றத்திலும் இதைத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின் அடிப்படையில் தீர்ப்பாயத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் கர்நாடக அரசு, விதிகளை மீறி, சட்டத்தை மீறி இப்படிச் செய்கின்ற இந்த அட்டூழியங்களை நாங்கள் எடுத்து வைத்திருக்கின்றோம்.

*பிற்பகல் 2-20*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகம் தனக்கு பாத்தியப்பட்டதற்கு மேல் செய்வது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அல்ல. அதற்கு முன்னாலே இருந்துகூட செய்துகொண்டிருக்கிறது. ஆனால் ஒரு வித்தியாசம் (குறுக்கீடுகள்) என்னவென்றால் மறைமுகமாக தெரிந்தும் தெரியாமலும் முக்காடு போட்டுக்கொண்டு வந்தான். இப்பொழுது முக்காடு போட்டு administrative sanction கொடுத்து இருக்கிறான். ஆகையினாலேதான் இப்பொழுது சொல்கிறேன் வெளிப்படையாக legal action-ஐ இப்பொழுதுதான் எடுக்க முடியும். ஆனால் legal action-ஐ நாம் பண்ணவேண்டுமென்றார். நீங்கள் செய்ததை இந்த அறிக்கையில் சொல்லியிருந்தால் இந்தப் பிரச்சினை இல்லை. எனவே, அது ஒன்று.

இறுதியாக பேசி முடித்து விடுகிறேன், இரண்டு நிமிடத்திலே. குறுகிய காலத்திலே இந்த வியக்கத்தக்க ஈடு, இணையற்ற சாதனையைப் படைத்த பெருமை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களையே சாரும் என்று பாராட்டி, பாரா 30-லே சொல்லியிருக்கிறீர்கள். ஈடு இணையற்ற சாதனை. இந்த மூன்று ஆண்டு

[திரு. துரைமுருகன்] [2004 பிப்ரவரி 9

காலத்தில் காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு இருக்கிறதா? முல்லைப் பெரியாறு பிரச்சினைக்கு முடிவு வந்திருக்கிறதா? ஆந்திரத்து கிருஷ்ணா நீர் தமிழ்நாட்டிலே ஆலோலம் பாடுகிறதா! வீராணத்துத் தண்ணீர் சென்னையிலே குடிநீராகி தண்ணீரை சீராக்கியிருக்கிறதா? தென் இந்திய தமிழகம் இந்தியாவிலேயே Detroit-ஆக Manchester-ஆக மாறி இருக்கிறதா? சாலைகள் எல்லாம் வாலைக் குமரியின் கன்னம்போல் காட்சியளிக்கிறதா? வேலையில்லாத மக்கள், வீடு இல்லாத குடும்பம், உணவு இல்லாத ஜீவன் நாட்டில், தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலை உருவாகிவிட்டுருக்கின்றதா? கள்வரும் இல்லை, காவலரும் இல்லை என்று கம்பன் பாடியதைப் போலவா நாடு இருக்கிறது? எனவே, பணியையிழந்த 10,000 சாலைப் பணியாளர்கள், வேலையைவிட்டு விரட்டப்பட்ட 13,000 மக்கள் நலப் பணியாளர்கள், குமுறுகிற அரசு அலுவலர்கள், விழியிலே நீர் கொட்டிய நிலைதானே சாதனையாக இருக்கிறது? சொல்லலாம் நீங்கள். எல்லாம் சொல்கிறாயே துரைமுருகன். ஒரு ஆண்டவன், மந்திரியாக இருந்தவன், ஒரு ஆக்கபூர்வமான யோசனையை சொல்லக்கூடாதா என்றால், சொல்லுவது எதர்க்கட்சியினுடைய கடமை.

தலைவர் அவர்களே, இந்த ஆட்சி, எல்லாப் பத்தியையும் படித்தால், சிக்கனத்தை மேற்கொண்டு, நிதிநிலையைச் சீராக்கி, இன்றைக்கு வந்திருக்கிறோம். நல்ல முறையிலே எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டு வருகிறோம் என்று சொல்கிறார்கள். அதுகுறித்து அவர்கள் சொல்வதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதில் ஒன்றும் மறுப்பு இல்லை. ஆனால் இன்னும் இநத ஆட்சிக்கு ஆயிரம் கோடி. ரூபாய், 1500 கோடி ரூபாய் உங்களுக்கு இலாபம் வருகின்ற ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். என்னவென்று கேட்டால், ஒரு தேர்தல் என்று சொன்னால், சாதாரணமாக இப்பொழுது ஆயிரம் கோடி, 1500 கோடி ஆகும் என்கிறார்கள். நான் இப்பொழுது சொல்கிறேன் நாளை மறுநாள் நம்முடைய Vote on Account-க்கு பட்ஜெட் போட்டிருக்கிறார்கள். அங்கேதான் ஆட்சியைக் கலைத்தார்கள். அவர்கள் போட்டார்கள். இங்கே ஆட்சியைக் கலைக்கவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், ஆயிரம் கோடி தமிழ்நாட்டிலே தேர்தலுக்கு மிச்சம் ஆகுமென்று சொன்னால், அடுத்த இரண்டு ஆண்டுக்குப் பிறகு தேர்தல் வருவதை இப்பொழுதே இந்த சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு, நீங்கள் தேர்தலுக்குத் தயாரானால் 1500 கோடி ரூபாய் தமிழ்நாட்டுக்கு மிச்சமாகும். அந்த நல்ல யோசனையைச் சொல்லியிருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



2004 பிப்ரவரி 9]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சாதனையைச் செய்திருக்கிறீர்களா, செய்திருக்கிறீர்களா என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டார். Detroit-ஆக மாற்றி விட்டீர்களா என்று கேட்டார். புரியவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கோ, அல்லது அவருடைய இயக்கத்திற்கோ ஏன் பார்வை தெரியாமல் போய்விட்டது என்று புரியவில்லை. ஹூண்டாய் இங்கே இருக்கிறது. ஃபோர்டு இங்கே இருக்கிறது. அகில உலகத்திற்கே அனுப்பவேண்டிய கார்களை எல்லாம் ஃபோர்டு நிறுவனம் இந்தியாவிலே தமிழகத்திலே செய்வதற்கு முன்வந்து அதைத் தொடங்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட நிலை இருக்கின்றபோது, இது இருக்கின்றதா, இருக்கின்றதா என்று கேட்டார். அவை எல்லாம் இங்கே இருக்கின்றன, இருக்கின்றன, இருக்கின்றன. தமிழ்நாடு பிற மாநிலங்களைவிட முன்னிலையில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 49,000 கோடி ரூபாய் முதலீட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்கள், உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து கொண்டுவந்து தமிழ்நாட்டை வளமிக்க மாநிலமாக மாற்றியிருக்கிறார், மாற்றியிருக்கிறார் எனக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10-2-2004) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-24 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

31. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

32. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி எட்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ, பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

[2004 பிப்ரவரி 9

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*8.* பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்தி எட்டாவது அறிக்கை. *(2003-2004)*

*9.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பதி ஐந்தாவது அறிக்கை. *(2003-2004)*

*10.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்தி ஆறாவது அறிக்கை. *(2003-2004)*

*11.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்தி ஏழாவது அறிக்கை. *(2003-2004)*

*12.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்தி எட்டாவது அறிக்கை. *(2003-2004)*

*13.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்தி ஒன்பதாவது அறிக்கை. *(2003-2004)*

*14.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பதாவது அறிக்கை. *(2003-2004)*

*15.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்தி ஒன்றாவது அறிக்கை. *(2003-2004)*

---

D
V211,31'p04
P96.56.1

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226057
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.